இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56 + 2

சுடர் 32 | கதிர் 113 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 06, ஞாயிற்றுக்கிழமை 19.03.2017

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
UK லண்டன்
550/-
Parcel.lk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

## அரசமைப்பு உருவாகும் வாக்கெடுப்பும் நடக்கும்

கூறுகிறார் அமைச்சர் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 19
"புதிய அரசமைப்புத் தான் உருவாக்கப்படும். பொது வாக்கெடுப்பும் நடத்தப்படும். அவ்வாறு செய்யாமல் சிறந்த அரசமைப்பை உருவாக்கியும் பயனில்லை."
இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். >> 52

## படையினரைத் தண்டிக்க ஒருபோதும் இடமளியோம்

தலைமை அமைச்சரும் சூளுரை



கொழும்பு, மார்ச் 19
"பாதுகாப்புத் தரப்பினரை எந்தவொரு சூழ்நிலையிலும் நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களைத் தண்டிக்க இடமளிக்கப்படமாட்டாது."
இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சரும் சூளுரைத்துள்ளார்.
கொழும்பில் நேற்று >> 52

பன்னாட்டுச் சமூகத்துக்குப் போக்குக் காட்டிய

## மகிந்தவுக்கு நடந்ததை நினைவில் வையுங்கள்

அரசை எச்சரிக்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், மார்ச் 19
"பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதி வழங்கிவிட்டுப் பின்னர் போக்குக் காட்டிய மகிந்தவுக்கு நடந்த கதியை இந்த அரசு நினைவில் வைத்திருக்கவேண்டும். இதனை மனதிலிருத்தியாவது சரியாகச் செயற்பட வேண்டும். வெளிநாட்டு நீதிபதிகளைப் போர்க்குற்ற விசாரணையில் ஈடுபடுத்தவேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந் >> 52



எல்லா நிலுவையும் ஐயாவுக்கு இலட்சக்கணக்கிலதான் இருக்குது பாருங்கோ...

# தீர்மானத்தை அரசு செயற்படுத்தாவிடில் ஐ.நாவே அதற்கு முழுப் பொறுப்பும்

கூட்டமைப்பின் முடிவு அதுவே என்கிறார் தலைவர் சம்பந்தன்



யாழ்ப்பாணம், மார்ச் 19
போர்க்குற்ற விசாரணைக்கான நீதிமன்றப் பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசு கூறிக் கொண்டிருப்பதைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இலங்கை அரசு ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்டவற்றை நடைமுறைப் படுத்த ஒத்துழைக்கவில்லையாயின், >> 52

## ஐ.நாவில் நாளை செயலணி அறிக்கை மீது விவாதம்

ஜெனிவா, மார்ச் 19
கலப்பு நீதிமன்றப் பொறிமுறையைப் பரிந்துரைத்திருந்த நல்லிணக்க கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை மீதான விவாதம் ஜெனிவாவில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
2015ஆம் ஆண்டு ஐ.நாவில் இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொதுமக்கள் கருத்தறியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நல்லிணக்கக் கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத் >> 52

வாள்வெட்டுக் குற்றச்சாட்டு;

## தலைமறைவாகியிருந்த மூவர் கொழும்பில் கைது

யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணத்தில் பலரை வெட்டிச் சரித்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுத் தேடப்பட்டு வந்தபோது தலைமறைவாகியிருந்த சமூக விரோதிகளாக அடையாளப்படுத்தப்படும் 3 பேர் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் >> 52

## பேருந்து தரிப்பிடத்தை வாகனம் மோதியதால் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 19
பேருந்து தரிப்பிடத்தை வாகனம் மோதியதால், அந்த தரிப்பிடத்தில் நின்றிருந்த 3 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பேருந்தும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதிய >> 52



## கிழக்கை வாட்டும் டெங்கு மற்றுமொரு சிறுமியும் சாவு

மட்டக்களப்பு, மார்ச் 19
டெங்குக் காய்ச்சலினால் கிழக்கு மாகாணத்தில் மற்றுமொரு சிறுமியும் உயிரிழந்துள்ளார். பாத்திமா ஹஸீதா (வயது-9) என்ற சிறுமி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துக் >> 52

## இலங்கைத்தூதரகத்தை முற்றுகையிட முயன்ற வைகோ நேற்றுக் கைது



சென்னை, மார்ச் 19
இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா செயற்படக் கூடாது என்று வலியுறுத்தி, கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோபாலசாமி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை ம.தி.மு.க.வினர் முற்றுகையிடப் போவதாக வைகோ அறிவித்திருந்தார். இதற்குப் பொலிஸார் அனுமதி கொடுக்க வில்லை. தடையை மீறிப் போராட்டம் நடத்துவதற்கு வள்ளுவர் கோட்டம் அருகே ம.தி.மு.க.வினர் திரண்டனர். வைகோ >> 52

கூட்டுறவுச் சங்கக் கட்டடத்துக்கு

## 11 இலட்சம் ரூபா வாடகை செலுத்தவில்லை ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 19
கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கட்டடங்களை வருடக் கணக்கில் பயன்படுத்தி அதற்கான வாடகைப் பணமான 11 லட்சத்தை ஈ.பி.டி.பி. செலுத்தவில்லை.
இவ்வாறு யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கத்தினரால் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.
இது தொடர்பில் விசாரித்தே பதிலளிக்க முடியும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே >> 52

## இந்திய வியாபாரியான கைதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இந்திய வியாபாரி, சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்று தப்பியோடி >> 52



## ரூபா 8 லட்சம் பெறுமதியான நகைகளுடன் மூவர் சிக்கினர்

பல்வேறு திருட்டுக்களில் தொடர்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டதோடு 8 லட்சம் ரூபா பெறும் >> 52



# காணாமற்போன குடும்பத் தலைவர் நேற்றுக் கிணற்றில் சடலமாக மீட்பு

வவுனியா, மார்ச் 19

**கடந்த 3 நாள்களாகக் காணாமற் போயுள்ளதாகத் தேடப்பட்டு வந்த குடும்பத் தலைவர் நேற்றுக் காலை கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.**

வவுனியா நெடுங்கேணி பழைய மாமடுப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ஜெயபாலன் தர்மசீலன் (வயது 34) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த வியாழக்கிழமை முதல் குறித்த நபரைக் காணவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் அவர் வீடு திரும்பாததை அடுத்து அனைத்து இடங்களிலும் உறவினர்கள் தேடியுள்ளனர். தகவல் கிடைக்கவில்லை.

சந்தேகத்தில் நேற்று மாலை வீட்டுக் கிணற்றில் தேடியபோது அங்கு அவரது சடலம் இருப்பது தெரியவந்தது. நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் வவுனியா மாவட்ட பதில் நீதவானின் உத்தரவுக்கு அமைய சடலத்தை மீட்டனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-21)

# பன்னங்கண்டி மக்களுக்காக தன் காணியை விட்டுக்கொடுத்தார் முன்னாள் சட்டமா அதிபர்

## கைவிடப்பட்டது போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி, பன்னங்கண்டி மக்களின் கோரிக்கையை அடுத்துத் தனது 36 ஏக்கர் உறுதிக் காணியை அந்த மக்களுக்கு இலவசமாக வழங்க முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி முன்வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து மக்கள் தொடர் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பன்னாங்கண்டிக் கிராமத்தில் விடுதலைப் புலிகளால் 65 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணியில் கடந்த 27 வருடங்களாக அந்த மக்கள் குடியிருந்தனர். இறுதி இடப்பெயர்வின்போது அவர்களது வாழ்விடங்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் மீண்டும் அங்கு குடியேறினர்.

இவர்களுக்குச் சொந்த நிலம் இல்லாதமையால் அரச வீட்டுத் திட்டங்கள் எவையும் வழங்கப்பட முடியாத நிலை இருந்து வந்தது. இந்தக் காணி தொடர்பில் பிரதேச செயலகம் ஊடாக ஆராயப்பட்டது. அது அரச காணியோ அல்லது அனுமதிப் பத்திரக் காணியோ அல்ல எனக் கண்டறியப்பட்டது.

இதனால் இந்த மக்களுக்குக் காணியைப் பெற்றுக் கொடுக்க முடியாமல் பிரதேச செயலகம், அரச செயலகம் ஆகியன சிரமப்பட்டன.

இந்த நிலையிலேயே பன்னங்கண்டி மக்கள் காணி அனுமதிப் பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரி தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

காணிக்கு உரித்துடைய முன்னாள் சட்டமா அதிபரான சிவா பசுபதியின் மகளான மருத்துவர் மாலதி வரன், காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி யோசுவா ஆகியோர் மக்களிடம் சென்று நிலமைகளைக் கேட்டறிந்தனர். இதனைக் காணிக்கு உரித்துடைய முன்னாள் சட்டமா அதிபரான சிவா பசுபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மருத்துவர் மாலதி வரன் மக்களிடம் கூறியிருந்தார்.

எனினும் மக்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். நேற்று 15 ஆவது நாளாகவும் போராட்டம் இடம்பெற்றது. இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த மருத்துவர் மாலதி வரன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி யோசுவா ஆகியோர் மக்களிடம் கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த மக்கள் கடந்த 1990 ஆண்டு முதல் குடியிருந்த காணிகளை அவர்களுக்கே வழங்குவதற்குத் தீர்மானிக்கபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நில உரிமையாளரான முன்னாள் சட்டமா அதிபரான சிவா பசுபதி குறித்த தனது உறுதிக் காணியை அங்குக் குடியிருப்பவர்களுக்கே இலவசமாக வழங்க முன்வந்துள்ளார். இதன் பிரகாரம் அந்த நிலத்துக்கான உறுதி மற்றும் வரைபடங்கள் என்பன அரச செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் குறித்த காணி அளவீடு செய்யப்பட்டு 1990 ஆண்டு முதல் குடியிருந்த 65 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

குறித்த காணி எனது அப்பா, சித்தப்பா உள்ளிட்ட ஏழு பேருக்கு சொந்தமானது. நான் கிளிநொச்சி காவேரி கலாமன்றத்துக்கு வேறு விடயம் ஒன்றுக்காக வந்தபோது இதனை அருட்தந்தை யோசுவா எனது கவனத்துக்குக் கொண்டு வந்தார். நாங்கள் அங்கு சென்று மக்களின் நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் எனது உறவினர்களுடன் பேசி இணக்கத்துக்கு வந்துள்ளோம். மக்களுக்கு காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மாவட்ட செயலாளர் ஊடாக மேற்கொண்டுள்ளோம் என மருத்துவர் மாலதி வரன் தெரிவித்தார்.

இதனை அடுத்து பன்னங்கண்டி மக்களின் போராட்டமும் முடிவுக்கு வந்தது.

(த-21-101)

# சங்கடகட

வெளியால போயிட்டு வாசல்ல வந்து இறங்கினன். மகள் வாசல்ல நின்று "என்னை ஒருக்கா பிள்ளையார் கோவில்ல விடுங்கோ. நெய்விளக்கேற்ற வேணும்" என்றாள். என்ன "விசேசம்" என்றன். "உங்களுக்கு பேப்பரோட திரியிறதத்தவிர வேறஒன்றும் தெரியாது. இன்றைக்கு சங்கடகர சதுர்த்தி. நெய்விளக்கேற்றினா சங்கடம் எல்லாம் தீருமாம். அது தான் ஒழுங்காப்போறனான். நேரம் போயிட்டுது கொண்டு போய் விடுங்கோ" என்று என்ர மோட்டார் சைக்கிள்ள ஏறி இருந்திட்டாள்.

அது என்ர பாரத்தை மட்டும்தான் இழுக்கும். ஒருமாதிரி முக்கித்தக்கி இழுத்து, அங்க கொண்டு போய் விட்டுட்டு வந்திட்டன். "தமிழரின்ர சங்கடமும் நீங்க வேணும் என்று கும்பிடு பிள்ளை" என்றுபோட்டு மோட்டார் சைக்கிள எடுக்க அவள், "மூஞ்சூறு தான் போகக் காணேல்லையாம் விளக்குமாத்தையும் கொண்டு போன கதையாக்கிடக்கு" என்று சொல்லிக் கொண்டு கோயில் கிணத்தடிப்பக்கமாப் போயிட்டாள்.

தமிழரின்ர சங்கடம் என்னென்று நீங்கும். நீ பிடி நான் பிடி சண்டையிலயே எல்லாம் போகுது பாருங்கோ. போன கிழமை வெளிநாட்டிலயிருந்து வந்தவர் சொன்னார் எல்லா நாடுகளும் சொல்லுகினமாம் இந்த அரசைப் பாதுகாக்கவேணுமென்று. அமெரிக்காக்காரன் அதுக்கென்று கன காசு ஒதுக்கிறானாம். மக்களை இந்த அரசிலயிருந்து தூரப்போகா மல் இருக்கிறதுக்காக காசைக் கொட்டப்போறாங்களாம். இதுக்கென்று அமெரிக்க நிறுவனங்கள் கணக்க கள ஆய்வு செய்யஓடிவருகினமாம். அதிலமுக்கியமானது சிவில் அமைப்புக்களைப் பாதுகாக்கிறது. அரசைப் புகழ்ந்து பாடுறதுக்காக அதுகளத் தயார்ப்படுத்திறதுதான் நோக்கம்.

எல்லாத்துக்கும் முதல்ல மீடியாக்காரரப் பிடிச்சால் வேலை ஈசிதானே பாருங்கோ!அப்ப அவையள்தான் அடுத்த டார்க்கெட்டாம்.

இந்தியாவில 'கவர்' குடுக்கிற கல்ச்சர் இருக்கிறது தெரியும்தானே! அங்க ஏதாவது செய்தியாளர் சந்திப்புக்குக் கூப்பிட்டா அது முடிய எல்லாச் செய்தியாளர்களுக்கும் ஒரு என்வலப் குடுப்பினம். அதுக்குள்ள காசு இருக்கும். இந்தியாவில என்வலப்ப கவர் என்று சொல்லுறதால கவரின்ர கனத்தப் பொறுத்துத்தான் அடுத்த நாள் மீடியாக்களில செய்தி வருமா இல்லையா என்பது எல்லாம் தீர்மானிக்கப்படுமாம்.

மெல்ல மெல்ல அது இலங்கையிலயும் பரவுதாம். இஞ்ச அதை பிறவுன் கவர் என்று சொல்லுகினம். வடக்கில மாகாண சபை அமைச்சர் ஒருத்தர் சில மீடியாக்களுக்கும் மீடியாக்காரருக்கும் வீடியோக் கமரா, ஸ்ரில் கமரா என்று வாங்கிக் கொடுத்திருக்கிறாராம் என்று மாகாண சபைக்காரரே சொல்லித்திரியினம். அவர் தன்ர நிகழ்ச்சிகளுக்கு சொன்னா உடன அந்த மீடியாக்காரர் கரணம் போட்டு நிப்பினமாம். இதுவும் ஒருவகையில கவர் கதை மாதிரித்தானே!

இதுகளை எல்லாம் நோட் பண்ணிப் போட்டோ என்னமோ அமெரிக்காக்காரனும் மீடியாக்காரருக்காக ஒரு தொகை பணத்தை செலவிடப்போறாங்களாம். எந்தெந்தக் குடும்பியப்பிடிச்சா என்ன நடக்குமென்று அவங்களுக்கு வடிவாத் தெரியும் தானே.

உந்த விடயங்களை கேட்டு குழப்பத்தில இருந்த என்னை, அமெரிக்காக்காரன் வாரான் மீடியாக்காரரரை சந்திக்கப் போறானாம் அப்புச்சி போறியோ என்று பேப்பர்காரர் கேட்டாங்கள். சரி! என்ன விண்ணாணம் சொல்லுறாங்கள் கேட்பம் என்று போட்டு அங்க போனன். அங்க அவனும் இந்த அரசு நல்ல அரசு, நல்ல விசயங்கள் நடக்குது. அதுகளை மக்களிட்ட எடுத்துக்கொண்டுபோகவேணும் என்று அடுக்குறான்.

தமிழரைப் பொறுத்தமட்டில இருமல் கிழவி போய் தும்மல் கிழவி வந்திருக்கு அவ்வளவு தான். மகிந்த இருமல் கிழவியென்றா மைத்திரி தும்மல்கிழவி. இவையளைத் திறமென்று சொல்ல என்ன இருக்கு? ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கோ பார்ப்பம் என்டன் நான்.

சில விசயங்கள் தெளிவாத் தெரியுதாம் என்றான் அவன். தேசிய கீதத்தை இரண்டு மொழியிலயும் பாட விடுகினமாம். - உலகத்திலேயே மூன்றாவது திறமான தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை கொண்டு வந்திருக்கினமாம். தூய அரசியல் இயக்கம் மார்ச்சு 12 முதல் தொடர்ச்சியா நடக்குதாம். அடுக்கிக்கொண்டுபோனான். எனக்கு விறைச்சுப் போச்சு. எல்லாரும்கொடுக்கைவரிஞ்சு கட்டிக் கொண்டுதான் நிக்கிறாங்கள். நாங்கள் தான் செம்பாட்டு நிறத்தில கோவணத்துண்டை அள்ளிச் சொருகிக் கொண்டு நிக்கிறம் என்று புரிஞ்சுது.

இதை விட இன்னொன்றும் சொன்னான். இந்த அரசுதான் எல்லாத் திட்டத்திலயும் மக்களின்ர கருத்தறிஞ்சு செயற்படுகுதாம். அது முன்னம் நடக்கேல்லையாம். இனி இவங்களோட கதைச்சு ப்புண்ணியமில்லையென்று தெரிஞ்சவுடன வாயப்பொத்திக் கொண்டிருந்திட்டன்.

எழும்பேக்கதான் கமராப்பெடியன் கேட்டான், தகவல்களை வெளியில விடாமல் இரும்புக் கோட்டைமாதிரியிருக்கிற கம்பசிலயிருந்தும் உந்த தகவல் உரிமை சட்டத்தால தகவல்களை அறியலாமோ என்று கேட்டான். அவனைப் பார்த்தாச் சின்னப் பெடியன் மாதிரித் தான் தெரிஞ்சான். எடுத்த எடுப்பில பெரிய இடத்தில கை வைக்கிறான் என்று நான் நிமிர்ந்து பார்த்தன். கம்பசுக்க அமைச்சரின்ர காலத்து கணக்க இருட்டடிச்ச தகவல்கள் கிடக்கு. கிண்டி எடுத்தா மீடியாக்காரருக்கு வேட்டையா இருக்குமென்று வாயூறுறான். முடிஞ்சாக் கிண்டிப்பாரனென்று போட்டு நான் வந்திட்டன்.

வாற வழியில இறங்கி நல்லூரானைக் கும்பிட்டிட்டு சைக்கிள எடுக்க எஞ்சினியர் கண்டிட்டு, "என்ன அப்புச்சி! இப்ப எதுக்கெடுத்தாலும் முதலமைச்சரின்ர பிலாப்பாலை ஒருக்கா கேட்பமென்று செயலாளர்மார் வழியினம். இதைப்பற்றி நீ கவனிக்கிறதில்லையோ" என்று என்னில ஏறி விழுந்தார். "எல்லாரும் இளகின இரும்பக்கண்டா தூக்கித் தூக்கி அடிப்பியள். மற்றப்படி சவடால் விளையாட்டுத்தான்" என்று சரிச்சார். "சரி சரி! என்ன நடந்தது?" எண்டன்.

கொழும்பு அரசு ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கியிருக்காம். அதில ஒரு வேட்டிக்கல் பில்டிங் கட்டச் சொன்னவங்களாம். அதுவும் யாழ்ப்பாணத்தில. அதுக்கு சில பேரிட்ட ஆலோசனை கேட்டவங்களாம். அந்தக் கூட்டத்துக்கு எஞ்சினியர்மாரும் கனபேர் போனவையாம். அதில நாங்கள் சொல்லுற விசயங்களைக் கேட்கிறதுக்கு **52ஆம் பக்கம் பார்க்க**



அம்பலத்தாடி
அப்புச்சி



# கேப்பாபிலவில் முடிவேதுமின்றி தொடர்கிறது போராட்டம்

## காணிகளை விடுவிக்கும் வரை ஓயமாட்டோம் என மக்கள் உறுதி

முல்லைத்தீவு, மார்ச். 19

மிகவும் அமைதியான முறையில் 18 ஆவது நாளாகவும் நேற்றுக் கேப்பாபிலவு மக்களின் போராட்டம் தொடர்ந்தது.

கேப்பாபிலவுக் கிராமத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளில் முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தலைமையகம் அமைந்துள்ளது. தமது வாழ்விடங்களையும், நிலங்களையும் இராணுவம் விடுவிக்கவேண்டும் எனக் கோரி மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மக்கள் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தின் 18ஆவது நாளான நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் திக்கம் மத்திய சனசமூக நிலைய இளைஞர்கள் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்ததுடன், கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

"எங்கள் வயல்நிலங்களில் நெல் விளைவித்து இராணுவத்தினர் அறுவடை செய்கின்றார்கள். நாங்கள் நிலங்கள் இல்லாமல் கடையில் அரிசி வேண்டியே குடும்பத்தைக் கொண்டு நடத்தவேண்டிய நிலையில் உள்ளோம். கூட்டு அரசு காணிகளை விடுவித்தால் போதும். நாங்கள் எங்கள் வாழ்க்கையைப் பார்த்துக்கொள்வோம்" எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமகன் ஒருவர் தெரிவித்தார். (த-7)

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வெளிநாடு செல்ல விரும்பி முகவரிடம் பணம் செலுத்தி ஏமாற்றப்பட்டதாகக் கூறப்படும் இளைஞன், வியாபார நிலையத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள வியாபார நிலையத்தில் நேற்று மதியம் 12 மணிக்கும் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச்சேர்ந்த சுந்தரலிங்கம் விஜிந்தன் (வயது - 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது தந்தை பல மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்தார். அந்தக் கடையைக் குறித்த இளைஞனே நடத்தி வந்தார். அவர் வெளிநாடு செல்ல விரும்பி முகவர் நிலையம் ஒன்றுக்கு அவர் பணம் செலுத்தியுள்ளார். ஆனால் அந்த நிறுவனம் பல மாதங்களாகியும் அவர் வெளிநாடு செல்வதற்கான முயற்சிகளைச் செய்யவில்லை என்று விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டது.

சில நாள்களுக்கு முன்னர் குறித்த முகவர் நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் குறித்த இளைஞனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுக் கைகலப்பு நடந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். குறித்த முகவர் நிலையத்தினர் தொடர்பில் எவ்வித தகவலும் இதுவரை தெரியவரவில்லை என்று விசாரணையில் கூறப்பட்டது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நல்லூர் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மு.உதயசிறி மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-4)


# நூல் வெளியீடு

தகன சம்ஸ்காரம் ஆபஸ்த்தம்ப அபர பிரயோகம் நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கொக்குவில் மேற்கு சொர்ணசித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (த-10)


## மெய்வன்மை போட்டி இன்று

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும். இந்தப் போட்டிக்குத் தலைமை விருந்தினராக பிரபல வர்த்தகர் திருப்பணி அரசு சு.கதிர்காமநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மூத்த நில அளவை அத்தியட்சகர் பொ.சிவானந்தனும், கலந்து கொள்வர். (த-250)



# தம்புள்ளையில் மரக்கறிகள் மலிவு




கொழும்பு, மார்ச் 19

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. குறித்த நிலையத்துக்கு அதிகளவு மரக்கறிகள் வந்து சேர்வதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கரட், லீக்ஸ், கத்தரிக்காய் உட்படப் பல மரக்கறிகளின் மொத்த விலை 15 முதல் 30 ரூபாவாக உள்ளது என்று பொருளாதார மத்திய நிலையை முகாமைத்துவம் குறிப்பிட்டுள்ளது. மேலும், மரக்கறி கொள்வனவாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அந்த மரக்கறிகள் யானைகளின் உணவுக்காக வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மரக்கறிகள் திடீர் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

(ஐ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சி
கலை இலக்கிய
அணியினால் நேற்று
(18.03.2017)
சனிக்கிழமை நடைபெற்ற
**"கம்பன்விழாவில்"** மருத்துவ
சமய சமூகப்
பணிகளுக்கான
**"சான்றோர் விருது"** பெற்ற

**Lion Dr. சு.சி. அருளானந்தம்**

அவர்களின் சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்**

Bergen Hindu Sabha | Bergen Hindu Sabha




## சிவாச்சார்யார் (குருக்கள்) தேவை

நோர்வே (Norway), பேர்கனில் (Bergen) அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலய குருக்களாகப் பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்**

- சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- சிவாகம முறைப்படி சகல அபிஷேகங்கள், பூஜைகள் மற்றும் அனைத்து கிரியைகள் தனித்துச் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சாத்துப்படி மற்றும் மடப்பள்ளி வேலைகள் தனித்துச் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- 35 வயதுக்கு மேற்பட்டவராகவும், திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
- சமய சொற்பொழிவாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்காலம் ஆகக் கூடியது இரண்டு வருடங்கள்.
- தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
- ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடைபெறுகின்றது.
- தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 05.05.2017 இற்கு முதல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.
- மேலதிக விவரங்களுக்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் :

**குணம் - 0047 922 23396, சதா - 0047 941 46069**

குறிப்பு: தபால் மூலம் விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

BERGEN HINDU SABHA
STORETVEIT VEIEN 05
5067 BERGEN, NORWAY.
www.bergenhindusabha.info

## தேவை

பிரதேச ரீதியான வழங்குநர்கள் - கிளிநொச்சி

இலங்கையின் ஓரே வழங்குநர்களான CHINT POWER SOLUTIONS (Pvt) Ltd ஆனது ISO 9001, ISO 14001 மற்றும் OHSAS 18001 தர நியமங்களின் கீழ் உலகப் புகழ் பெற்ற "CHINT" Brand இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்து தற்போது உலகளாவிய ரீதியில் 90 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றது.

இந்தக் கம்பனியானது பிரசித்திபெற்ற SLS தரச்சான்றிதழினைக் கொண்டு இலங்கையின் ஓரே வியாபாரக் குளியின் கீழ் குறைந்த மின்சாரப் பாவனையுடைய மின்சாதனப் பொருள்களை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்தி வருகின்றது.

10 மில்லியன் வங்கி உத்தரவாதம் மற்றும் நிதியியல் பின்னணியுடைய மின்னியல் - வன்பொருள் துறையில் பலமான வலையமைப்புடைய வழங்குநர்கள் தேவை. தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.

உறுதியான நிதி வளத்தினை உடைய (குறைந்தது 1.5 மில்லியன் நிதி தொழிற்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்) மீன் வழங்குநர்களை கிளிநொச்சி பிரதேசத்திற்கு நியமிக்க உள்ளோம்.

பின்வரும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

01. ஒருமில்லியன் தொகையுடைய உத்தரவாதத்தினை வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
02. மீன் வழங்கலுக்காக வரிசைப்படுத்தப்பட்ட 10.5 Aluminium Body Lorry யும் சாரதியும் இருத்தல் அவசியம் உடையவராக இருத்தல் (கம்பனியால் வியாபாரக் குறியிடப்பட்டிருத்தல் வேண்டும்.)
03. விற்பனை பண வசூலிப்பிற்காக வினைத்திறனுடைய பண வசூலிப்பாளர்களைக் கொண்டிருத்தல்
04. போதுமான வசதியுடைய அலுவலக / களஞ்சிய வசதி மேற் தரப்பட்ட தகுதியை உடையவராய் இருத்தல் கவர்ச்சிகரமான வருமானத்தை ஈட்டித்தரவல்ல வளர்ச்சியடைந்து வருகின்ற எங்களது கம்பனியுடன் பங்குதாரராக இணைய விரும்புபவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை விளம்பரங்களை விளம்பரம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 10 நாள்களுக்குள் கிடைக்கக் கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

General Manager
CHINT POWER SOLUTIONS (PVT) LTD
No.332/2, Galle Road, Colombo - 03
Telephone - 011 230 1915/ 230 1996
Email - info@chintsrilanka.com.

## விற்பனை



Toyota
Townace Cr41
1997 4-Door
Flet Roof Aoto

நல்ல நிலையில் உள்ள தனி பாவனை உடனடி விற்பனை. உங்களது வாகனத்துடன் மாற்றிக் கௌ்ளவும் முடியும்.

011 255 2222

## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பு, யாழ் நகரில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற உல்லாச துறை HOTEL ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

01) Receptionist
02) Cooks
03) Fast Food Manager (யாழ்ப்பாணத்திற்கு)
04) Drivers
05) Stewards
06) Night Manager (கொழும்பிற்கு)
07) Kitchen Helpers

ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

214/2, Messenger Street, Colombo-12
077 932 8895, 011 232 9664

## Mobile Phone Repairing Course



Smart & All Mobile Phones
Hardware , Software and unlocking

11 th Batch starts on
25.03.2017
weekend Batches

✔ செயல்முறையுடன் கூடிய வகுப்புக்கள்.
✔ மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்.
✔ குறைந்த செலவு.... நிறைந்த பயன்.....

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## Build your Career & Be Part of a Growing Team

Calling All School Leavers

### Trainee Sales & Marketing Executives



we offer exciting income potential and career growth opportunities, that why, ETL World wide is represented by over 3,000 executives in 21 countries world wide, with over 50 million customers, we are expanding our operations in Sri Lanka and are looking for YOUNG and positive minded individuals to join our team.

**Requirements**

★ Must have lots of energy and be a positive minded individual. If you are lazy then don't bother applying.
★ Willing to learn the job and work hard towards achieving goals.
★ Must be good in communication either in English or Tamil.
★ Studied upto GCE A/L and passed the GCE O/L examination.
★ Age preferably 18 and above but not more than 30 yrs.

**Benefits**

★ Basic salary 23,000/= with one year experience
★ You can earn over Rs.50,000/= per month
★ We will pay you a Basic Salary, Traveling Allowance and provide you cash incentives and commissions.
★ you also have the opportunity to travel overseas through our Annual Overseas incentives.

Call us or Send your CV to schedule an interview

Manager G.Anthony
0773 566 835
jaffnapioneerhouse@gmail.com
100,1/2 2nd Floor, Manipay Road, Jaffna.

www.pioneerhouselearning.com/careers

## அடிப்படை சம்பளத்துடன் மாதாந்தம் ரூபா 60 000/= மேல் உழைக்கலாம் நிரந்தர தொழில் ஒன்று உங்கள் நகரிலேயே

வருகின்றோம் உங்கள் நகரிற்கு நாங்கள் கைகொடுப்போம் புதிய தொழிலுக்கு....

நாங்கள் தேடுகின்றோம் உங்களையே...

மில்விக் லங்கா தனியார் நிறுவனம் புதியதொரு சேவையை வழங்குகின்றது. அந்த இனிமையான வேலைத்திட்டத்தில் வேலைவாய்ப்புக்கள்

**எங்களைப்பற்றி**

தொலைத்தொடர்பு நிறுவனம் மற்றும் பலநோக்கு துணை நிறுவனமாகும்.



**தேவையான தகைமைகள்:**

*வயது 18 இற்கு மேற்பட்டவர்கள்
*ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
*காப்புறுதி துறையில் விற்பனை அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
*பாடசாலை கல்வி இடை நிறுத்தியவர் அல்லது முழுமையாக முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பதாரர்கள் எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள்**

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கல்குடா, மட்டக்களப்பு, மூதூர், திருகோணமலை, அம்பாறை, பொத்துவில், திருக்கோவில்

BIMA

விண்ணப்பதாரிகள் சுவரஸ்யமான சம்பளங்கள் மற்றும் ஏனைய சிறப்பு சலுகைகள் கிடைக்கப்பெறும். உங்களுடைய விண்ணப்பங்கள் arshath.zawahir@lk.milvik.com க்கு அனுப்புங்கள் மேலதிக விவரங்களுக்கு Arshath - 076 530 1923

# அபிவிருத்திப் போர்வையில் இலங்கையின் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு.மார்ச்19

அபிவிருத்தி என்ற போர்வையில், இலங்கையின் சொத்துக்களை விற்பனை செய்யும் முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வருடம் இறுதியில் ஒரு குடும்பத்திடம் 3 ஆயிரத்து 866 ரூபா வரியாக அறவிடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு ஜே.வி.பி.யின் மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டினார்.

வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில்உரையாற்றியபோதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் கடன்பெறுவதற்கான ஒரு முயற்சியாக ஐந்து அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து அரசு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது. ஐந்து அரச நிறுவனங்களைச் செயல்திறன் மிக்கதாக மாற்றுவதற்காக நிதி அமைச்சின்கீழ்அவற்றைக்கொண்டுவருவதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரச நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த முடியும். என்றார். (ஐ)

# நல்லிணக்கப் பொறிமுறைக்கான இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை இலங்கை கவனத்தில் எடுக்காது?

## செயலணி உறுப்பினர்கள் அச்சம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை கவனத்தில் கொள்ளாமல் விடக்கூடும் என்று செயலணியின் உறுப்பினர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.


இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச்செயலணியில் இடம் பெற்றிருந்த 11 உறுப்பினர்களும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்கு இலங்கை அரசு இன்னமும் செயல்முறைகளை அறிவிக்கவில்லை. இந்த நிலையானது, முன்னைய அரசால் மனித உரிமைகள் விவகாரங்கள் குறித்து அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், அந்தக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு ஏற்பட்ட கதியே, கலந்தாய்வு-செயலணியின் அறிக்கைக்கும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றுள்ளது.

சாந்தா அபிமன்னசிங்கம், விசாகா தர்மதாச, கலாநிதி பர்சானா ஹனீபா, ஜனரஞ்ஜன, பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு, மனோரி முத்தெட்டுவேகம, மிராக் ரகீம், பேராசிரியர் கமீலா சமரசிங்க, கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து, பேராசிரியர் தயா சோமசுந்தரம், காமினி வியாங்கொட ஆகியோர் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர். (ஐ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி குணநாயகம்

கடந்த 17.02.2017 சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு.
கொடிகாமம்.

குடும்பத்தினர்.


# சுப்பிரமணியம் பூங்கா மீளத் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். சுப்பிரமணியம் பூங்கா சிறுவர்களின் பயன்பாட்டுக்காக கடந்த வெள்ளிக்கிழமை முதல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சீரமைப்பு பணிக்காக பூங்கா மூடப்பட்டது.தற்போது பூங்கா சிறுவர்களின் பயன்பாட்டுக்காக மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ந - 17)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவானந்தராசா யோகராணி (வவி)

(குடும்பநல உத்தியோகத்தர் (PHM) - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி)



சாவகச்சேரி, நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தராசா யோகராணி (வவி) 16.03.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - யோகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும், சிவானந்தராசாவின் அன்புமனைவியும், பகிமதி, தனுராஜ் (பிரதேச செயலகம் நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசமூர்த்தி (கனடா), தேவராணி, செல்வராணி, காலஞ்சென்ற பவளராணி, தவராணி, ஜெயராணி, முருகமூர்த்தி, சந்திராதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2017) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நுணாவில் கிழக்கு,
கல்வயல் வீதி, சாவகச்சேரி

தகவல்
குடும்பத்தினர்.

0212270239, 0771753368,
0775830629

## மரணஅறிவித்தல்

### ஆறுமுகம் தில்லைநாதன்



காரைநகர், களபூமி, கொம்பாவோடையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தில்லைநாதன் 13.03.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - புவனேஸ்வரி (MST) தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நிரஞ்ஜனி, பிரியந் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (சுந்தரம் ஸ்ரோர்ஸ் - நெடுங்கேணி), கணேசன் (கோபால் - நெடுங்கேணி), தனபாலன் (ஆஸ்திரேலியா), சோதிநாதன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருபானந்தன், வள்ளிநாயகி, பரமானந்தன், யோகேஸ்வரி, சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2017) திங்கட்கிழமை LeverKusen, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 255 7633

ஏன் இந்தியாவுக்குச் செல்கிறீகள்?
வெள்ளவத்தையிலேயே சிகிச்சை



WELLAWATTE - ROYAL FERTILITY CLINIC
உங்கள் நோக்கமே பெற்றோராதல்!

குழந்தையின்மைக்கான பிரபல பிரதான ஆலோசகர்
UK, USA மற்றும் Australia வில் 25 வருட கால அனுபவமுள்ளவர்.

பரிசோதனை நேரம்:
தினமும் காலை 9.00 மணியிலிருந்து பகல் 1.00 மணி வரை

அழையுங்கள்: 0772 825 869

ROYAL HOSPITAL (PVT) LTD
62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
Phone: 94-11-2586581, 2584212, 2597565
Care...when and where you need it most

FLEX Graphic

## பணிப்பெண் தேவை

கொழும்பு - 06 இல் வசிக்கும்
தமிழ் குடும்பத்திற்கு
பணிப்பெண் தேவை
சம்பளம் - 15000/=
வயது 30 - 50 வரை

077 347 0788

## பாவித்த ஒப்செட் பிரிண்டிங் மெஷின் உடனடி விற்பனைக்கு

1. HEIDELBERG G.T.O 52
2. HEIDELBERG M.OFFSET
3. HEIDELBERG G.T.O 52-TWO COLOUR
4. HEIDELBERG KORD BLACKSHORT BOX
5. HEIDELBERG AUTO PLETERN (13",10"),(18",15")
6. COLD LAMINATING MACHINE

வார நாள்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை பார்வையிடலாம்.

178, ALWIS TOWN, HENDALA, WATTALA.
T.P: 072 359 5911 (வரிது)

தெய்வத்தின் திருப்பாதத்தில்!

அனுமதி இலவசம்

## ஆசீர்வாத பெருவிழா!

### இயேசு ஜீவிக்கிறார் பணியின் 39 ஆவது சுவிசேஷ மாநாடு

அன்புடையீர்,

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் கட்டுகள், செய்வினை, மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள் இன்றே இரட்சண்ணியத்தின் நாள். இன்றே அநுக்கிரகத்தின் நாள். உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

2017 மார்ச் 24, 25, 26
மலை 5.00 மணி

இடம்: மாநகரசபை மைதானம் வவுனியா

செய்தி : கலாநிதி M.R.இராஜேந்திரம் மற்றும் C.V. இராஜேந்திரம்

39 ஆவது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு

மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை தினமும் காலை 8.30 முதல் 3.00 மணிவரை
இடம்: இல.18, டேங்க் ஒழுங்கை, இரம்பைக்குளம், வவுனியா.

மேலதிக தொடர்புகளுக்கு: இயேசு ஜீவிக்கிறார் ஆலயம் 401, அளுத்மாவத்தை வீதி கொழும்பு - 15. தொ.இ.011 252 2608

## உங்கள் கனவு வெளிநாடா ?

நேர்மையான முறையில் உங்கள் கனவு நாட்டினை சென்றடைய இன்றே நாடுங்கள்

**WINSTAR VISA CONSULTANTS**

* Student Visa * Spouse Visa * Tourist Visa * Skilled Migrations
Other Visas.........

*கடந்த நான்கு வருடங்களாக எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் இயங்கும் ஒரு நிறுவனம்.

*எவ்வித சமரசமும் இன்றி குறித்த காலத்தினுள் வேலை முடித்துக் கொடுக்கப்படும்

*நீங்கள் செலுத்தும் பணத்திற்கு 100 % உத்தரவாதம்

*அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் மூலமான மொழி வகுப்புக்கள்

சிறந்த ஆலோசனைகளைப் பெற இன்றே நேரில் வாருங்கள்

**WINSTAR VISA CONSULTANTS**

106, Post box Junction,
Palaly Road, Thirunelveli Jaffna.

T.P : 021 300 4641
fb : winstar visa consultants
web : www.winstarjaffna.com


## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி இராமசேது



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16.08.1942 | 18.03.2017 |

அல்வாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இராமசேது நேற்று (18.03.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பருவதம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான நாராயணப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் இராமசேதுவின் (சிற்பக் கலைஞர்) அன்பு மனைவியும் இராசமணியின் மைத்துனியும் அழகம்மா காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் அன்னம்மா, நவரத்தினம், ஆனந்தம் ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற அசோக்குமார் மற்றும் ரதிவதனா (பிரான்ஸ்), உதயகுமார் (லண்டன்), வசந்தகுமார், ஜெயரதி (கனடா), ரஜினா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயும் கலைச்செல்வி (சுவிஸ்), சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), புனிதவதி (லண்டன்), துர்க்கா, சுரேஸ்குமார் (கனடா), ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியும் நிறோஜன், பிரசாந்.சுமன், சுமித்திரா, வித்யா, அஸ்வினி, அனுஷ்கா, அஸ்விந் .டிலோ ஜனா, தேனுஜன், ஜினோசன், தனுஜா, மதுசா, அபிரா, அஸ்வின், ஆகாஷ், கிருஜா, ரக்ஷன், அபிஷயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

**உதயமஹால்**
**செங்குந்தா வீதி ,**
**திருநெல்வேலி கிழக்கு.**

தகவல்:
குடும்பத்தினர்


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2855 திகதி: 18.03.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து

14 23 26 53 U 71

ரூ. 52,230,807/-

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 629

சீட்டிழுப்பு திகதி 18.03.2017
சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்

26 39 52 57 F

அடுத்த சுப்பர் ஜக்பொட்

ரூ. 54, 475, 795/=


## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றும் **சிவானந்தராஜா தனுராச்** அவர்களின் அன்புத் தாயார்

**சிவானந்தராஜா யோகராணி**

அவர்கள் 16.03.2017 வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்**
**மற்றும் ஊழியர் நலன்புரி சங்கம்.**
**பிரதேச செயலகம், நெடுந்தீவு.**


## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலைப் பயிற்சிக் கல்லூரி

**ஒளிஅழகன் ஸ்ரூடியோ**

**British College Of Beauty Studies**

**இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்**



**புதிய அழகுக்கலை,**
**சிங்கள பயிற்சி வகுப்புக்கள்**
**ஆரம்பமாகவுள்ளன.**

வெகுவிரைவில் சிங்களம் பேச, எழுத வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இன்றே பதிவை மேற்கொள்ளுங்கள்.
எங்கள் கல்லூரியில் அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்களே பயிற்சியளிப்பார்கள் .
பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

- வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறுகிய கால பயிற்சி வகுப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி வாய்ந்த சான்றிதழே வழங்கப்படும்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொந்த தொழில் பெற்றுக்கொள்ள முடியும்.
- இணைய விரும்புவோர் நேரில் வருகைதரவும்.

**பலாலி றோட் ,**
**திருநெல்வேலிச்சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**உதயன் பணிமனை அருகில்,**
**கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.**


## விபத்தில் மூதாட்டி சாவு

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு சந்தையில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டு மூதாட்டி தனது துவிச்சக்கரவண்டியில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். செம்மலை பிரதேச வைத்திய சாலை நோயாளர் காவுவண்டியும்அவர் பயணித்த துவிச்சக்கர வண்டியும்மோதியதில் சம்பவ இடத்தில் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. அவர் அடையாளம்காணப் படவில்லை. முல்லைத்தீவு பொலிசார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து-4-7)

## மாதாந்த ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து முதியோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோப்பாய் வடக்கு முதியோர் சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் கேட்டுள்ளார். (து-ரி)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 17 |
| 02 | 03 |
| 1948 | 2017 |



### திருமதி இரத்தினம் ஆறுமுகம்

பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் ஆறுமுகம் நேற்றுமுன்தினம் (17.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தமேனி,**
**அச்சுவேலி.**

தகவல்
குடும்பத்தினர்.
077 717 5128


## வடக்கின் முன்னணி நட்சத்திர ஹொட்டலிற்கு பின்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்

- முகாமையாளர் (Managers)
- தோட்டப்பராமரிப்பாளர்
- மின்சார, குழாய் அமைவு பராமரிப்பு உதவியாளர்
- Guest Relations officers
- சமையல் உதவியாளர்

Hotel துறையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு - 077 9817617


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தையா (லண்டன்)



காரைநகரைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா (லண்டன்) நேற்று 18.03.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஜோன் - மரியாள் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக் கணவரும் ஞானசோதி, ஜெராட் (அப்பன்), ஜெயபால் (பிறின்சி சில்க், உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் குளமங்கால் புனித சவேரியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## யாழ். சிறப்பு அங்காடிக் கூடம் சித்திரைக்கு முன் திறக்கப்படும்

*யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ். நகரில் நடைபாதை வியாபரத்துக்காக அமைக்கப்படும் சிறப்பு அங்காடி விற்பனைக் கூடம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக திறக்கப்படும் என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.
சுமார் 13 மில்லியன் ரூபா செலவில் யாழ். பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள யாழ். மாநக சபைக்குச் சொந்தமான வளாகத்தில் சிறப்பு அங்காடி அமைக்கப்படுகின்றது. மின்சார இணைப்பு, நில அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
அங்காடித் தொகுதி எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பதாகத் திறக்கப்படும். முனீ ஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டு அந்த வியாபாரிகளுக்கு இந்த அங்காடியில் முன்னுரிமை அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ந-17)


கிளிநொச்சி


யாழ்ப்பாணம்

# காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிப்படுத்தலை வலியுறுத்தி

## வடக்கில் தொடர்கின்றன மக்கள் போராட்டங்கள்


முல்லைத்தீவு

யாழ்ப்பாணம், மார்ச் 19
கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி நடத்தப்படும் போராட்டங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.
கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் வவுனியா, முல்லைத்தீவு என விரிவடைந்து யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்கு பொது அமைப்புகள், அரசியல் தலைவர்கள், இளைஞர்களின் ஆதரவு வலுவடைந்தது.
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று 27 ஆவது நாளாகவும், வவுனியாவில் 23 ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 12 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 4 ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்ந்தன.
போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தனர்.
தமது போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்ட வடிவத்தை மாற்றவுள்ளோம் என்று கிளிநொச்சியை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.
வவுனியாவில் போராட்டம் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமாக மாற்றமடைந்துள்ளது. அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக கடந்த நாள்களில் பல தரப்பினரால் பேரணிகளும் நடத்தப்பட்டன.
முல்லைத்தீவிலும் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படுகின்றது. நேற்று முல்லைத்தீவு மக்களது போராட்டத்துக்கு யாழ்ப்பாணம் திக்கம் மத்திய சனசமூகநிலை இளைஞர்கள் நேரில் சென்று ஆதரவளித்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. மர நிழலில் ஆரம்பிக்கப்பட்ட இந்த போராட்டம் 2 ஆவது நாள் முதல் தகரக்கொட்டகை அமைத்துத் தொடர்கின்றது.
(ந-21,7,6,35,26)


வவுனியா

## வங்கிகளில் கடன்களை பெறுவோர் வருமானத்துக்கு முயல வேண்டும்

*மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் குழுத் தலைவர் தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 19
வங்கிகளில் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்கள் கடன்களைச் செலுத்துவதற்குரிய வருமானங்களைப் பெறுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு சுட்டிக்காட்டினார் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் குழுத் தலைவர் சிறிபத்மநாதன்.
மக்கள் வங்கி வவுனியாக் கிளையில் நிதி முகாமைத்துவ விழிப்பு ணர்வுச்செயலமர்வு நேற்றுநடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
வருமானங்களை ஈட்டினால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும். வங்கிக்கும், வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு நீடிக்கும். எந்த வங்கியில் குறைந்த வட்டியில் பணத்தைப் பெறுவது என்பது பற்றிய அறிவைப் பொதுமக்கள் கொண்டிருக்க வேண்டும்
கடன் அட்டையாயின் கடன் அட்டைக்குரிய பணத்தை 50 நாள்களுக்குள் செலுத்துவதன் மூலம் வட்டியில் இருந்து தப்பிக் கொள்ள முடியும்.
அண்மையில் வவுனியாவில் கடன்களை நிதி நிறுவனங்களிடம் பெற்று பணத்தை திருப்பி செலுத்தமுடியாத குடும்பங்கள் தற்கொலை செய்து கொண்ட விடயங்கள் பத்திரிகைகள், இணையத்தளங்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். கடன்களை எந்த வங்கிகளும் வாடிக்கையாளருக்கு தரத் தயாராகவே உள்ளன. வாடிக்கையாளர்கள் உழைப்பில் கவனம் செலுத்தவேண்டும். மதுபோதைக்கு அடிமைப்பட்ட தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்கள் பல, வங்கிகளிடமோ அல்லது வங்கிகள் அல்லாத நிதிநிறுவனங்களிடமோ பெற்ற நிதியை திருப்பிச் செலுத்த முடியாது திண்டாடுவது கவலைக்குரிய விடயமே.
கடன்களை பெறுவது, பெற்ற கடனை வைத்து பணம் சம்பாதிப்பது மற்றும் அதற்கான வட்டி ஆகிய விடயங்கள் பற்றி வங்கிகள் தெளிவாக வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்துவது அவசியமானது. கடன் சம்பதமான உடன்படிக்கையை விடயங்களை வாடிக்கையாளருக்கும் வாசித்து காட்டவேண்டும். வாடிக்கையாளர் உடன்படிக்கை நன்கு தெரிந்த பின்னரே கையொப்பம் இடல் வேண்டும். வாடிக்கையாளர் உடன்படிக்கையை வாசிக்காது காட்டும் இடத்தில் கையொப்பம் வைப்பது கவலைக்குரியதும் ஆபத்தானமான விடயமுமாகும் - என்றார்.
செயலமர்வில் பாடசாலை மாணவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்திஉத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் மத்தியவங்கியால் வெளியிடப்பட்ட நூல்களான பால்மாடு வளர்ப்பு, வீட்டு தோட்ட முகாமைத்துவம், நிதிர் சார் நிபுணத்துவம், சிறிய குழுக்கள் முறை போன்றன வழங்கப்பட்டன. (ந-402)



### காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின்

# போராட்டத்துக்கு பேராதரவு கொடுக்க வேண்டும் மக்கள்

### வடக்கு சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

வவுனியா, மார்ச் 19

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், படுகொலைகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் இன்றும் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டினார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

வவுனியா, பம்பைமடு வைகறை வைத்தியசாலையில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு மருத்துவ புனர்வாழ்வு பெற்ற 12 பேருக்கு சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாகாணம் முழுவதும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். மாகாணத்தில் உள்ள ஒட்டு மொத்தத் தமிழர்களும் அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்நாட்டுப் போரால் ஏராளமானோர் சிறப்புத் தேவையுடையவர்களாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலமை மிகவும் பரிதாபகரமானதாகவே தற்போது வரை காணப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டங்கள், நிலமீட்புக்கான போராட்டங்கள் என பல போராட்டங்கள் இப்போது நடைபெறுகின்றன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் நடத்தப்படும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க அனைத்துத் தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக உண்மை நிலையை அறியும் உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்ட ஐந்து மாணவர்களின் வழக்கு விசாரணையின் போது அங்கு சாட்சியமளித்துள்ள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்ட மாணவர்களில் நான்கு பேர் துண்டு துண்டாக வெட்டி களனி ஆற்றில் வீசப்பட்டனர் என்று கூறியுள்ளார். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும். அவர்கள் தற்பொழுதும் உயிருடன் உள்ளனரா அல்லது அவர்களுக்கு ஏதாவது நடந்து விட்டதா அவர்களை யார் கடத்தியது அவர்களுக்கான தண்டனை என்ன என்ற விடயங்களை ஆராய வேண்டும்.

இராணுவம் தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ளது. அவ்வாறு கையகப்படுத்தியுள்ள காணிகள் அனைத்தையும் இராணுவம் மீண்டும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். தங்கள் காணிகளை மீள ஒப்படைக்க வலியுறுத்தியும் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் கைதிகள் இன்றுவரை விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விடுதலை தொடர்பாக அரசு எந்த முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பல அரசியல் கைதிகள் மீது இன்றுவரை எந்த வழக்குகளும் பதிவு செய்யப்படவில்லை. பல வருடங்களாக காணாமல் போயிருந்த ஒருவர் 8 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்ட நபர் தான் இத்தனை நாளும் எங்கு அடைக்கப்பட்டிருந்தேன் என்பதை கூட தெரியாத அளவுக்கு அவர் மிகவும் இரகசியமான இடத்தில் அடைக்கப்பட்டிருந்திருக்கின்றார். அவரை அங்கு வைத்திருக்கும் போது அவரின் அறைக்கு அழைத்துச் செல்லும் போதும் பின்னர் வெளியே கூட்டிச் செல்லும் போதும் கண்களை மூடி துணியால் கட்டியே அழைத்துச் செல்வார்கள். இதனால் அவருக்கு அடுத்த அறையில் இருப்பவர்களை கூட யார் என பார்க்க முடியாத நிலமை இருந்தது என்று கூறியுள்ளார். ஐ.நாவில் இலங்கை அரசுக்குகாலஅவகாசம் வழங்கு வதை ஏற்க முடியாத நிலமை இருந்தாலும் தற்போது உள்ள பன்னாட்டு ஆதரவுடனான நிலமையை நழுவவிடக் கூடாது. என்றார். (ஐ-21-8)

## "தன்னைக் கையளித்தவரிடம் எம்மைக் கையளிப்போம்"

"ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால், யார் தான் நிலைத்து நிற்க முடியும்? நீரோ மன்னிப்பு அளிப்பவர், மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்." (திபா. 130:3–4)

எம் பாவப் பாதைகளை விட்டு, மனமாற்றத்துடன் புதுவாழ்வில் கால் பதித்து, இறைவனின் சொந்தப் பிள்ளைகளாக மாற அரிய சந்தர்ப்பமே இந்தத் தவக்காலம். "தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? (உரோ. 8:32) இறைவன் மனிதருக்கு அளித்த அன்புப் பரிசே இவ்வுலகு. ஆனால் நம்மைச் சுற்றியுள்ள அழகிய உலகின் இன்றைய பாவ பரிதாப நிலையை நோக்கும்போது, அரிய சிந்தனை ஒன்று தோன்றுகின்றது. "இன்று ஏராளமானவர்கள் விமானச் சீட்டுக்களைப் பதிவு செய்து கையில் வைத்துக் கொண்டு, நரக நெருப்பை நோக்கி தம்மை அறியாமலே உல்லாசமாகப் போய் விழுவதற்கான நுழைவுச் சீட்டுக்காகக் காத்திருக்கிறார்கள்." என்னும் சிந்தனைத் துளி சமகால சமூகத்தின் பெரிய பாவக்குழியைச் சுட்டி நிற்கிறது. சிறியோர் முதல் பெரியவர்கள் வரை நெருப்பைத் தொட்டுப்பார்த்த பின்பே அது சுட்டுவிடும் என்ற அறியாமைக்குள் மூழ்கிவிட்டனர். நாகரிகம் என்ற மாயைக்குள் நல்வாழ்வைச் சீரழிக்கும் நெறி பிறழ்வுகளும், உலக சந்தையில் உலவும் சினிமா கலாசாரத்தால் ஈர்க்கப்படும் இளம் தலைமுறையினரும், மனிதர்களின் வக்கிர உணர்வுகளைத் தூண்டும் செய்திப் பரிமாற்றங்களும், "பிறர் மனை நயத்தல்" என்னும் கைங்கரியத்தை நிறைவேற்றும் பெரும் உல்லாச விடுதிகளும், போதையினால் பாதை தவறும் பாதகச் செயல்களுமே, இன்று எம்மத்தியில் ஏராளமாகவும், தாரளமாகவும் உள்ளன. இந்த நிலைகளில் மனிதன் அமிழ்ந்து வாழ்வதால் தான், இறைவன் முன்னிலையில் நிலைத்து நிற்க முடியாத அளவுக்கு நிலை தடுமாறுகின்றான். ஆனால் மன்னிப்பு அளிக்கும் இறைவனோ இந்தப் பெரிய பாவப் புதைகுழியிலிருந்து மீட்கவே தம் சொந்த மகனையே சிலுவைச் சாவுக்குக் கையளித்தார். எனவே இந்த அருளின் காலத்தில் எமது சிந்தனை உடல், ஆன்மா அனைத்தையும் மாசுபடுத்தும் சகதி வாழ்விலிருந்து வெளிவருவோம். கிறிஸ்துவின் விலை மதிப்பற்ற தூய இரத்தமே எம்மைக் கழுவும் தூய சுனை என்பதை உள்ளத்தில் பதித்தவர்களாய் எமது மாற்றம் நிறைந்த புதுவாழ்வை அவருக்குக் கையளிக்க உறுதி கொள்வோம். "ஆண்டவரே! என் மன்றாட்டுக்குச் செவி சாய்த்தருளும்; என் விண்ணப்பக் குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும் (திபா. 130:2) என்று மனம் குமுறி கண்ணீர் சிந்தி மன்னிப்பை வேண்டுவோம். அப்போது, இறந்து உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ?




அன்ரனி சி.ஜே.அன்ரனி பாலா

## இளைஞர் கழகங்களுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம்.மார்ச் 19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் செயற்படும் யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கான 38ஆவது விருது வழங்கும் விழா நேற்று நல்லூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மு.பகல் 10 மணிக்கு நடைபெற்றது. 2016ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கலை,கலாசாரம், விளையாட்டு சார்ந்த போட்டி நிகழ்வுகளில் சிறப்பாகப் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வின் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரபாதம் சரவணபவன்,மாவை சேனாதிராசா மற்றும் இளைஞர் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஐ-21)

## பெண்ணிடம் சங்கிலி அறுப்பு

தென்மராட்சி, மார்ச் 19

வீதியில் நடந்து சென்ற பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடினர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மட்டுவில் சந்தியில் நடந்துள்ளது.

பேருந்தில் செல்வதற்காக நடந்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களில் காட்சிகள் பதிவாகியிருக்கலாம் என்பதால் அவற்றைப் பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மன்னார் இ.போ.சபை சாலையின் முகாமையாளர் நியமனம் நிறுத்தம்

### தமிழர் என்பதே காரணம் என்று பல்வேறு தரப்பினர் குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 19

இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நியமனம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளராக கடந்த 15 வருடங்களின் பின்னர் தமிழரான ஏ.ஜே.லெம்பேட் கடந்த 7 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அவர் மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலை அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை 15 ஆம் திகதி காலை 8 மணியளவில் ஒப்பமிட்டு தனது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டடார்.

இந்த நியமனத்தை இரத்துச் செய்ய தொடர்ச்சியாக அரசியல் ரீதியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன என்று கூறப்படுகின்றது.

இந்த நியமனத்தை குழப்பியடிக்கும் வகையில் அமைச்சர் ஒருவர் செயற்படுகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சுமத்தியிருந்தார்.

ஏற்கனவே பதவியிலிருந்த முகாமையாளரை மீண்டும் நிய மிப்பதற்கு குறித்த அமைச்சர் துரித முயற்சிகளை முன்னெ டுக்கின்றார் என்றும் அவர் கூறியிருந்தார்.

தற்போது புதிய முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ள முகாமையாளரின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படு கின்றது. இலங்கை போக்குவரத்து சேவையின் வடமாகாண மனித வள முகாமைத்துவப் பகுதியூடாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் சாலைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தரம் v பதவிக்கு உயர்த்தப்பட்டு மன்னார் சாலையில் சாலை முகாமையாளர் பதவிக்கு நியமித்து உங்களுக்கு வழங்கப்பட்ட சம இலக்கம் கொண்டு 07.03. 2017 அன்று வழங்கப்பட்ட கடிதம் உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இரத்துச் செய்கின்றேன்.

அதன் பிரகாரம் நீங்கள் இதற்கு முன்னர் இருந்த பதவியிலும்,தரத்திலும் ஈடுபட வேண்டும் என்பதை மேலும் அறியத்தருகின்ற போது மேற்படி பதவிக்கு சொந்தமான கடமை நடவடிக்கைகளை முறைப்படி மன்னார் சாலையில் முன்பிருந்த சாலை முகாமையாளரிடம் பாரமளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ-56)

## கால்நடைகளுக்கும் காப்புறுதி திட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 19

கமத் தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் கால்நடைகளுக்கான காப்புறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று சபையின் உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன் கருதி தற்பொழுது மாடுகளுக்கான காப்புறுதிகள் வழங்கப்படுகின்றன. காப்புறுதிப் பணமாக வருடம் ஒன்றுக்கு ஒரு மாட்டின் பெறுமதியின் 3 வீதத்தைச் செலுத்த வேண்டும். மாடுகளுக்கு காப்புறுதிகளை செய்வதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மாடு வளர்ப்போர் எங்கள் ஊடாக காப்புறுதி செய்திருப்பின் அவர்களின் மாடுகளுக்கு ஏதாவது அனர்த்தம் ஏற்படின் அந்த மாட்டின் பெறுமதியின் 85 வீதமான பங்குப் பணத்தைக் காப்புறுதிப் பணமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் காப்புறுதி தொடர்பான விவரங்களை அறிய திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் உள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையுடன் நேரடியாகவோ அல்லது 0212227105 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்புகளைமேற்கொண்டோ மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ள முடியும். என்றார். (ஐ-8)

## 13 பரல் கோடா மீட்பு

கிளிநொச்சி.மார்ச் 19

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 13 பரல் கோடா மீட்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தருமபுரம் உழவனூரில் கசிப்புக் காய்ச்சப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். கோடா பரல்கள், ஈஸ்ட் பைக்கற்றுக்கள், கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபருக்குப் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## 47 கட்டாக்காலிகள் வவுனியாவில் மாட்டின

வவுனியா, மார்ச்19

வவுனியா நகர சபை எடுத்த நடவடிக்கையில் 47 கட்டாக்காலிமாடுகள்பிடிக்கப்பட்டுள்ளனஎன்றுநகரசபைச் செயலாளர் ஆர்.தயாபரன் தெரிவித்தார்.

கடந்தசிலதினங்களாககட்டாக்காலிகால்நடைகளைப் பிடிக்கும்நடவடிக்கைகளைவவுனியாநகரசபைஆரம்பித்துள்ளது. கடந்த புதன்கிழமை முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. கட்டாக்காலிக் கால்நடைகளால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் முன்வைத்த முறைப்பாடுகளைஅடுத்தேஇந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



கடந்தபுதன்கிழமைபிரதான வீதி, கண்டி வீதியில் கட்டாக்காலிகளாக அலைந்த47மாடுகள்நகரசபையினரால்பிடிக்கப்பட்டன. கால்நடைவளர்ப்போர்அவற்றைபட்டிகளில்அடைத்து வளர்க்கவேண்டும். பிடிக்கப்பட்டமாடுகளைஅவற்றின் உரிமையாளர்கள் ஆவணங்களைக் காட்டி, குற்றப் பணத்தைச்செலுத்திப்பெற்றுக்கொள்ளமுடியும். கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். என்று நகர சபைச் செயலாளர்தெரிவித்தார். (ஞ-21)

---

துவாரகேஸ்வரன் மீதான முறைப்பாடு

## யாழ். மனித உரிமை ஆணைக்குழு 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்19

ஊடகவியலாளர் மீதான அவதூறு மற்றும் அச்சுறுத்தல் தொடர்பான முறைப்பாடு ஒன்றுக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில்யாழ்ப்பாணம் பொலிஸாரை மனித உரிமை ஆணைக்குழு முன்பாகத்தோன்றுமாறு அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரான ந.லோகதாயாளன் என்பவர் தொடர்பாக ஐ.தே.கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளர் என்று கூறிக்கொள்ளும் தி.துவாரகேஸ்வரன்என்பவர் முகப் புத்தகத்தில் தொடர்ச்சியாக அவதூறுகளைப் பரப்புகின்றார் என்றுகடந்தஜனவரிமாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

அந்தமுறைப்பாடுதொடர்பாக எந்த நடவடிக்கைகளையும்பொலிஸார்எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. தி.துவார கேஸ்வரன் என்பவர் தொடர்ச்சியாக அவதூறு பரப்புகின்றார்என்றும்கூறப்பட்டது.

இது தொடர்பாக ஊடகவியலாளரால் யாழ்ப்பாணம்பொலிஸாருக்குஎதிராககடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம்மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடுசெய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மனிதஉரிமைஆணைக்குழுவினர்இந்தமாதம்10 ஆம்திகதிக்குமுன்னதாக இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிட வேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்குஎழுத்தில்அறிவுறுத்தியிருந்தனர்.

ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை பொலிஸார் கவனத்தில் எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. முறைப்பாடு செய்தஊடகவியலாளரையும், 3பொலிஸ்அதிகாரிகளையும்எதிர்வரும்23ஆம் திகதி யாழ்ப்பாணம் மனிதஉரிமைஆணைக்குழுவின்முன்பாகநேரில் முன்னிலையாக வேண்டும் என்று பதிவுத் தபால் மூலம் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தஅழைப்பைஅடுத்து பொலிஸார் அவசர அவசரமாக பணியில் நேற்று முன்தினம் இறங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளஇன்றுபொலிஸ் நிலையம் வருமாறு ஊடகவியலாளரை அழைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஞ-105)

---

# உள்ளகப் பொறிமுறையை ஏற்கமாட்டார்கள் தமிழர்கள்

வட மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

வவுனியா, மார்ச்19

இலங்கை நீதிக் கட்டமைப்பில் தமிழர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். உள்ளகப் பொறிமுறை ஊடாகத் தீர்வுகிடைக்கும்என்பதைஅவர்கள் ஏற்கப் போவதில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்செந்தில்நாதன்மயூரன் தெரிவித்தார்.

ஐ.நா. மனிதஉரிமைகள்சபையால் எதிர்வரும் வாரம் முன்வைக்கப்படவுள்ள அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்பு, குமாரபுரம் படுகொலை வழக்கு, திருக்கேதீச்சரம் மனிதப் புதைகுழி தொடர்பனசெயற்பாடுகள்தமிழ்மக்கள் மத்தியில் நீதித் துறையின் மீது நம்பிக்கை இழப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைதொடர்பானஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை இப்போது பேசுபொருளாகியுள்ளது. தமிழ் மக்கள் 60 ஆண்டுகள் பட்ட துன்பங்களுக்குத்தீர்வுகிடைக்காதா என்ற எதிர்பார்ப்பே அதற்குக் காரணம்.

இலங்கையில் ஆட்சி செய்த எந்தப் பெரும்பான்மை அரசும் தமிழர்களின் அபிலாசைகளைப் புரிந்து சிறுபான்மை இனத்தவர்கள் சமமாக வாழ்வதற்கான எந்தவித நல்லெண்ண செயற்பாட்டையும் முன்வைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர்விடயமாகவிருந்தாலும் சரி, இராணுவஆக்கிரமிப்பில்உள்ள காணிகளைவிடுவிப்பதாகஇருந்தாலும் சரி, அரசியல்கைதிகள் விடுதலையானாலும் சரி இழுத்தடிப்புகளையும் பான்னாடுகளின் கண்துடைப்புக்கான செயற்பாடுகளையுமே முன்னெடுத்தன.

இலங்கைதொடர்பானகுற்றச்சாட்டுக்களை உள்ளக பொறிமுறையினூடாக விசாரணை செய்வதற்கும் இலங்கை அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. எமதுகண்முன்னேயே இலங்கை நீதித்துறையை நம்பி ஏமாந்த வரலாறுகள் பாடம்புகட்டி நிற்கின்றன.

தற்போதைய அரச தலைவர் பதவியேற்ற காலத்தில் அப்போதைய பிரதம நீதியரசராக இருந்த மொகான் பீரிஸ் தன்னை குறித்த பதவியில் இருந்துஅகற்றவேண்டாம்எனவும் எதனைநீங்கள்சொன்னாலும்செய்வதற்கு தயாராக இருக்கின்றேன் என்றுதன்னிடம்கூறினார்என்றும் அரசதலைவரேஅண்மையில்கூறியிருந்தார். மக்கள்கடவுளாகநம்பும் ஒருநீதிபதியேஇவ்வாறுசெயற்பட்ட வரலாறுஅரசதலைவரால்பதிவிடப்பட்டுள்ள நிலையில் பன்னாட்டு நீதிபதிகளை வேண்டாம் என்பது வரலாற்றுத் தவறாகிவிடும்.

இலங்கை நீதிபதிகளை மாத்திரமே உள்ளடக்கிய விசாரணை என்பது திருடனே திருடனை விசாரணை செய்வதற்குஒப்பானதாகஅமைந்துவிடும். பன்னாட்டுநீதிபதிகள் உள்ளடங்கிய கலப்பு நீதிமன்ற முறையே இலங்கைபோன்றநாடுகளைவிசாரணை செய்வதற்கு சாலச்சிறந்ததாகஅமையும். என்றார். (ஞ-21)

---

யாழ். நகர பிரதான வீதிகளில்

## கண்காணிப்புக் கமரா பொருத்தும் திட்டம் பல மாதங்களாக கிடப்பில்

பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச்19

யாழ். நகரப்பகுதியின் பிரதான வீதியில் கண்காணிப்புக்கமராக்கள் பொருத்தப்படும்என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

நகரில் கண்காணிப்புக் கமராக்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளநிலையில்யாழ். மாநகரசபைஇந்தவிடயத்தில்அசமந்தப்போக்கில் உள்ளது என்றும் அவர்கள்தெரிவித்தனர்.

நல்லூர் ஆலய திருவிழாக் காலத்தில் அந்தப் பகுதியில்கண்காணிப்புக்கமராக்கள்பொருத்தப்பட்டன. திருவிழா முடிவுற்றதும் அவை யாழ். நகரின் பிரதான வீதிகளில்பொருத்தப்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் கூறியிருந்தார்.

"பல மாதங்கள் கடந்துள்ளநிலையில்அதற்கான ஏற்பாடுகள் எவையும்எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. யாழ். நகரப் பகுதியில் கண்காணிப்புக் கமராக்களின் அவசியம் அதிகரித்துள்ளது. கண்காணிப்புக்கமராக்கள் பொருத்தப்படுவதால் குற்றச் செயல்களும், சட்டவிரோதச் செயற்பாடுகளும் கட்டுப்படும். கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தும் நடவடிக்கையை யாழ். மாநகர சபை விரைந்து மேற்கொள்ள வேண்டும்." என்று பொதுமக்கள் கூறினர்.

இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ். மாநகர சபை ஆணையாளர்பொ.வகீசனைத் தொடர்பு கொள்ள முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை. (ஞ-8)

---

# அதிபர்தாக்கியதில் தரம் 8 மாணவி மயங்கி வீழ்ந்தார் என முறைப்பாடு

கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, மார்ச்19

தரம் 8 இல் கல்வி கற்றும் மகள் பாடசாலையில் வழங்கப்பட்டவீட்டுப்பயிற்சியைச்செய்யவில்லை என்று தெரிவித்து அதிபரால் தாக்கப்பட்டார். அவர் மயங்கி விழுந்திருந்தபோதும் 2 மணித்தியாலங்களாகவைத்தியசாலையில்சேர்க்கப்படவில்லை. ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முயற்சித்தபோதும் அதிபர் அவர்களைத் தடுத்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவியின் தாய் கிளிநொச்சிப்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடுசெய்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட பொலிஸார்நேற்றுமுன்தினம்மாலைபாடசாலை அதிபரை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவரை ஆள் பிணையில் செல்ல அனுமதித்தது நீதிமன்று.

கிளிநொச்சி, கிராமம்ஒன்றிலுள்ள பாடசாலையில் கற்கும் மாணவியே பாதிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை காலை 6 மணிக்கு மாணவி வகுப்புக்குச் சென்றார் என்றும், மாணவி வீட்டுப் பயிற்சியைச் செய்யவில்லை என்று அதிபர் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது. தாக்கப்பட்ட மாணவி மயங்கி விழுந்துள்ளார். மாணவிக்கு வைத்திய உதவிகள் எதுவும் வழங்காது பாடசாலையிலேயே அதிபர் வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. பதற்றமடைந்த சக மாணவர்கள் மயக்கமுற்ற மாணவியை வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லமுயன்றபோதும்அதிபர் அதைத் தடுத்தார் என்றும் கூறப்படுகின்றது.

மாலையில்மாணவிவீடுசெல்லும்போதும்இந்தச் சம்பவத்தை யாரிடமும் கூறக் கூடாது என்று அதிபரும், ஆசிரியர்ஒருவரும்கடுமையாகஎச்சரித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக அறிந்த மாணவியின் தாய் அதிபரிடம் அது தொடர்பாகக் கேட்டுள்ளார். மாணவியின் தாயிடம் மன்னிப்புக் கேட்ட அதிபர் இனிமேல் இவ்வாறான சம்பவம் நடக்காது, யாரிடம் இதுபற்றிக் கூறாதீர்கள் என்று தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.

மாணவியின்தாய்இதுதொடர்பாகபொலிஸ்நிலையத்தில் முறையிட்டார். ஏனைய மாணவர்களின் நன்மை கருதியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது என்று அவர் தெரிவித்தார். (ஞ-21,101)

---

## புற்றுநோய் விழிப்புணர்வு 17

புற்றுநோய் தவிர்ப்போம்! மகிழ்வாக வாழ்வோம்!!

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால், தகுந்த சிகிச்சையின் பின் பூரண குணமடைய முடியும்.

சந்தேகத்துக்குரிய அறிகுறிகள் காணப்படின், தாமதம் இன்றி மருத்துவ ஆலோசனை பெறவும்

SKYMOON TRAVELS & TOURS (PVT) LTD.

We make your dream comes true !!!!!!

வணக்கம் யாழ் உறவுகளே.....

we do → Student, Sponsor, Job, Express, Tourist, Visitor Visas

Rejected Visas.....please bring your file to us we will 100% Guarantee your Visas

Please Call or Visit our Office....
No: 378, George R De Silva Mawatha
Colombo-13
Andrew:- 0112 330 440

More info
Srima:- 0777684365

# புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்குரிமை தொடர்பில் ஆராய்வு

கொழும்பு,மார்ச் 19

புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுப்பது பற்றி ஆராய்ந்து வருவதாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சர் தலத்தா அத்துகொரல தெரிவித்தார்.

அனுராதபுர கல்நாவ பிரதேசத்தில் இடம்பெற்ற புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு, குடிவரவு, குடியகல்வு திணைக்களம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுடன் பேச்சு நடத்தப்படுவதாகவும், விரைவில் சட்டமா அதிபருடனும் கலந்துரையாடவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ரஷ்யாவுக்கு இன்று பயணமாகிறார் மைத்திரி

ரஷ்யாவின் அரச தலைவர் விளாடிமிர் புடினின் அழைப்பை ஏற்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். ரஷ்யாவுக்கு இன்று பயணிக்கும் அரச தலைவர் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை அங்கு தங்கியிருப்பார் என்றும் அரச தலைவரின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது. இதன் போது, இரு நாட்டுக்கும் இடையே கலாசாரம், சுற்றுலா மற்றும் பொருளாதார துறைகள் சார்ந்த பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச தலைவருடன், அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, ஜோன் அமரதுங்க மற்றும் எஸ். பி. நாவின்ன ஆகியோரும் உடன் செல்லவுள்ளனர் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)






# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு
Robin Ey - 20, Robin Ey - 18
வீட்டுப் பாவனையிலுள்ள நீர் இறைக்கும் மெசின்கள் விற்பனைக்கு உண்டு.
**077 584 2103**

### கார் விற்பனைக்கு
Doctor இன் பாவனையில் உள்ள புதிய Alto Car விற்பனைக்கு உண்டு.
**077 296 8879**

### வீடும் காணியும் விற்பனைக்கு
விநாயகர் வீதியிலுள்ள (சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடி) வீட்டுடன் கூடிய காணியும், அதே இடத்தில் அத்திவாரத்துடன் கூடிய 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
**077 968 8132, 077 953 2365**

### காணி விற்பனை
பருத்தித்துறை வியாபாரி மூலை மையிலன் பேக்கரிக்கு முன் ஒழுங்கையில் 200m தூரத்திற்குள் தச்சன் ஒலை பெயர் கொண்ட பனைமரங்களுடன் ஆன நான்கு பக்கமும் தூண் போட்டு முட்கம்பியால் அடைக்கப்பட்ட 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 809 5014**

### விற்பனைக்கு
சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கற்பூரவில்லைகள் உற்பத்தி செய்யும் மிஷின் விற்பனைக்குண்டு.
தற்போது பாவிக்கப்பட்ட நிலையில் உள்ளது. (AIA/2134) (22)
**077 580 4194**

### விற்பனைக்கு
உறுதியான இரும்பு நாய்க்கூடு 4'x5'x5' அளவில் விற்பனைக்குண்டு.
பறவைகள் வளர்ப்பதற்கும் உகந்தது.
**077 620 6199**

### வீடு விற்பனைக்கு
ஒஸ்கா வீதி, உரும்பிராயில் சகல வசதிகளுடனும் மூன்று அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 077 746 0447** (J7668) (12,17,18)

### விற்பனைக்கு
37 (351) மணிக்கூட்டு கோபுர வீதியில் அமைந்துள்ள இருமாடிகளைக் கொண்ட கடைத்தொகுதியும் அதனோடு இணைந்த வீடும் விற்பனைக்குண்டு.
**072 684 1535**

### பூக்கன்றுகள் விற்பனை
நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள், மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.
**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**
**யாழ். அக்கூரியம்**
**917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.**
**075 991 0060, 077 707 0711**

### காணி வீடு விற்பனைக்குண்டு
கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோயில் அருகில் உள்ள 2 1/2 பரப்புக் காணியில் சகல வசதியுடன் அமைந்துள்ள இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு. கல்வியியற் கல்லூரிக்குச் செல்லும் வீதியாலும், யாழ்.பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள கிளுவாணி வீதியாலும் செல்லமுடியும்.
**077 876 6011**

## தேவை

### வேலையாள் தேவை
யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் சிற்றுண்டிச்சாலை ஒன்றுக்கு றொட்டி தயாரிப்பாளர் ஒருவர் தேவை.
**076 857 0889/ 077 254 0384**

### தேவை
திருநெல்வேலியில் போட்டோ கொப்பி, பாடசாலை உபகரண விற்பனை நிலையத்துக்கு பெண் பிள்ளைகள் தேவை.
**077 593 5294**

### சமூகப் பணிக்கான காணி தேவை
தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றின் சமூகப் பணிக்காக கிளிநொச்சியில் நான்கு பரப்புக் கொண்ட உறுதிக் காணி தேவையாகவுள்ளது. மேற்படி காணியானது ஏ-9 வீதிக்கு அண்மையாகவும், கிளிநொச்சி நகர எல்லைக்குட்பட்டதாகவும் இருத்தல் விரும்பத்தக்கது. மேற்படி எல்லைக்குள் காணி விற்க விரும்புகின்றவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
**077 731 2189, 077 880 1207**

### மணமகள் தேவை
யாழ் இந்து விவாகரத்துப் பெற்ற உயர்பதவியிலிருக்கும் பொறுப்புக்கள் அற்ற 44 வயது ஆயிலிய நட்சத்திரம் மணமகனுக்கு மணமகள் தேவை. படம் குறிப்பு, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும்.
**sabajeevan99@gmail.com**

### மணமகள் தேவை
1988.12.01 இல் பிறந்த, பூர நட்சத்திரம், 3ஆம் பாதம், 8இல் செவ்வாய், லக்கினபாவம் 68, சந்திர பாவம் 34, மொத்தபாவம் 102 உடைய நகைத்தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
**071 085 7114**

### மணமகள் தேவை
கொழும்பு, வெள்ளவத்தையில் வசிக்கும் கட்டட பொறியியலாளராக பணியாற்றும் றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மணமகனுக்கு படித்த அழகான மெல்லிய மணமகள் தேவை.
**077 444 0277**

### வேலையாள்கள் தேவை
அரிசி ஆலை ஒன்றிற்கு ஆண் கூலி வேலை ஆள்கள் தேவை.
18 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது. (AIA/2133) (22)
**075 619 0242, 077 511 0805**

### கணக்கு உதவியாளர் தேவை
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு (கொக்குவில்) கணக்கு உதவியாளர் தேவை.
தகைமையுடையவர் நேர்முகத் தேர்விற்கு இருபாலை எரிபொருள் நிரப்பு நிலையம் A.M தனநாயகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பி.ப 2.00 மணி தொடக்கம் பி.ப 4.00 வரை சமூகம் தரவும்.
**021 223 0397**

## ஏனையவை

### வேலைவாய்ப்பு
Site Supervisor/ Technical Assistant
(CSS/NCED with minimum 6Month Traning)
Send the CV to
evergreeneng2005@gmail.com
**077 349 6085/ 077 364 3975**

### அனெக்ஸ் வாடகைக்கு
நல்லூரில் TCT க்கு அண்மையில் ஒரு அறையுடன்கூடிய அனெக்ஸ் உண்டு.
**T.P - 075 285 6386**

### விற்பனைக்கு
புதியவகை Super cub 110cc Motorbike, Sony digital Camera
(22.03.2017 இற்கு இடையில் தொடர்பு கொள்க)
**தொடர்பு: 075 763 0607**

### உடல் எடை குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைக்க வேண்டுமா?
- ஊளைச்சதையா?
- வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
- எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை, கிறீம்)

**ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும்.**
**கிறீம் எம்மிடம் உண்டு**
விலை 3500/= 5500/= 9000/=
**இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரீதமான மாற்றத்தை உணர்வீர்கள்**
பதிவு இல: 16168
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155

### இயேசு கிறிஸ்துவைப் பற்றி கற்பிக்கப்படுபவைகளை
மிகவும் எளிமையாக வேதாகமத்தில் இருந்து மட்டுமே கற்பிக்கப்படும்.
மார்ச் 19 ஆம், 26 ஆம் திகதிகளில் அமையும், ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5.30 மணிக்கு 109, கண்டி வீதியில் அமைந்துள்ள YMCA மண்டபத்தில் நடைபெறும். (இக்கூட்டங்கள் ஆங்கிலத்தில் நடைபெறும்)
**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் மாறாதவராயிருக்கிறார்.**
(எபிரேயர் 13:18)
**077 442 9234/ 077 496 3476**

### வாடகைக்குண்டு
யாழ்.நகரில் வேம்படி வீதி, திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலையின் பிரதான வாசலுக்கு முன்பக்கமாக கடையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
**075 756 3588, 071 986 1989**

### JCB பைக்கோ வாடகைக்கு
JCB பைக்கோ வேலைகளுக்கு வாடகைக்கு உண்டு.
**077 860 0093**

### மணமக்கள் தேவை
ஜேர்மன், கனடா, இத்தாலி, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு மணமகள், மணமகன் தேவை.
**076 725 0144/ 021 491 9370**


### காணி விற்பனைக்கு
யாழ் நகரிற்கு மிக அருகில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
**077 361 1282**

### பெயர்மாற்றம்
இல. 426, திருநகர் தெற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட **கந்தசாமி பராசக்தி** ஆகிய எனது பெயரை இன்று முதல் **கந்தசாமி பரமேஸ்வரி** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இந்தப் பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும், மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.
**- கந்தசாமி பரமேஸ்வரி -**

### வாடகைக்கு (பெண்களுக்கு)
உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் ஆசிரியை / மாணவிகளுக்கு Rooms வாடகைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு: 077 335 0910**

### காணி விற்பனைக்கு
கொள்ளுப்பிட்டி கார்மல் வீதியில் 7.2பர்ச் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (Galle Road, Liberty Plaza Duplication Road, Bishops College இற்கு அருகில்) IP = 8.5 lakhs... பேசித் தீர்மானிக்கலாம்.
**077 350 6089, 077 758 7566**

### வீடு விற்பனைக்கு
நான்கு அறை, இணைந்த குளியலறை, பெரிய சமையல் அறை, 2பரப்பு நிலம் நாற்புறமும் மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு நல்ல நிலையிலுள்ள தளபாடங்களும் உண்டு - புறம்பாக ¾ பரப்பளவில் வெறும் நிலமும் உண்டு.
**22/1, 22/2 பழங்கிணற்றடி பிள்ளையார் வீதி, கலாசாலை றோட், திருநெல்வேலி.**
**077 251 7640**
**நேரில் வரவும்.**



### மன நிம்மதி பெற மலையாள மாந்திரீகம்
தொடர் தோல்வியா, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனையா?
வெளியில் செல்ல முடியாத பிரச்சினையா? துன்ப துயரமா? எல்லை மீறிய காதலா? மன விரக்தியா? தூக்கமின்மையா? சகல பிரச்சினைகளிலிருந்தும் விடுபட வாழ்வில் வெற்றி பெற வாருங்கள்.
**Rev.P.K.சாமி (J.D.G.A.N) JP**
**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்**
**மலையாள மாந்திரீகம் உச்சாடபீடம்**
**இல: 23, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**
Tel- 011 234 2463/64

### வாடகை
யாழ்ப்பாணம், உரும்பிராய் சந்தியில் இருந்து 5 நிமிட நடை தூரத்தில் தற்பொழுது அலுவலக முகாமையாளரினால் வதிவிடமாகப் பயன்படுத்தப்படும் முற்றாக ரைல்ஸ் பதித்த A/C இணைந்த குளியலறையுடன், 3 அறைகள், 2 குளியலறைகள், சமையலறை, விசாலமான வரவேற்பறை, களஞ்சிய அறை, வாகனத் தரிப்பிடம், அழகிய பூந்தோட்டம், தோட்டத்துடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**077 660 2821**

### விஷேட பல் வைத்திய சேவை
- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 • 09 • 1926

இறப்பு 12 • 03 • 2017

## திருமதி சிவபாக்கியம் செல்லப்பா

யாழ் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் செல்லப்பா 12.03.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சோதிமலர், தவமணி, இரவீந்திரன், தயாநிதி, ஜெயம், சுமதிபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகநாதன், காலஞ்சென்ற தங்கராசா, சறோஜினிதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் திபாகரன் - மாயா, தினேஷ் - கார்லி, மதிரூபன் - மயூரா, பிரதீஷ் - வினோதிகா, நிஷாந் - சாம்பவி, நிகாஜா - ரமேஷ்குமார், உஷாந் - டினுஷா, திவ்யா - ரமேஷ்குமார், வைஷ்ணவி - லிங்கேஷ், நிந்துஜா - இன்பகுமார், ரிஷி, மிருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தினமியா, ஷெலவன், ரெசா, ஹருண், அக்ஷயா, வர்ணீஷ், லஸ்வின், டியாவின், புவிதா, தேஷன்யா, கிரண்யா, ரியாஸ்மி, அஷ்வினா, டிவானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வைரவர் கோயில் லேன்,**
**சுன்னாகம் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(AJA CS 2162) (14)

## வாடகைக்கு

கொழும்பு தெகிவளையில் படிக்கும், வேலை பார்க்கும் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலில் அறைகள் வாடகைக்கு உண்டு.

**077 769 8553/ 076 769 8554**

## யாழ்ப்பாணம்/கொழும்பில்

வீடு காணிகள் வாங்கவும், விற்கவும் தொடர்பு கொள்ளவும்.
Golden Property management Center

**070 210 3634**

## சிறுநீரகம் தேவை

27 வயதுடைய ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O அல்லது $B^+$ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. வழங்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**078 700 1332**

## காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக இரு கடைகளுடன் மூன்று பக்க மதில்களுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**076 710 1082**

THE HALO TRUST

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலக ளாவிய ரீதியில் 16 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்காலவேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண், பெண இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணி வெடியகற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதாகும். எனவே இதனைக் கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க் கப்படுகின்றது.

குறிப்பு: எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 26 ஆம் திகதி பங்குனி மாதம் 2017 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்க முடியும்.

**ஹேலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

## AHUJA®

### ஒலிபெருக்கிச் சாதனங்கள்



60வது ஆண்டுகளுக்கு மேலான நம்பிக்கையின் சின்னம்

உத்தரவாதத்துடன்
குறைந்த விலை
பலவித ரகங்கள்
தரத்தில் உயர்ந்தது
நீடித்த உழைப்பது



- அம்பிளிபயர்கள்
- மைக்ரோபோன்கள்
- கொன்பரன்ஸ் சிஸ்டம்கள்
- றிப்லெக்ஸ் ஹோன்கள்
- மெகாபோன்கள்
- ஆடியோ மிக்ஸ்சர்
- பூஸ்டர் அம்பிளிபயர்கள்
- கொலம் ஸ்பிக்கர்ஸ்

***தரம் இல்லாத போலியான AHUJA பொருள்கள் விற்பனையில் இருப்பதால் தரம் உள்ள AHUJA பொருள்களை எங்கள் முகவரிடம் கேட்டு வாங்கவும்***

அனைத்து மத வழிப்பாட்டு ஸ்தலங்களுக்கு, பாடசாலைகளுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்

### றொபர்ட் ஏஜன்சீஸ் (பிறை) லிமிட்டட்

இல: 88, றெக்லமேசன் வீதி, கொழும்பு - 11. தொ.பே.:242 1009(Hunting) பெக்ஸ்:244 9590.
ஈமெயில்: sales@robertagencies.com கிளை : 108, கெய்சர் வீதி, கொழும்பு - 11.

www.robertagencies.com

# யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணம்

# JAFFNA PROTESTANT DIGITAL ARCHIVE

## எண்ணிம ஆவணகப் பயிற்சித் திட்டத்துக்கான விண்ணப்பம்

## CALL FOR APPLICATIONS - DIGITAL ARCHIVES TRAINING PROGRAMME

யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்தின் அரிதான ஆவணங்களின் காப்புத் தொடர் பான திட்டம் யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து சமூகத்தினரின் அரிதான ஆவணங்களினைக் கண்ட டைந்து எண்ணிமப்படுத்துவதற்கான முன்முனைவாக அமைகிறது. இது ஆக்காடியாவின் நிதியுத வியுடன் பிரித்தானிய நூலகத்தின் முகாமையின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மரபுரிமைப் பேணுகை, எண்ணிமப்படுத்தல் ஆகியவற்றில் ஆர்வமுள்ள பன்னிரண்டு மாணவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றை இவ்ஆவணகமானது ஆரம்பிக்கவுள்ளது. இப் பயிற்சித் திட்டமானது வரலாறு, மரபுரிமைகளினைப் பேணுதல் மற்றும் எண்ணிமப்படுத்தல் ஆகியன பற்றிய ஒன்பது அமர்வுகளை உள்ளடக்கியதாக அமையும். இவ்வமர்வுகள் தமிழ்மொழியில், யாழ்ப்பாணத்தின் மிகச்சிறந்த வல்லுநர்களினால் நடாத்தப்படும். இப்பயிற்சித் திட்டத்தின் நிறைவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்திடமிருந்து சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் எதிர்காலத்தில் இடம்பெறும் தொழில்வாய்ப்பின்போது இவர்கள் உள்ளீர்க்கப்படலாம்.

**வகுப்புநேரங்கள்:** திகதி: 27.04.2017 - 20.05.2017
செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் பி.ப 4.00 – மாலை 6.00 மணிவரை
சனிக்கிழமைகளில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரை

10.05.2017 - 14.05.2017 வரையான வெசாக் விடுமுறை நாட்களில் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது.

**வேண்டப்படும் கல்வி மற்றும் முன்னனுபவங்கள்:**

- க.பொ.த சாதரணதரப்பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்றிருத்தல் மிக அவசியமற்றதாயினும் ஆங்கில அறிவிருப்பின் நல்லது.
- நூலகவிஞ்ஞானம், மரபுரிமைமுகாமைத்துவம், வரலாறு மற்றும் சமூக்வியற் துறைகளில் ஆர்வமிருப்பின் நல்லது.

**வேண்டப்படும் தகுதிகள்:**

- நேரமுகாமைத்துவம் மற்றும் மற்றவர்களை மதிப்பதோடு நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
- கேட்டல் மற்றும் தெளிவாகத் தொடர்பாடத்தக்க தொடர்பாடற் திறமை இருத்தல் வேண்டும்.
- குழுச்சூழலோடு இணைந்து தொழிற்படத்தக்கவராகவும் சமத்துவமான பால்நிலைப் பங்கு பற்றலினை ஊக்குவிக்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

***மேற்குறிப்பிட்ட தகைமைகளுடைய பெண்கள் விண்ணப்பிப்பதையும் ஊக்குவிக்கின்றோம்.***

**விண்ணப்பிக்கும் முறை:**

ஆர்வமுள்ளவர்கள், எங்களது இணைய முகவரியான http://jaffnapdl.org/digitalarchivesapplication ஊடாக விண்ணப்பிக்கலாம். தபால்மூலம் விண்ணப்பிப்பதற்கு http://jaffnapdl.org/digitalarchivesdownload எனும் இணைய முகவரியில் விண்ணப்பப் படிவத்தினைத் தரவிறக்கம் செய்து "யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகம். இல.9/4, பிளெச்சர் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை என்ற முகவரிக்கு ஏப்ரல் 1ஆம் திகதிக்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பிவைக்கலாம்.தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் மாத்திரமே தொடர்புகொள்வோம்.
மேலதிக தகவலுக்கு JaffnaEAP835@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி 01. 04. 2017**

The Jaffna Protestant Digital Archive (JPDA), an Endangered Archives Programme funded by Arcadia and managed by the British Library, is designed to locate and digitize rare and endangered archival materials from Jaffna's Protestant community. The JPDA will host a training program for twelve students interested in heritage preservation and digitization. Students will attend nine sessions on history, preservation, and digitization conducted by local Jaffna experts. All sessions will be conducted in Tamil. Upon course completion, students will receive a letter of acknowledgement from the JPDA and may be considered for a future paid internship position.

**Timeframe:** April 27, 2017 - May 20, 2017.
Tuesdays & Thursdays : 4a.m - 6p.m
Saturdays : 9a.m - 4p.m,
May 10, 2017 - May 14, 2017 Vesak Poya Holiday

**Required Education and Experience**

- Must have completed O/L
- Competency in English **not** required, but advantageous.
- Interest in library science, heritage management, history, or sociology advantageous.

**Required Competencies**

- Professionalism: arrives on time, respectful to classmates and class decorum
- Communication skills: listens and communicates clearly
- Teamwork: contributes to a team environment and promotes equal gender participation

**Women with the above qualifications are encouraged to apply.**

**How to apply:** Interested candidates are invited to apply online at **http://jaffnapdl.org/digitalarchivesapplication** To apply by post, please download application form at **http://jaffnapdl.org/digitalarchivesdownload** and send to **Jaffna Protestant Digital Library, 9/4 Fletcher Lane, Chundukuli, Jaffna, Sri Lanka.** Applications must be received by **April 1, 2017.** Only shortlisted candidates will be contacted. For more information, **email JaffnaEAP835@gmail.com.**

**Posting period: From March 18, 2017 to April 1, 2017.**

## வேலையாள் தேவை

யாழில் இயங்கவுள்ள பிரபல Event Management நிறுவனத்துக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை. உங்களது சுயவிவரக்கோவையை /CV உடனடியாக அனுப்பவும். info@remlk.com or 0717643322

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg) மொத்தமாகவும் (ரூபா. 100), சில்லறையாகவும் (ரூபா. 110) பெற்றுக்கொள்ளலாம்

**சிவா நறுமணப் பூங்கா**
**இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரச் சந்திக்கு அருகில்)**

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- ★ தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
- ★ இள நரையா? ★ முடிகொட்டுகிறதா?
- ★ தலையிடியா? ★ பேன், பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சைவேர், மருதாணி, கருசலாங்கண்ணி, கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை 100 % இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்

பதிவு இல: 16168
077 263 9037 **221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## வீடு, காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் புகையிரத நிலைய வீதியில் 4பரப்புக் காணியில் ஆறு அறைகள் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

சாவகச்சேரி நகரப்பகுதியில் புகையிரத நிலைய வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 47 பேர்ச் காணி விற்பனைக் குண்டு.

சதா - 00447956288671
மூர்த்தி - 077 467 2408
உமாசங்கர் - 077 770 9249
Email: lathas77@aim.com

## வீடு விற்பனைக்கு

முத்திரைச்சந்திக்கு அருகில் கல்விக் கந்தோருக்கு அண்மையில் அமைந்திருக்கும் புதிய இரண்டு மாடி வீடு விற்பனைக்கு. எட்டு அறைகள், ஆறு பாத்ரூம், நல்ல தண்ணீர், வாகன வசதி, மேல்வீடு, கீழ்வீடு முழுவதும் மாபிள் பதித்த நிலையில் உள்ள புதிய வீடு. செம்மணி வீதி, இல.45, செல்லர் வீதியில் உள்ளது. காணி மூன்று கால் பரப்பு (3 ¼ ), நாலுபக்க மும் சுற்று மதில் உள்ளது. எல்லா வற்றுக்கும் வசதியான வீடு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
S.சாந்தலிங்கம் -
077 412 6435, 077 385 4303

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணினி இயக்குனர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்:**

**கணக்காளர் (உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்.
- வருமான வரி கணக்குகள் தொடர்பான அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினி இயக்குனர்**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாளஅட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகிய வற்றை இணைத்து 05.04.2017 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல- 5526
மே.பா- உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (AJA/2142) (22)

## EXECUTIVE NIGHT

DJ/ EXECUTIVE BUFFET/ DANCE/ PHOTO/ MEET & GREET/ GAMES
26.03.2017 06.00 Pm at GREEN GRASS HOTEL - JAFFNA LIMITED TECKETS ONLY

070 336 3339, 071 764 3322

## வேலையாள் தேவை

**Lovely Flower Center**

குறித்த நிறுவனத்திற்கு பெண் வேலையாள் தேவை.

**தொடர்புகளிற்கு:**
Proprietor: R. Thiliban 077 400 5023
**277, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 492 8622** (AJA/2213) (22,17)

## மணமகள் தேவை

கனடாவில் Engineer ஆக பணிபுரியும் யாழ் இந்து மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அழகான படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

கனடாவில் வசிக்கும் 38 வயதான யாழ் இந்து மதத்தைச் சேர்ந்த செவ்வாய் குற்றம் இல்லாத விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு அழகான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

Viber 0014 1666 61855/ 0016 4750 43336

## புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

**DIPLOMA IN ENGLISH (6 MONTHS)**



16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறந்த பாடநெறி (பல்கலைக்கழகத்திற்கு தெரிவான / பல்கலைக்கழக / உயர் கல்வி மாணவர்கள் / வெளிநாடு செல்ல இருப்போர் / அலுவலர்கள்)

**ஆரம்பம்: 01.04.2017**
**காலை 7.30 மணி**
**(சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 பாடநெறி நடைபெறும்)**

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில்)

Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

## கணக்கியல் உதவியாளர் தேவை (Accounting Assistant)

கொடிகாமத்தில் இயங்கிவரும் அரச ஒப்பந்தங்களை நிறைவேற்றும் (Contract Works) எமது நிறுவனத்தின் உப அலுவலகத்துக்கு மேற்படி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டியதாக உள்ளது. (பெண்கள் விரும்பத் தக்கது)

**தகுதி**

- கணக்கியல் துறையில் ஏதாவது ஒரு கற்கை நெறியினை நிறைவு செய்திருத்தல்.

அல்லது

- உயர்தரத்தில் (A/L) வர்த்தகத்துறையில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

- க.பொ.த சாதாரண தரத்தில் (O/L) கணிதம், கணக்கியல் என்பவற்றில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

சம்பளம்
பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு
நிர்வாக உத்தியோகத்தர் (A.O)
076 824 5457

சுயவிபரக் கோவையினை
077 335 2164
என்ற Viber இலக்கத்தின் ஊடாக அனுப்பி வைக்கவும்.
நேரம் (11.30 - 4.00 Pm) வரை

# கலப்பு நீதிமன்றை அமைக்க ஒரு போதும் இடமளியோம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இன்று கலப்பு நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடமிருந்திருக்காது. எனினும் கலப்பு நீதிமன்றம் என்ற ஒன்றை அமைப்பதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. இவ்வாறு மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் எவரேனும் போர்க் குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவார்களானால், ஊடகவியலாளர்களைக் கடத்திக் கொலை செய்வார்களாயின், சாதாரண மக்களுக்கு தொல்லை கொடுத்தால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் பற்றிப் பதிவாகியிருந்தது. எனினும் அந்தக் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று கலப்பு நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டுமென யார் கூறினாலும் அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்படும். எமக்கு வலுவான நீதிமன்றமும் திறமையான நீதிபதிகளும் இருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் ஒவ்வொரு மார்ச் மாதத்திலும் மின்சார நாற்காலி பற்றி பேசிக்கூச்சலிட்டவர்கள் அது பற்றி மறந்து விட்டார்கள். அது சிலருக்கு நினைவில்லை. மார்ச் மாதங்களில் இவ்வாறானவர்களின் அவலக்குரலை கேட்க முடியாத நிலை காணப்பட்டது. சிலர் ஒவ்வொரு மார்ச் மாதத்திலும் மின்சார நாற்காலி பற்றிப் பரப்புரை செய்தனர். இன்று மின்சார நாற்காலி இருக்கின்றதா என்பதே தெரியாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக பதவி ஏற்றுக் கொண்ட தன் பின்னர் மின்சார நாற்காலிப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் - என்றார். (ஐ)

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021-2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## பெருவில் வெள்ளப்பெருக்கு இதுவரை 62பேர் உயிரிழப்பு

லிமா, மார்ச் 19

தென்னமெரிக்க நாடான பெருவில் கடந்த ஒருவார காலமாக பெய்துவரும் கனமழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக இதுவரை 62 பேர் சாவடைந்தனர்.

பெருவின் பல்வேறு நகரங்களில் தற்போது அசாதாரண காலநிலை நிலவுகிறது. வெள்ளப்பெருக்குக் காரணமாக சாவடைந்த 62 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகள் இன்னும் முழுமையாக நிறைவடையவில்லை. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

ஒரு லட்சத்து 15 ஆயிரம் வீடுகள், 117 பாலங்கள், 20 ஆயிரம் கால்நடைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் பொருளாதார இழப்பு பல மில்லியன் டொலர்களைத் தாண்டும் என்று சொல்லப்படுகிறது.

இது ஒரு தீவிர காலநிலைப் பிரச்சனை. 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு தமதுநாடு சந்திக்கும் மற்றொரு பெரிய நிகழ்வு இது என பெரு அதிபர் பெட்ரோ தெரிவித்தார். கடந்த இரு மாதங்களாக பெரு, காட்டுத்தீயினால் மிகவும் பாதிக்கப்பட்டது. தற்போது மற்றொரு தலையிடியாக வெள்ளப் பெருக்கு வந்தமைந்துள்ளது. (ம)









இப்பொழுது
எங்கள் மடிக்கணினிகளுக்கு
0% முன் கட்டணம்
0% வட்டி
FREE DONGLE WITH 1 YEAR DATA
15 மாதங்கள் வட்டி இல்லாமல்
HSBC கடனட்டைதாரர்களுக்கு 24 மாதங்களுக்கு வட்டியற்ற தவணைகள்.
HSBC
acer
explore beyond limits™
hp
Lenovo
DUAL CORE & TABS
ACER QUAD CORE
ES1-533
Quad Core N3450 Processor
4GB RAM
500GB HDD
15.6" Display
Linux
1 Year Warranty
ரூ.56,990
விசேட விலை
ரூ.49,990
மாதமொன்றிற்கு
ரூ.2,190 இலிருந்து
LENOVO TAB3 710i
1.3QC Processor
7" Display
16GB Storage
1GB RAM
0.2MP Front
2MP Rear camera
Up to 9 hours battery
3G/Wifi/ Call Function
1 year warranty
ரூ.29,900
விசேட விலை
ரூ.22,900
மாதமொன்றிற்கு
ரூ.1,246 இலிருந்து
i3 NOTEBOOKS
HP AY i3
Intel i3-7th Generation
4GB RAM
1TB HDD
Intel Graphics
15.6" Display
1 Year Warranty
ரூ.79,900
விசேட விலை
ரூ.72,900
மாதமொன்றிற்கு
ரூ.3,190 இலிருந்து
ACER E5-575G CORE i3
Core i3-7th Generation
6GB RAM
1TB HDD
Intel Graphics
15.6" Display
ரூ.81,990
விசேட விலை
ரூ.71,990
மாதமொன்றிற்கு
ரூ.3,150 இலிருந்து
IP 300 i3
Intel i3-6100
4GB RAM
1TB HDD
Intel Graphics
15.6" Display
1 Year Warranty
ரூ.69,900
மாதமொன்றிற்கு
ரூ.3,059
இலிருந்து
i5 NOTEBOOKS
HP AY i5
Intel i5-7th Generation
4GB RAM
1TB HDD
15.6" Display
Windows 10
ரூ.99,900
விசேட விலை
ரூ.89,900
மாதமொன்றிற்கு
ரூ.3,933
இலிருந்து
HP AY i5 VGA
Intel i5-7th Generation
4GB RAM
1TB HDD
15.6" Display
2GB VGA
Windows 10
ரூ.102,900
விசேட விலை
ரூ.92,900
மாதமொன்றிற்கு
ரூ.4,064
இலிருந்து
ACER E5-575 CORE i5
CORE i5-7th Generation
4GB RAM
1TB HDD
15.6" Display
2GB Nvidia 940 VGA
1 Year Warranty
ரூ.99,990
விசேட விலை
ரூ.89,990
மாதமொன்றிற்கு
ரூ.3,940
இலிருந்து
i7 NOTEBOOKS
IP310 i7
Intel i7-7th Generation
8GB RAM
1TB HDD
2GB.Nvidea VGA
Full HD
ரூ.129,900
விசேட விலை
ரூ.122,900
மாதமொன்றிற்கு
ரூ.5,377
இலிருந்து
ACER E5-5737-CORE i7
CORE i7-7th Generation
8GB RAM
1TB HDD
15.6" Display
4GB Nvidia GTX 940
ரூ.142,900
விசேட விலை
ரூ.127,990
மாதமொன்றிற்கு
ரூ.5,600
இலிருந்து
LENOVO YOGA 510 i7
Intel i7-7th Generation
8GB RAM
1TB HDD
2GB VGA
WINDOWS 10
Full HD
1 Year Warranty
ரூ.179,500
விசேட விலை
ரூ.167,900
மாதமொன்றிற்கு
ரூ.6,996
இலிருந்து
LENOVO YOGA 510 i5
Intel i5-7th Generation
4GB RAM
1TB HDD
2GB VGA
WINDOWS 10
Full HD
1 Year Warranty
ரூ.148,900
விசேட விலை
ரூ.137,900
மாதமொன்றிற்கு
ரூ.5,746
இலிருந்து
*நிபந்தனைகள் உண்டு
IT HOTLINE 5886655
us at www.facebook.com/abansit
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் கிடைக்கும்.
Abans


பழைய ஃபில்டருக்கு
புதிய பியூரிபயர்
Unilever
பழைய தண்ணீர் ஃபில்டரை சிங்கர் காட்சியறை அல்லது பியூரிட் முகவரிடம் கொடுத்து, பியூரிட்
ULTIMA RO
பியூரிபயருக்கு
15% சிறப்பு
விலைக்கழிவைப்
பெறுங்கள்,
விரையுங்கள், இச் சலுகை
மார்ச் 31 வரை மட்டுமே.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 7 695 695
www.pureitwater.com
விற்பனை அதிகாரி - எஸ். ரொபட்
0770109568
SINGER Plus
SISILWORLD
SINGER Mega


SINGHAGIRI
EASY வருடம்
ஈ·சி PAY
SAMSUNG
SGL
JVC
LG
Haier
Hisense
HAVELLS
உங்கள் வியாபாரத்தை Hisense உடன் வளர்த்துக்கொள்ளுங்கள்
ஈ·சி EASY ஈ·சி EASY
சிறந்த தயாரிப்பு இப்பொழுது கையிலிருக்கும் பணத்துக்கேற்ப
SINGHAGIRI ஊடாக 18 தவணைகள் வரை
வட்டியின்றி கொஞ்சம் கொஞ்சமாக... செலுத்தலாம்.
24 மாதங்கள் வரை வட்டியின்றிய இலகு கொடுப்பனவு திட்டம் - பிரத்தியேகமாக HSBC கிரெடிட் கார்ட் பாவனையாளர்களுக்கு மட்டுமே !!!
SAMSUNG Hisense hp JVC LG SGL HAVELLS
011 5 413 413
SAMSUNG | SINGHAGIRI
facebook.com/singhagiri
info@singhagiri.lk
www.singhagiri.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பொது அமைப்புகள் களமிறங்கும் நேரம் இது

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் ஒரு மாத காலம் நிறைவடைகின்றது. மாசி மாதம் 20ஆம் திகதி கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக இந்தப் போராட்டம் தொடங்கப்பட்டது. அது மெல்ல மெல்ல முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கும் பரவியது. திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் ஆதரவுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

தங்கள் பிள்ளைகள், உறவினர்கள் உயிரோடு எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலை அல்லது அவர்கள் கொல்லப்பட்டிருந்தால் யாரால், எப்போது, எங்கே கொல்லப்பட்டார்கள் என்கிற விவரங்களைத் தருமாறு கோரியே இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் அவர்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். அப்போதெல்லாம் தமிழ் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கி அவர்களின் போராட்டங்களை முடித்து வைத்திருக்கின்றனர். இந்தத் தடவை அப்படி எவருடைய வாக்குறுதிகளையும் ஏற்பதற்குத் தயாரில்லை என்கிற முன்முடிவோடு மக்கள் தம்முடைய போராட்டத்தை ஆரம்பித்தனர். அதனாலோ என்னவோ, இந்தத் தடவை அவர்களை எந்த அரசியல்வாதியும் இதுவரையில் சீண்டவில்லை.

மக்களும் வழக்கம்போன்று அல்லாமல் ஒரு நீண்டகாலப் போராட்டத்திற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டுதான் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் குறுகிய காலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தத்தக்க உணவு ஒறுப்பு போன்ற வடிவங்களை இந்தத் தடவை போராட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கவில்லை. அரசியல்வாதிகளும் அரச தலைவர்களும் இந்தப் போராட்டம் பற்றி அசட்டையாக இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாகிப்போனது. போராட்டத்தில் உள்ளவர்களுக்கு எதுவும் நேர்ந்துவிடாதபோது அவர்களின் கோரிக்கைகள் குறித்து கவனத்தில் எடுக்கவேண்டிய தேவை ஏதுமில்லை என்பதைப்போன்ற மனோபாவத்துடன் தலைவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக அலுவலகம் ஒன்று அமைக்கப்பட உள்ளது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்ததுடன் இந்த விடயத்தை முடித்துக் கொண்டார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவோ இதுவிடயத்தில் எந்தவிதமான கருத்தையும் இதுவரையில் வெளியிடவில்லை.

மக்கள் தம்மை வருத்தாத போராட்டங்களை, மற்றவர்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாத போராட்டங்களை நடத்தும் வரைக்கும், அரசும் அதன் தலைவர்களும் அது குறித்து அவ்வளவாக அக்கறைப்படப் போவதில்லை என்பதையே இது குறிக்கின்றது. அதற்காக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தம்மை வருத்திக்கொள்ளும் வடிவங்களுக்குப் போராட்டத்தை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திப்பதும் முறையானது அல்ல.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சுற்றியுள்ளவர்களும் வடக்கு கிழக்கு மக்களும் தமது ஒட்டுமொத்த ஆதரவையும் போராட்டக்காரர்களுக்குத் தெரிவிப்பதன் மூலமே இந்தப் பிரச்சினையை அரசின் காதுகளுக்கு இனி எடுத்துச் செல்லமுடியும். அரசை அசைப்பதற்கான வழி இனி அது மட்டுமே. அதற்கான காலம் வந்தாகிவிட்டது.

எனவே போராட்டக் களத்திற்குச் சென்று போராடும் மக்களுக்கு ஆதரவழிப்பதற்கு அப்பால், வடக்கு கிழக்கு முழுவதும் அரசைத் திரும்பிப் பார்க்க வைக்கும் போராட்டங்களை நடத்துவதற்குப் பொது அமைப்புகள் முன்வரவேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் கடையடைப்பும் முழு அடைப்பும் நடத்தி தமிழர்களின் பொருளாதாரத்தைத்தான் நாசமாக்குகின்றோம் என்கிற குற்றச்சாட்டு உண்டு. அதுவும் புறக்கணிக்கக் கூடியதல்ல.

எனவே இந்த இரு விடயங்களையும் ஒருங்கிணைக்கக்கூடிய மையப்புள்ளிப் போராட்டங்களை இணைந்து நடத்த வடக்கு கிழக்கில் உள்ள அனைத்துப் பொது அமைப்புகளும் முன்வர வேண்டும். போராடும் மக்கள் தனியாக இல்லை, அவர்களுக்கு நாம் முழு ஆதரவாக உள்ளோம் என்பதைக் காட்டுவதன் மூலமே அரசைத் திரும்பிப் பார்க்க வைக்க முடியும்.

# கிழக்கு மாகாணத்தை அச்சுறுத்தும் டெங்கு

அ. அச்சுதன்



கிழக்கு மாகாணத்தில் டெங்கு உயிர்கொல்லி நோய், அதி வேகமாகப் பரவிவருகிறது.

திருகோணமலை மாவட்டம் முழுவதிலும் குறிப்பாக, கிண்ணியா பிரதேசத்தில் பெருந்தொகையான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு இதுவரை 12 பேர் சாவடைந்துள்ளனர்; மற்றும் பலர் அவசரசிகிச்சைப் பிரிவில் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர். இந்த மாதம் 15ஆம் திகதி வரையான உத்தியோகபூர்வ தரவுகளின்படி, கிண்ணியாவில் 1150க்கும் மேற்பட்டோரும், மூதூரில் 400 பேரும், திருகோணமலை நகரும் அதனை அண்டிய பகுதிகளில் 381பேரும் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

டெங்கு நோய் அச்சம் காரணமாக, பலர் வீடுகளை விட்டு வெளியேறி வேறு ஊர்களுக்குச் சென்றுள்ளனர். வைத்தியசாலையில் கடும் இடநெருக்கடி நிலவுகின்றது.

திருகோணமலையில் டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இருப்பினும் அங்கு நிலைமை கவலைக்கு இடமாகவுள்ளது. தினமும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு, சாவடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

தற்போது தான் தமது சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பொதுமக்கள் உணர்கின்றனர். இருந்தபோதிலும் டெங்கு நோயினால் 12பேரின் உயிர்கள் இதுவரை காவு கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 3000 பேர் வரை டெங்கினால் பாதிக்கப்பட்டனரென்பது சுகாதார அமைச்சின் தகவல். திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 2000 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 510 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 87 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிட்டியுள்ளன.

### கிண்ணியா பிரதேசத்தில் டெங்குத்தாக்கம் தீவிர நிலையில்

கிண்ணியா பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள டெங்குத் தாக்கம் தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாண்டோ மற்றும் மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் கிண்ணியா தள வைத்தியசாலையில் அவசர கூட்ட மொன்றைக் கூட்டியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் இது வரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் சாவடைந்தவர்களில் பெரும்பாலோர் கிண்ணியாப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே. பிற மாவட்டங்களான பொலன்னறுவை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை ஆகிய பகுதிகளிலிருந்து வெளிக்கள உத்தியோகத்தர்களை அனுப்பி டெங்கு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய, மாகாண சுகாதார அமைச்சுக்கள் உதவி வருகின்றன. இது தொடர்பாக இப்பிரதேச மக்களுக்கு பல வழிகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். டெங்கு பரவக்கூடிய சூழலில் தமது இருப்பிடங்களை வைத்திருப்போர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்கும் ஆளாகியுள்ளோம் என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### திருகோணமலையிலும் டெங்கு அச்சுறுத்துகிறது

திருகோணமலையில் டெங்கு நோயால் நாள் ஒன்றுக்கு சராசரியாக 100 பேர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஆயினும் வைத்தியசாலையில் போதுமான இடவசதி, ஆளணிவசதி மற்றும் படுக்கை வசதிகள் கிடையாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு நோய் அபாயம் காணப்படுவதால் கிழக்கு மாகாணத்தில் தனியார் கல்விநிலையங்களைத் தற்காலிகமாக 2 வாரங்களுக்கு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் டெங்குக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தோரில் 2 மாணவர்களும் அடங்குவதாக மாகாணக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள 66 அரச பாடசாலைகளும், மூன்றுதினங்களுக்கு மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. கிண்ணியாவில் டெங்குத் தாக்கத்தினால் பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் பல பாகங்களில் மாலை வேளைகளில் பெய்துவரும் மழை டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு ஒரு சவாலாகக் காணப்படுகிறது. இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் கல்வித்துறைசார் மாணவர்கள் நகரசபை, பிரதேச சபைகளது ஊழியர்கள் எனப் பல தரப்பினரும் பிரதேச சுகாதார அதிகாரியின் வழிநடத்தலின் கீழ் உதவி வருகின்றனர்.

### சூழலைச் சுத்தமாகப் பேணுமாறு அறிவுறுத்தும் சுகாதாரத்துறை

மனிதக் குருதியைக் குடித்து 48 மணித்தியாலங்களில் சுத்தமான நீர் உள்ள இடங்களில் 200க்கும் அதிகமான முட்டைகளை இட்டு, அதில் இருந்து சில மணித்தியாலங்களில் நிறை உடலிகளாக வெளியேறும் இந்த நுளம்புகளால் 200 மீற்றர் தூரம் வரை பறந்துசென்று பலருக்கு டெங்கு நோயை ஏற்படுத்த முடியும். எனவே தமது வீடுகளை மட்டும் சுத்தமாக வைத்திருப்பதைத் தாண்டி, அயல்வீடுகளையும் கவனிக்கவேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பை வீடுகளில் தேடி அழித்தாலும், பொது இடங்களிலும் அரச திணைக்களங்களிலும் இருந்து அவற்றை அழிப்பது சவாலாக உள்ளது. அது விடயமாக திணைக்களங்கள் துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மூடிய வீடுகள், கட்டுமானம் பூர்த்தியாகாத கட்டடங்கள் போன்றவை நுளம்புப் பெருக்கத்தில் அதிகமான செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனவே உயர்காய்ச்சல், தலைவலி மற்றும் கண்களுக்குப் பின்னால்வலி, தசைகள், மூட்டுகள் வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தோல் தடித்தல் அல்லது சிவப்பு நிறமாகி இரத்தம் கசிதல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடவேண்டும். இது டெங்கு நோய்க்குரிய அறிகுறிகளாகும்.

டெங்குநோய் பரவாது தடுக்க சகலரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டிய தேவையுள்ளது. டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து சகலரையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு சுகாதாரத் துறையினரின்பக்கம் இருந்தாலும், பொது மக்கள் தரப்பிலிருந்தும் அதற்கான பங்களிப்பு அவசியமாகிறது.

சேரலாதன்

# பொருத்தமில்லாத வேளையில் மேற்கொள்ளப்பட்ட கூட்டமைப்பின் தீர்மானம்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்குவது தொடர்பான கூட்டமைப்பின் தீர்மானம், பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் கூட்டமைப்பின் தீர்மானத்தை ஆதரிக்கின்ற அதேவேளை, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மற்றொரு கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். அதனை முற்றாக எதிர்க்கின்றது. வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கூட்டமைப்பின் தீர்மானத்தை எதிர்ப்பதாகத் தெரிய வருகின்றது.

இதனால் தமிழ் மக்கள்தான், குழம்பிப்போய் உள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் மக்களிடம் ஆணையைப் பெற்று எதையும் செய்வதில்லை. ஒரு விடயத்தை ஆதரிப்பதோ அல்லது எதிர்ப்பதோ அவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறுதான் இடம்பெறுகின்றது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவதா? இல்லையா? என்பதை அதில் தற்போது அங்கம் வகிக்கின்ற நாடுகளே தீர்மானிக்க வேண்டும். அநேகமாக வாக்கெடுப்பு ஒன்றின்போதே இது தீர்மானிக்கப்படும். இந்த நிலையில் வெளியாரின் எதிர்ப்புக்களால் பேரவையில் எதையும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது.

### தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பற்பல போராட்டங்கள்

உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழர்கள், ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்பதில் அசைக்க முடியாத உறுதியுடன் காணப்படுகின்றனர். தற்போது ஆட்சியில் அமர்ந்துள்ள அரசுகூடத், தமிழர் விடயங்களில் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்வதையே காணமுடிகின்றது. தமிழர் பகுதிகளில் பல்வேறு காரணங்களுக்காகப் போராட்டங்களும் குறைவின்றி நடைபெற்று வருகின்றன. காணி மீட்புக்கான போராட்டம், காணாமற் போனவர்களுக்கான போராட்டம், வேலையற்றவர்களின் போராட்டம், தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் எனப் போராடித்தான் எதையும் பெற வேண்டும் என்ற




முனைப்புடன் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்தான் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விடயமும் கவனத்தில் கொள்ளப்படவிருக்கின்றது.

இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்கள் மிகக் கொடுமையானவை. இந்தக் கொடுமைகளைப் புரிந்தவர்கள் எந்தவித விசாரணைகளுக்கும் முகம் கொடுக்காது சுதந்திரமாகத் திரிகின்றனர். போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழுவை அமைக்குமாறு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் 2015 இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காலத்தைக் கடத்திவருகின்றது. ஜனாதிபதி கூட படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதை ஒருபோதுமே அனுமதிக்க முடியாதெனப் பகிரங்கமாகக் கூறி வருகின்றார்.

பன்னாட்டு நீதிபதிகளுக்கும் இங்கு இடமில்லை என்பது இவரது கருத்தாகவுள்ளது. இந்த நிலையில் போர்க்குற்ற விசாரணைகளுக்கு மேலும் கால அவகாசம் கோருவது பன்னாட்டை ஏமாற்றுகின்ற ஒரு முயற்சியென்றே கருத வேண்டியுள்ளது.

### கூட்டமைப்பின் தீர்மானம்குறித்து வெளியாகும் விமர்சனங்கள்

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்குகின்ற விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளும் கலகத்தை ஏற்படுத்திவிட்டது. வவுனியாவில் கூடிய கூட்டமைப்பினர் சில நிபந்தனைகளுடன் இலங்கை அரசுக்குக் மேலும் கால அவகாசம் வழங்கலாமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளில் ரெலோ, புளொட் ஆகியவை இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க, மற்றொரு பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ் கடுமையாக எதிர்த்து வருகின்றது. வவுனியாக் கூட்டத்துக்கு கூட்டமைப்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களே ஒன்று கூடித் தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கின்றனர்.




### கூட்டமைப்புடன் முரண்படும் வடக்கு முதல்வர்

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கூட்டமைப்பினரின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தெரிகின்றது. வவுனியாக் கூட்டத்தில் இவர் கலந்து கொள்ளவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் தமிழரசுக் கட்சியைப் பிரதிநித்துவம் செய்பவர். கூட்டமைப்பின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கான பரப்புரைகளில் ஈடுபடாது ஒதுங்கியிருந்தார். இதற்குச் சரியான காரணம் எதையும் அவர் அப்போது கூறவில்லை. பின்னர் கூட்டமைப்புடன் முரண்பட்டு நிற்கின்றவர்களும் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். கூட்டமைப்பை விமர்சித்தவர்கள், விமர்சிப்பவர்கள் இவரை உயர்த்திப் பேசுவதற்கு ஒருபோதுமே தயங்கியதில்லை. இவரும் மௌனமாக அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். தற்போது கூட கூட்டமைப்பின் தீர்மானத்துடன் முரண்பட்டு நிற்கின்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் வைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் தலைமையை விமர்சிப்பதில் அது கடும் விருப்பத்தை வெளிப்படுத்தி வருகிறது. அந்தக் கட்சியின் தலைவருக்குத் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்காததால், அந்தக் கட்சி கூட்டமைப்பின் தலைமையுடன் மாறாத வெறுப்பும் கொண்டுள்ளது. கூட்டமைப்பில் ஓர் அங்கமாக இருந்து கொண்டு அதன் தீர்மானங்களைப் புறமொதுக்குவதும், தலைமையை மோசமாக விமர்சிப்பதும் கூட்டமைப்புத் தத்துவத்துக்கு அழகானதல்ல. விருப்பமில்லாது விட்டால் கூட்டமைப்பிலிருந்து விலகியிருந்து கொண்டு அதற்கு எதிரான விமர்சனங்களை முன்வைப்பதே கௌரவமாக இருக்கும். கூட்டமைப்புக் கூட, அவசரப்பட்டு இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசின் மீது வெறுப்படைந்து போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, இத்தகையதொரு தீர்மானம் அவர்களை கடும் வெறுப்படையவே செய்யும். கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் இதைத் தமக்குச் சார்பானதாக மாற்றிக் கொள்ளவே முயல்வார்கள்.

மேலும் இந்தத் தீர்மானம் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா? என்பதும் தெரியவில்லை. கூட்டமைப்பின் தலைமை சூழ்நிலையை உணர்ந்து செயற்படுவதே சாலச்சிறந்ததாகும்.



## வாசகர் திருமுகம்

### இந்துமத வளர்ச்சிக்குப் பாடுபட்ட சுவாமி கெங்காதரானந்தவின் பெருமையை வெளிப்படுத்தும் முயற்சி கை கூடுமா?

இந்து மத மற்றும் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டுழைத்த பெரியார்களில் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா குறிப்பிடத்தக்க ஒருவராவார். அவரது அருஞ்சேவையை இந்துமதத்தவர் தெரிந்து கொள்ள வைக்கும் நோக்கில் அரசால் வெளியிடப்படும் மாணவர்களுக்கான இந்து சமய பாடப்புத்தகத்தில் சுவாமிகளது வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய பாடமொன்றை இடம்பெறச் செய்ய வேண்டுமென்ற தீர்மானமொன்று 2014ஆம் ஆண்டில், திருகோணமலை பாரதி முதியோர் சங்கத்தால் நிறைவேற்றப்பட்டு இந்து சமய கலாசார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது குறித்த சம்மதத்தையும் அமைச்சு எமது சங்கத்துக்கு அனுப்பி வைத்திருந்தது.

மகிந்தவின் தலைமையிலான அரசின் நிர்வாக வேளையில், குறித்த விடயம் தொடர்பாக வலியுறுத்தி பல தரப்பட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், எதுவித சாதகமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதில்லை.

மைத்திரிபால–ரணில் நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் தமிழ் இனத்தவரான இந்து சமய கலாசார அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சர் சுவாமிநாதன் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவாரென நம்பியிருந்தோம். ஆயினும் இந்து மதத்தவரான அமைச்சர் சுவாமிநாதன் இந்த விடயத்தில் எதுவித அக்கறையும் கட்டாதமை கவலைக்குரியதொன்றே. எமது முயற்சியைக் கைவிடாது, மேற்குறித்த விடயம் தொடர்பாக இந்து மதத்தைப் பின்பற்றும் பிரமுகர்களான வடக்கு மாகாண முதலமைச்சர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி மகேஸ்வரன் மற்றும் தெல்லிப்பழை துர்க்கை யம்மன் ஆலய தலைவர் ஆறுதிருமுருகன் ஆகியோரைத் தொடர்பு கொண்டு குறித்த விடயம் தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து சுவாமி கெங்காதரானந்தாவின் வாழ்க்கை வரலாறு மற்றும் சேவை தொடர்பான விவரங்களை இந்து சமய பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய ஆவன செய்து உதவுமாறு வேண்டிக் கொண்டிருந்தோம். ஆயினும் மேற்குறித்த பிரமுகர்களும் இது விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்பட முன்வராதமை கவலைக்குரியதொன்றே. மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை வாழ் இந்து சமயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுவாமிகள் குறித்த தகவல்கள் இந்து சமயப் பாடப் புத்தகத்தில் உள்ளடக்கப்படுவதன் மூலம் இந்து சமய பாடம் கற்கும் மாணவர்கள் மத்தியில் சமயம் தொடர்பான தேடலுக்கானதொரு விருப்பை ஏற்படுத்தவுமாக 'உதயன்' பத்திரிகையில் இந்தக்கடிதத்தைப் பிரசுரித்து உதவுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

*நா. இராமசாமி*
*தில்லையம்பலம் பிள்ளையார் ஆலயம்*
*அன்பு வழிபுரம், ம திருகோணமலை.*

மருத்துவர் எஸ்.கேதீஸ்வரன்



# பயமுறுத்தும் பன்றிக்காய்ச்சல்

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவும் மருத்துவ விடுதிகளும் இன்று நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. இந்த நோயாளர்களில் பெரும்பாலானவர்கள் காய்ச்சல் காரணமாகத்தான் வைத்தியசாலையை நோக்கிப்படையெடுக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் பன்றிக் காய்ச்சல் (Swine Flu) ஏற்படுத்தியுள்ள பீதியாகும். இது பற்றிப் பல கேள்விகள் உங்கள் மனதில் தோன்றியிருக்கும்.

**பன்றிக்காய்ச்சல் என்றால் என்ன?**

பன்றிக்காய்ச்சல் என்பது $(H_1N_1)$ எனப்படும் ஓர் இன்புளுவென்சா வைரசால் ஏற்படும் காய்ச்சல் ஆகும். இன்புளுவென்சா (Influenza) என்பது சுவாசத் தொகுதியைத் தாக்கும் ஒரு வைரஸ் ஆகும். இது மனிதரை மட்டுமன்றி பறவைகளையும் பன்றி போன்ற விலங்குகளையும் தாக்குகின்றது. இது இன்று நேற்றல்ல பல்லாயிரக்கணக்கான வருடங்களாக மனிதரைத் தாக்கி வருகின்றது. இன்புளுவென்சா வைரஸில் A, B, C என மூன்று வகைகள் உள்ளன. இவற்றுள் இன்புளுவென்சா A தான் வீரியம் கூடியது. இன்புளுவென்சா A ஐ அதன் மேற்பரப்பிலுள்ள Hemagglutinin மற்றும் Neuraminidase எனும் புரதங்களின் அடிப்படையில் வகைப் படுத்துவார்கள். H என அழைக்கப்படும் Hemagglutinin புரதத்தில் 18 வகைகளும் N என அழைக்கப்படும் N இல் 11 வகைகளும் உள்ளன. $(H_1N_1)$ எனப்படுவது 2009 ஆண்டு முதல் 2010 வரை உலகம் முழுவதும் பரவி வரும் Swine flu எனப்படும் பன்றிக்காய்ச்சல் ஆகும்.

**இன்புளுவென்சா வைரஸ் எவ்வாறு காலத்துக்குக்காலம் வேறுபடுகின்றது?**

எமது உடலிலுள்ள நிர்பீடனத் தொகுதி இன்புளுவென்சா வைரஸ் கிருமிக்கெதிராக எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும். ஆனால் வைரஸின் மேற்பரப்பிலுள்ள புரதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்து தப்பி காலத்துக்குக் காலம் மக்களிடையே நோயை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான இன்புளுவென்சா காய்ச்சல் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றது. குளிர்வலய நாடுகளில் குளிர் காலத்தில் (Wintor) காய்ச்சல் பொதுவாகப் பரவுகின்றது. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற வெப்பவலய நாடுகளில் வருடம் முழுவதும் நோய்த்தொற்றல் ஏற்படலாம். இலங்கையில் நவம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங்களிலும் மற்றும் மே, ஜூன், ஜூலை மாதங்களிலுமே அதிகளவு தொற்று ஏற்படுகின்றது.

சில வேளைகளில் பறவைகள், விலங்குகளில் நோயை ஏற்படுத்தும் வைரஸ்களும் மனிதரில் நோயை ஏற்படுத்தும் வைரஸ்களும் இணைந்து அதிக வீரியமுள்ள நோய் எதிர்ப்புச் சக்திக்குக் கட்டுப்படாத புதிய வகை வைரஸை உருவாக்கிவிடும் (Novel Virus) இத்தகைய வைரஸ் உலகம் முழுவதும் பரவி (Pandemics) தாக்கத்தை ஏற்படுத்தும்.

**இன்புளுவென்சா எவ்வாறு பரவுகின்றது?**

நோயாளி ஒருவர் தும்மும் போதும் இருமும் போதும் சிறுதுளிகள் காற்றில் பரவி அருகில் உள்ளோரின் சுவாசப்பாதை வழியாகத் தொற்று ஏற்படுகின்றது. நோயாளியையோ அவர் பயன்படுத்திய பொருள்களையோ தொட்டு விட்டு கண், வாய், மூக்கு போன்ற பகுதிகளைத் தொடும் போது பரவலாம். நோயாளி தொட்ட ஆளிகள் (Switch), கதவுக் குமிழ்கள் மற்றும் காசு போன்றவை மூலமும் பரவலாம்.

**இன்புளுவென்சா நோயின் அறிகுறிகள் என்ன?**

நோய்த் தொற்று ஏற்பட்டவர் 2 நாள்களில் அறிகுறிகளை வெளிக்காட்டுவார். காய்ச்சல், இருமல், தொண்டை நோ, மூக்கடைப்பு, மூக்கிலிருந்து நீர்சிந்துதல், தலையிடி, தசை நோ, மூட்டு நோ, களைப்பு போன்றவை பொதுவான அறிகுறிகளாகும். சிலருக்கு பசியின்மை, வாந்தி போன்றவையும் ஏற்படலாம். சிலருக்கு வயிற்றோட்டமும் ஏற்படலாம்.

மூச்சுவிடச்சிரமப்படுதல், அறிவுமயங்குதல் வலிப்பு ஏற்படுதல் போன்றவை அபாயகரமான நிலமைகளாகும்.

> நோயாளி ஒருவர் தும்மும் போதும் இருமும் போதும் சிறுதுளிகள் காற்றில் பரவி அருகில் உள்ளோரின் சுவாசப்பாதை வழியாகத் தொற்று ஏற்படுகின்றது. நோயாளியையோ அவர் பயன்படுத்திய பொருள்களையோ தொட்டு விட்டு கண், வாய், மூக்கு போன்ற பகுதிகளைத் தொடும் போது பரவலாம். நோயாளி தொட்ட ஆளிகள் (Switch), கதவுக் குமிழ்கள் மற்றும் காசு போன்றவை மூலமும் பரவலாம்.

**இன்புளுவென்சாவினால் அதிகம் பாதிப்படைபவர்கள் யார்?**

இன்புளுவென்சா ஆரோக்கியமான இளைஞர், யுவதிகளில் சாதாரண காய்ச்சலையே ஏற்படுத்தும். 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நீரிழிவு நோயாளிகள், இருதய நுரையீரல் சம்பந்தமான நோயாளிகள், சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் மற்றும் நீண்டகாலம் Prodnisalone போன்ற மருந்துகளை எடுப்பவர்கள் இந்த நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட இடமுண்டு. எனவே இத்தகைய நோயாளர்கள் நோய் பரவும் காலங்களில் சனக் கூட்டமுள்ள இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல் நல்லது.




**இன்புளுவென்சா நோய் வராமல் தடுக்கும் வழிகள் எவை?**

நோய் வாய்ப்பட்டவர்கள் சில வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அது மற்றவர்களுக்குத் தொற்றாமல் பாதுகாக்கலாம். தும்மும்போதும் இருமும்போதும் கைக்குட்டையையோ ரிசுப் பேப்பரையோ உபயோகித்து முகத்தை மூடவேண்டும். அதேபோல பயன்படுத்திய கைக்குட்டைகளைச் சவர்க்காரமிட்ட நீரில் துவைக்கவேண்டும். அத்துடன் நோய்வாய்ப்பட்டவர்கள் சனக்கூட்டங்களுள் செல்வதையும் பொதுப்போக்குவரத்துச்சாதனங்களைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். நோய்வாய்ப்பட்டவர்களும் அவர்களைப் பராமரிப்பவர்களும் முகக் கவசம் (Face mask) அணிவதன் மூலமும் ஓரளவு நோய்த் தொற்றலைத் தடுக்க முடியும். கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுவதன் மூலமும் கண், வாய், மூக்குப் பகுதிகளை அனாவசியமாகத் தொடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம். நோயாளி பயன்படுத்திய பொருள்களைச் சவர்க்காரம் மூலமோ அல்லது ஸ்பிரிட் (Spirit) மூலமோ சுத்தப்படுத்தலாம். புகைப்பிடிப்பவர்களை இந்த நோய் அதிகம் தாக்கும் என்பதால் புகைத்தலைத் தவிர்ப்பது நல்லது.




**நோய் வாய்ப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் எவை?**

நோய்வாய்ப்பட்டவர்கள் நல்ல ஓய்வு எடுக்க வேண்டும். சூப், கஞ்சி, இளநீர் போன்ற நீராகாரங்களை அதிகளவு பருக வேண்டும். வலி, காய்ச்சல் இருப்பின் பரசிடமோல் மாத்திரைகளை வைத்தியரின் ஆலோசனையின்படி பயன்படுத்தவேண்டும். முன்பு குறிப்பிட்ட அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்கள் தவிர்ந்த முன்பு ஆரோக்கியமாகவிருந்த இளைஞர், யுவதிகள் வீட்டிலிருந்தே அருகிலிருக்கும் வைத்தியரை அணுகிச்சிகிச்சை பெறலாம். அனைவரும் அரச வைத்தியசாலைக்குவரவேண்டியதில்லை. ஆனால் கர்ப்பிணிப்பெண்கள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், நீண்டகால சிறுநீரகஈரல், இருதய, நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனை பெறல் அவசியமாகும். அவர்களில் அபாயகரமான அறிகுறிகள் இருப்பவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் மூச்சுவிடச் சிரமப்படுபவர்களும் நியூமோனியா இருப்பதற்கான அறிகுறிகள். உள்ளவர்களும் தொடர்ச்சியான வாந்தியால் போதிய நீராகாரங்களை எடுக்கமுடியாதவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் முன் குறிப்பிட்ட இன்புளுவென்சாவால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் அபாயகரமான அறிகுறிகள் உள்ளவர்களுக்கும் Tamilflu எனப்படும் Oseltamivir எனப்படும் மருந்து வழங்கப்படுகிறது. இந்த மருந்து எல்லோருக்கும் கொடுக்கத் தேவையில்லை. எமது உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தியே ஆரோக்கியமானவர்களின் வருத்தத்தை மாற்றப் போதுமானதாகும்.

3 நாள்களுக்கு மேல் தொடர்ச்சியாக காய்ச்சல் இருக்குமாயின் வைத்தியர் ஒருவரை அணுகி FBC (Full blood count) எனும் குருதிப் பரிசோதனையைச் செய்வது நல்லது. ஏனென்றால் ஆரம்ப நிலைகளில் டெங்கு நோயையும் இன்புளுவென்சா நோயையும் பிரித்தறிவது கடினம் ஆகும். முடிவாக $(H_1N_1)$ எனப்படும் பன்றிக்காய்ச்சல் ஒரு சாதாரண வைரஸ் காய்ச்சலாகும். இதையிட்டு அனைவரும் பீதியடையத் தேவையில்லை. அதேவேளை இதனால் அதிகம் பாதிப்படையக் கூடியவர்கள் அவதானமாக இருக்கவேண்டும். அடிப்படைச் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தால் நோய்பரம்பலைக் கட்டுப்படுத்தலாம்.

கட்டுரையாளர் பொதுவைத்தியர் நிபுணர்,
விடுதி 9 & 3,
யாழ்.போதனா வைத்தியசாலை.




சூரியகாந்தி
உதயன்
19.03.2017

டிலீப்

போர் தின்ற தேசம் என்ற எந்தச் சேதத்தையும் காண்பிக்காமல் மூடி மறைத்து எழுப்பப்பட்ட கட்டடங்களால்நிரப்பப்பட்டிருக்கின்றதுகிளிநொச்சி நகர். ஏ–9தேசியநெடுஞ்சாலைகிளிநொச்சியின் மையத்தை ஊடறுக்கும் பகுதியில் அமைந்திருக்கின்றது கந்தசுவாமி கோயில். கோயில் வாசலுக்கும், வீதிக்கும் இடையில் சொக்கட்டான் பந்தல்.

பந்தலை தாங்குவதற்குப் போடப்பட்ட கம்பிகளுக்கு இடையில்சணல்கயிற்றில்தொங்குகின்றன மனிதர்களின் உருவப் படங்கள். சட்டைப் பின்னில் பிணைக்கப்பட்டு 'லெமனேற்றிங்' செய்யப்பட்ட வர்ண ஒளிப்படங்கள். பார்வைக்கு அவை உயிரற்ற வர்ணப் படங்கள். ஆனால் அங்கிருப்பவர்களுக்கு அவைதான் உயிர். தமது உறவுகளின் எஞ்சிய நினைவுகளுடன் அவர்கள்சுமந்துதிரியும்ஒரேஆதாரம். படங்கள்எப்போதுமேகாலத்தின் பதிவாக இருப்பவை. ஒருவர் இருக்கின்றாரோ இல்லையோ, அவரையும்அவர்பற்றியநினைவுகளையும் உயிர்ப்புடன் வைத்திருப்பவை இந்தப் படங்கள்தான்.









# படங்களில் வாழும் பிள்ளைகள்!

## அடங்கிப்போகாத அம்மாக்களின் சோகம்





அல்பத்தின் தாள்களை வேகமாகத் தட்டுகின்றார். மகனின் அடுத்த படத்தைத் தேடுகின்றார். அவரது முகத்தில் சந்தோசமும் துக்கமும் மாறி மாறி வந்து செல்கின்றன. 'சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையாக இருக்கவேணும், ஸ்கந்தபுரத்தில இடம் பெயர்ந்து இருந்தனாங்கள். இதில நாங்கள்எல்லாரும்நிக்கிறம்"என்றுசொல்லி படத்தில் உள்ள ஒவ்வொருவரையும் கையைக் காட்டி யார் என்று அடையாளப்படுத்துகின்றார். இராண்டாவது மகனை அடையாளப்படுத்திய அவரது கைவிரல் அந்த இடத்திலேயே தரித்துநிற்கின்றது,அசையமறுத்து.

"இது என்ர ரண்டாவது பிள்ளை". ஏ 4 தாளில் பெரிதாக்கப்பட்டு சணல் கயிற்றில் பிணைக்கப்பட்டிருக்கும்படத்தைக்காண்பித்துச்சொல்கின்றார்யோகராசாகனகரஞ்சினி. வயது54. கிளிநொச்சியில்நடைபெறும்போராட்டத்தின் இணைப்பாளர். போராட்டத்திலிருக்கும்ஏனையோரின் படங்களுடன் அவரது படமும் காற்றில் ஆடிக் கொண்டிருக்கின்றது.

யோகராசாஅமலன். 1987ஆம்ஆண்டுபிறந்தவர். 2007ஆம்ஆண்டுடிசெம்பர்31ஆம் திகதிதமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தார். வண்ணத்தமிழன்என்ற இயக்கப் பெயர் வழங்கப்பட்டது. தகட்டு இலக்கம் 1160.

"வீட்டுக்குஒருவர்வேண்டும்என்டதால இயக்கத்துக்குப்போனவர். 2009ஆம்ஆண்டு உடையார்கட்டில இருக்கேக்க, தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் வீட்டுக்கு வந்தவர். வீட்டை இருந்தவர். மார்ச்மாதம்2ஆம்திகதிதவறவிட்டுட்டன். வலைஞர்மடத்தில மார்ச் 25ஆம் திகதி கண்டனான். காலில் காயமடைந்த நிலையில ராணுவத்திட்ட சரண் அடைஞ்சதாப்பிறகு அறிஞ்சுகொண்டன். வவுனியாவைத்தியசாலையிலநான்ஜூலை மாதம் அளவில சிகிச்சைக்குப் போனான். காயமடைந்த போராளிகளை அங்க வைச்சிருந்தவை. மத்தியான நேரம் நான் அங்க களவாய் போய் என்ர பிள்ளையின்ர படத்தைக் காட்டி கேட்டனான். காயமடைந்து புல்மோட்டையில இருக்கிறதாகச் சொன்னவை" தனக்குத் தெரிந்த தகவல்களை வரிசைப்படுத்துகிறார் கனகரஞ்சினி.

வெயிலிலும் மழையிலும் பனியிலும் கிடப்பதை அவரது உடல் ஏற்றுக்கொள்ள மறுக்கிறதுஎன்பதைஅவரது இருமல்வெளிக்காட்டியது. ஆனாலும்என்னசெய்வது? விதி. தன் மகனுக்கு நடந்தது என்ன என்பதைத் தெரிந்துகொள்ள அவர் வீதியில் கிடந்துதானாகவேண்டியிருக்கிறது.

காணாமற்போனவர்களைத் தேடிக் கண்டறிவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கடந்த காலப்போராட்டங்களைப்போன்றுஇந்தப்போராட்டமும்ஆகிவிடக்கூடாதுஎன்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

மகனின் வேறுபடங்கள் இருக்கின்றதாஎன்றுகேட்டேன். "வீட்டை இருக்குதடி செல்லம்"என்றுபதில்வந்தது. அதைப்பார்க்கலமாஎன்றகேள்விக்கு, "வீட்டைவாங்கோ" என்றுகூட்டிக்கொண்டுபோனார். போராட்டம்நடைபெறும்இடத்திலிருந்துசிலகிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளது அவர் வீடு. வீடு பூட்டியிருந்தது. திறந்து கொண்டு உள்ளே சென்றார். பரபரப்பாகப் படங்களைத் தேடியவர், அல்பங்கள் இருந்த இடத்தில் அவை இல்லாமையைக் கண்டு கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தார். மகளுடன் தொலைபேசினார். அவர் வைத்த இடத்தில் இல்லாமல் இன்னொரு இடத்தில் பதுங்கியிருந்த அல்பங்கள் அடங்கிய பொதியைக் கண்டெடுத்தார்.

அல்பத்தின் முதல் பக்கத்தை விரித்தார். ஒவ்வொரு பக்கமாக அவரது மகனின் வாழ்க்கைவிரிகிறது. கனகரஞ்சினி அந்த வாழ்க்கைக்குள் பயணிக்கத்தொடங்கிவிட்டார் என்பதை ஆயிரம் வோல்ட் மின்சாரத்தில் எரிகின்ற விளக்குப் போல பளிச்சிடும் அவர் முகம் சொல்கிறது. கடைசியில் "இவன்தான் காணாமற்போனான்" என்னும் போது படக்கென்று அந்த ஒளி மறைந்து இருள் கௌவிக்கொள்கிறது. கண்ணீர்த் துளிகள் எட்டிப்பார்க்கின்றன.



"இவர்ர (கனகரஞ்சினியின் கணவர்) ஒன்றுவிட்ட தம்பியார். வெளிநாட்டில இருக்கிறவர். அவர் இங்க வந்தவர். இந்தவீட்டுக்குமுன்னுக்கு இருக்கிறகொட்டில் வீட்டிலதான் இருந்தனாங்கள். 1994 ஆம் ஆண்டு இந்தப் படம் எடுத்தவை. அவர் சின்னாள். பிள்ளையள் படம் எடுத்தவை. நான் வீட்டில சமைச்சுக்கொண்டிருந்தன்"என்றுஅந்தப்படத்தின்நினைவுகளை உயிர்ப்புடன் சொன்னார்.

"தமக்கையின்ர சாமத்திய வீட்டுப் படம். 2004 ஆம் ஆண்டு நடந்தது." அந்த மகிழ்ச்சியான தருணத்தில் மகன் ஓடியாடி வேலை செய்ததையும், வீட்டில் நடந்த முதல் மங்கலகரமான நிகழ்வு அது என்பதையும் அவர் சொல்லும்போதேஎங்களால்உணரமுடிகிறது. "இதுதான் அமலுக்குட்டி". அவரது காணாமற்போன மகன். அதைச் சொல்லும்போது இருந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. உடைந்து போய் அழத் தொடங்கினார். அவரை அமைதிப்படுத்தும் வழிதெரியாது குறுகிப்போய் அமர்ந்திருந்தேன். அழுகைதன்பயணத்துக்கான பாதையல்ல என்பதை உணர்ந்த தருணத்தில் நிமிர்ந்து என்னைப் பார்த்தார். "நான் படத்தைப் பார்த்து அழுவன் என்றுதான் வீட்டுக்காரர் அல்பத்தை ஒளிச்சு வைச்சிருந்தவை" என்றார்.

"இவ்வளவு சண்டைக்குள்ளயும் இந்த அல்பங்களையும் கொண்டா போனீங்கள்?" எனக்குஆச்சரியத்தைஅடக்கமுடியவில்லை. "அல்பத்தையும், பிள்ளைகளின்ரசேர்பிட்டிக்கட்டும்தான் கொண்டு போனம்." இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மட்டும் காவியபடியே நிகழ்காலத்தைக் கடந்திருக்கும் இந்த மனிதர்களைப் பார்ககும்போது புல்லரிக்கிறது. இவ்வளவுகொடூரப்போருக்குள்ளும் சாவுகளுக்கு மத்தியிலும் உயிர்பிழைப்போம் என்ற நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பப்பட்ட அவர்களின்வாழ்க்கையில் கர்ணகொடூரர்களாகப் புகுந்து விளை யாடியவர்களுக்குப்புரியுமாஇந்தவலியும்இழப்பும்?



மிகக் கஷ்டப்பட்டு சிரிப்பை முகத்தில் உள் வாங்கி, "ரெண்டுபேருக்கும்பெட்டைச்சட்டை போட்டுஎடுத்தது" என்று சொல்லி முடிக்கும்போதே, கஷ்டப்பட்டு கடன் வாங்கிய சிரிப்புக் காணாமற் போயிருந்தது.



அல்பத்தின் அடுத்த பக்கத்தில் இருந்த படத்தைப் பார்த்ததும், "இது மகன் ரூர் போகேக்க எடுத்தது. பள்ளிக் கூடத்தால கூட்டிட்டுப் போனவங்கள்."
"எப்ப கூட்டிட்டுப் போனவங்கள் என்று தெரியுமா?"
"இல்லையடி செல்லம். 7ஆம் ஆண்டோ 8ஆம் ஆண்டோ படிக்கேக்கதான்" என்று சொல்லி விட்டு அந்தப் படத்தினுள்ளே புதைந்து விட்டார்.



"அமலுக்குட்டிபோட்டியிலவென்றதுக்குப்பரிசுவாங்கினது. கனகாம்பிகைக்குளம்பள்ளிக்கூடத்திலபடிக்கேக்கைஎன்று நினைக்கிறன். பரிசு கொடுக்கிறவர் இஞ்சயத்தைய அப்போதைய பொறுப்பாளர்."



"இது வீடு குடிபூரல் படம்"
"எப்ப நடந்தது?" "நாங்கள் அப்பதான் முதல் முதலா கிபிரைக் கண்டம். அண்டைக்கு எங்கட வீடு குடிபூரல் நடந்தது. கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு பின்நேரம்கிபிரால அடிச்சவங்கள். 5 பேர் செத்தவை. கிபிர் என்றா என்னென்று அண்டைக்குத்தான் தெரிஞ்சது."



பக். 40

# 'படைவீரர்கள் குதிருக்குள் இல்லை'



- ஸ்டோஸ்வாமி

பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததாகக் காண்பித்து இத்தகைய பொறுப்புக்கூறல்களிலிருந்து தமது படைகளை விடுவித்துக்கொள்ள பகீரதப்பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சாத்தியமான வழிகளிலெல்லாம் முயற்சிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு படியாக மேற்சொன்ன அறிக்கை படலத்தை எடுத்துக்கொள்ளலாம். கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அரச தலைவரும் பலாலியில் வைத்து இதனைத்தான் மொழிந்துவிட்டுச் சென்றிருந்தார். முப்படையினருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்ய அனுமதிக்கப்போவதில்லை என்றும் கூறியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடர் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்துவிட்ட நிலையில் அமளிதுமளியான பல சம்பவங்கள் அங்கும் இங்கும் அரங்கேறிவருகின்றன. இலங்கையின் மனித உரிமைகள் நிலவரத்தை கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி குறித்த கூட்டத்தொடர் ஆராய்வதால் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பலவும் தருணத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்துவதில் குறியாக இருக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் உள்ள சம்புத்துவ ஜயந்தி மந்திரயவில் நடந்த நிகழ்வொன்றில் முன்னைய ஆட்சியின் அரசியல் மற்றும் இராணுவ பிரபலங்கள் கூடி அறிக்கை ஒன்றினை கைமாற்றி இருக்கிறார்கள். குறித்த அறிக்கை எதிர்வரும் 22ஆம் திகதி ஜெனிவாவில் முன்வைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

"இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் விசாரணை தொடர்பான உண்மையான மதிப்பீடு: ஆயுதப்படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கான பதிலடி" என தலைப்பிடப்பட்ட மேற்படி அறிக்கை, குறித்த நிகழ்வில் வைத்து கை மாற்றப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் கையளிக்கப்படவிருக்கும் அதேவேளை, இதன் பிரதிகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அங்கத்தவர்களுக்குக் கிடைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. அம்பாறை மாவட்டத்திற்கான ஐ.ம.சு.முவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலங்கை கடற்படையின் படைப்பிரதானியாகவும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநராகவும் விளங்கிய மொஹான் விஜயவிக்கிரம, இலங்கைத் தரைப்படையின் 43ஆவது படைப்பிரதானியாக விளங்கிய ஜெனரல் தயா ரத்நாயக்க, யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியாகவும் பின்னர் வடமாகாண ஆளுநராகவும் பதவி வகித்த மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, இறுதிப்போரின்போது 53ஆம் பிரிவு படையை வழிநடத்தியவரும் அண்மையில் 'நந்திக்கடலுக்கானவழி' என்னும் நூலினை வெளியிட்டவருமான மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, ஊர்காவல் படையின் முன்னாள் பணிப்பாளராக விளங்கிய ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் ஆகியோர் பங்கேற்றனர். இவர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

### முதுகெலும்புப் பிரச்சினை

இதனைவிட மகாசங்க உறுப்பினர்கள், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, குணதாச அமரசேகர மற்றும் ஜி. எல். பீரிஸ் போன்றோரும் நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர்.

தேசிய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரரின் ஏற்பாட்டில் குளோபல் சிறிலங்கா அமைப்பின் அனுசரணையுடன் தர்ஷன் வீரசேகர தலைமையிலான சட்டத்தரணிகளால் தொகுக்கப்பட்ட இந்த 100 பக்க அறிக்கையை ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளரின் கரங்களுக்கு கிடைக்கச் செய்வதில் மும்முரம் காட்டப்பட்டிருக்கிறது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல்கள் பற்றிய சொற்கள் காதில் பட்டவுடனே அதில் குற்றஞ்சாட்டப்படும் தரப்பு, இலங்கையின் பாதுகாப்பு படைகள் என்பது அனைத்துலக இரகசியம். அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஆங்காங்கே சில வழக்குகள் உள்ளூர் நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்பட்டும் இன்னும் சில நத்தை வேகத்தில் நகர்ந்துகொண்டும் இருக்கின்றன. ஆனால் பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததாகக் காண்பித்து இத்தகைய பொறுப்புக்கூறல்களிலிருந்து தமது படைகளை விடுவித்துக்கொள்ள பகீரதப்பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. சாத்தியமான வழிகளிலெல்லாம் முயற்சிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு படியாக மேற்சொன்ன அறிக்கைப் படலத்தை எடுத்துக்கொள்ளலாம்.

கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அரச தலைவரும் பலாலியில் வைத்து இத்னைத்தான் மொழிந்துவிட்டுச் சென்றிருந்தார். வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்து வந்து எமது இராணுவத்தினருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளவேண்டுமென ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் கொண்டு வந்த தீர்மானத்தை முற்றாக நிராகரித்ததாக தெரிவித்திருந்த அவர், முப்படையினருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்ய அனுமதிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புத்தரப்பினரை சந்தித்துப் பேசிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெம்பூட்டிச்சென்றிருந்தார்.

### சுமந்திரனின் பதிலடி

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடந்த நினைவு தின நிகழ்வொன்றில் பங்குபற்றிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஆ.சுமந்திரன், பலாலியில் வெளியிட்ட ஜனாதிபதியின் கருத்துக்கு பதிலுரையை வழங்கியிருந்தார். எந்த இராணுவத்துக்கு எதிராகவும் வழக்கு தொடுக்க விடமாட்டேன் என்பது முதுகெலும்பு உள்ள ஒருவர் சொல்லும் செய்தி அல்ல. மாறாக எந்த விசாரணையையும் சந்திக்கத் தயார் என்று சொல்பவருக்குத்தான் முதுகெலும்பு இருக்கிறது என்று அவர் கொந்தளித்திருந்தார். விசாரணைக்குப் பயந்து ஓடுகின்ற ஒருவர், முதுகெலும்பு இருப்பதாக பேசுவதற்குத் தகுதியற்றவர் என்றும் தமதுரையில் அவர் மறுத்தான் கொடுத்திருந்தார்.

கலப்பு நீதிமன்றம், வெளிநாட்டு நீதிபதிகள், சர்வதேச விசாரணை என்ற பதங்கள் ஆட்சியாளர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துவதற்குக் காரணம், அது நேரடியாகவே படையினரின் நலன்களைப் பாதிக்கும் என்பதே. அதனால்தான் எடுத்ததற்கெல்லாம் 'படையினர் குதிருக்குள் இல்லை' என்னும் முழக்கம் வலுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் படைத்தரப்பினரின் பொட்டுக்கேடுகள் உணரப்பட்டாலன்றி கால அவகாசம் கோருதல் எல்லாம் காலம் கடத்தும் கைங்கரியமேயன்றி வேறொன்றுமில்லை.







சிரிப்பு



மனைவி:
இனி ஒரு நிமிடம் கூட என்னால, உங்களோடு சேர்ந்து வாழ முடியாது! அதனால நான் தற்கொலை பண்ணிக்கப் போறேன்...!

கணவன்:
அந்த நிமிடமே நானும் என் உயிரை விட்டிடுவேன்!

மனைவி: நீங்க எதுக்காக சாகனும்?

கணவன்: எந்த ஒரு அதிக சந்தோசமான செய்தியையும் தாங்கக் கூடிய சக்தி என் இதயத்துக்கு இல்லேண்ணு டாக்டர் சொல்லி இருக்கார்!

மனைவி: ????



ஆசிரியர்:
உங்க பையன் ஆங்கிலத்தில படு வீக்கா இருக்கான் சார்.

தந்தை : தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க டீச்சர்.

ஆசிரியர்:
தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலு விழந்து இருக்கின்றான் ஐயா.



கணவன் : ஏண்டி அப்படி என்ன தலைபோற அவசரமென்று ஆட்டோ பிடிச்சு ஆபீசுக்கே வந்திருக்கிறே?

மனைவி : நம்ம வீட்டு வேலைக்காரியைக் காணோம். நீங்களாவது ஆபீசில இருக்குறீங்களான்னு பார்த்துட்டு போகத்தான் வந்தேன்!



# குரல்

## தமிழறியாரோ நம் தம்பிரான்...?

6



தமிழில் இறைவனை அர்ச்சித்தல் என்பது சில இடங்களில் நடைமுறையில் இருக்கின்றது. அர்ச்சினை மந்திரங்கள் சமஸ்கிருதத்தில் இருக்கட்டும் ஏனெனில் அதற்கான ஓசை அளவுகளே மந்திர சக்தியைக் கொடுக்கின்றன. அவற்றைத் தமிழிலே மொழி பெயர்க்கும்போது அதன் ஓசை அமைப்பு மாறி விடும் என்ற வாதம் எற்புடையதுதான்.

வேலணையூர் தாஸ்

இந்து ஆலயங்களுக்குச் சென்றுவரும்போது என்னுள் உதித்த சந்தேகமே இது. வழமைபோன்று அன்றும் ஆலய தரிசனம் சென்றிருந்தேன் ஆலயத்தின் பிரதம ஆச்சாரியார் பக்தர்களுக்கு உரையாற்றிக் கொண்டிருந்தார் அவர் அந்த உரையை
'கரஸ்த கதலீ சூத பநஸேக்ஷூக மோதகம்
பால ஸூர்ய ப்ரபாகாரம் வந்தேஹம் பாலகணபதிம்...' என்றவாறு கணபதி சுலோகத்தோடு ஆரம்பித்தார். மோதகம், பாலகணபதிம் என்று அவர் கூறிய வார்த்தைகளை வைத்து அது விநாயகர் வணக்கம் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குப் புரிந்திருக்கும். ஆனால், "தனது துதிக்கையோடு சேர்ந்த ஐந்து கரங்களில், முறையே மா, வாழை, கரும்பு, பலா, மோதகம் ஆகியவற்றைத் தாங்கியவரும், இளம்சூரிய நிறத் திருமேனியை உடையவருமான, பாலகணபதியை வந்தனம் செய்கின்றேன்" எனும் பொருள் நிறைந்த இதை அவர் தமிழிலே சொல்லியிருந்தால் பக்தர்களுக்கும் கணபதியை வழிபடுகிற மனநிலை ஏற்பட்டிருக்கும் அல்லவா...? அல்லது 'பாலும் தெளிதேனும்...", "ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை..." போன்ற இனிய தமிழிலுள்ள விநாயகர் துதிப்பாடலொன்றை அவர் பாடியிருக்கலாம்...!

ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான இந்துசமய ஆசிரியர்கள் தமிழிலே உள்ள துதிப் பாடல்களை, ஏன் தமிழ் வேதம் என்கின்ற தேவார, திருவாசகங்களைக்கூடப் பாட விரும்புவதில்லை. தமது பூசை நடைமுறையில் அர்ச்சனைக்கு அடுத்ததாக "தேவாரம் முதலியன அருளிப்பாடுக..." எனப் பக்தர்களுக்குப் பணித்துப் அவர்களைப் பாட வைத்தாலும் தாங்கள் பாடுவதில்லை. சமஸ்கிருதம் தான் தேவபாசை அதை விடுத்துத் தமிழில் பாடினால் அதன் செழுமை, பக்திப் பரவசம் குறைந்து விடும் என இவர்கள் கருதுகிறார்கள் போலும்.


தமிழில் இறைவனை அர்ச்சித்தல் என்பது சில இடங்களில் நடை முறையில் இருக்கின்றது. அர்ச்சினை மந்திரங்கள் சமஸ்கிருதத்தில் இருக்கட்டும் ஏனெனில் அதற்கான ஓசை அளவுகளே மந்திர சக்தியைக் கொடுக்கின்றன. அவற்றைத் தமிழிலே மொழிபெயர்க்கும்போது அதன் ஓசைஅமைப்பு மாறிவிடும் என்ற வாதம் எற்புடையது தான்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். சில அர்ச்சகர்கள் புத்தகம் பார்த்து அல்லது எழுதிவைத்திருப்பதை படித்துத்தான் மந்திரம் சொல்கின்றார்கள். மந்திரம் என்பதை மனனம் செய்து, பலமுறை ஓதிப் பயின்றால் மட்டுமே அதற்கான ஓசை நயத்தொடு ஓத முடியும் என்பதுதான் உண்மை நிலமை. இவ்வாறு இருக்க உரைகளின்போதும் பூசைகளின் போதும் தமிழ் வேதத்தைப் பாட இவர்கள் ஏன் தயங்க வேண்டும்...?

சுந்தரமூர்த்தி நாயனாரைப் பார்த்து "பித்தா என எனை நீ பாட வேண்டும்" எனச் சிவபிரான் ஆசைப்பட்டதாகச் சொல்கின்றது திருத்தொண்டர் புராணம். ஸ்கந்தபுராணத்தைத் தமிழில் பாடிய கச்சியப்பருக்கு, காப்புச்செய்யுளுக்கு சிவபெருமானே அடியெடுத்துக் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்றது. வடமொழிப் பாடகர் ஏமநாதனுக்கு எதிராக இறைவனே வந்து தமிழிலே பாடி, அவனை தோற்கடித்து ஓடச் செய்ததாகத் திருவிளையாடற் புராணத்தில் ஒரு கதையிருக்கின்றது.

தமிழிலே இனிய திருவாசகங்களால் தன்னைப்பாடிய மணிவாசகரை இறைவன் தன்னோடு சேர்த்துக்கொண்டார். இதனால்தான் "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்..." என்றார் அப்பர் சுவாமிகள். இவ்வாறாகத் தமிழில் பாடுவதற்கு ஏலவே இறைத்தொண்டர்கள் பலரும் அடியெடுத்துக் கொடுத்திருக்க இன்றுள்ளவர்கள் தமிழிலே பாடத் தயங்கலாமா...? அல்லது தமிழ்தான் அறியாரோ நம் தம்பிரான்...?

இந்தப் பத்தி இந்துக் குருமார் எல்லோரையும் சுட்டுவதல்ல. மந்திரங்களை முறையோடு ஓதி, அவற்றைத் தமிழிலும் பாடிப்பொருள் விளக்குகின்ற ஆச்சாரியர்கள் சிலர் இன்றும் இருக்கின்றார்கள் என்பதுவும் உண்மையே!



## மறதி வேண்டும்

இறைவனின் கொடையிது
அற்புதக் கணமிது
மறதிக்கு மருந்து தேடி
மாந்தர்கள் அலைவதுண்டு

மறக்கத் தெரிந்த மனிதன்
மகிழ்வோடிருக்கிறான்
மனதின் காயங்களெல்லாம்
மறப்பதாலன்றி வடு மாறுவதில்லை

கடந்து வந்த பாதைகளில்
கசப்புணர்வுகள் பலகோடி
நாளைய நிம்மதிக்காய்
அவைகளை மறந்திடலே மருந்தாகிடுமே

எதிர்காலம் நோக்கிய பயணத்தில்
திரும்பிப் பார்த்து நடந்திட முடிவதில்லை
பாதிவழியில் தடுமாறிட
சந்தோசவாழ்வில் தடுக்கிவீழ்வதாகிடும்

மனிதனின் ஆற்றலறிந்த இறைவன்
மறதி தந்து மகிழச்செய்திருக்கிறான்
மனதின் ஆளுமையில் மனிதர்களால்
மறப்பதின்றி மகிழ்ந்திட முடிவதில்லை

மறப்பதுவும் மன்னிப்பதுவும்
மகிழ்வுக்கு வித்திடும் இன்றே
மன்னித்து மறந்துவிடு உன்
வாழ்நாள்கள் உயிர்பெற்றுவிடும்

பாமதி, துன்னாலை



## இப்படிக்கு...



நாவிலிருந்தோ
நரம்புவழி கடந்து
விரல் நுனி வழியோ
வெளியேறும்
எல்லா வார்த்தைகளும்...

எவரெவரோ உருவாக்கி
எவரெவரோ பயன்படுத்தி
அழகுபடுத்தியும்
எச்சில்படுத்தியும்
எறியப்பட்டவைகளே!

எழுத்தும் வார்த்தையும்
என்னாலும் உங்களாலும்
உருவாக்கப்படவில்லை
இருந்தும்...
அடியில் பதிக்கிறோம்
அவரவர் பெயரை அழகாக!

செந்தூரன்,
சண்டிலிப்பாய்.

## சிரிப்பு



**கதிரர் :** என்னப்பா உங்கட வீட்டில எப்பவுமே கல கலவெண்டு சிரிப்புச் சத்தமாக் கிடக்குது...?

**சோமர் :** அது ஒண்டுமில்லடா...என்ர மனிசிக்கும் எனக்கும் சண்டை வந்தால் ஒரே சிரிப்புத்தான்.

**கதிரர் :** சண்டை வந்தால் சிரிப்போ... எப்பிடியப்பா அது...?

**சோமர் :** மனிசி என்னை நோக்கிப் பாத்திரங்களை எடுத்து வீசுவாள். பட்டுதெண்டால் அவள் சிரிப்பாள், படாவிட்டால் நான் சிரிப்பன். அவ்வளவுதான். சிம்பிள்...



## சினிமா



ஒரு வேகமான நகர வளர்ச்சியின் பின்னாலுள்ள இருண்ட பரிமாணங்களையும் அவற்றிடையே சுடர்விடும் மனித நேயங்களையும் திரையிடுகின்றது 'மாநகரம்'. இதற்கு இந்தியாவின் சென்னை நகரம் கதைக் களமாகின்றது.

ஸ்ரீP, சந்தீப், ரெஜினா, சார்லி, அருண் அலெக்சாண்டர், ராமதாஸ், மதுசூதனன் ஆகியோர் சென்னையின் வெவ்வேறு அடையாளமாக வாழ்பவர்கள். இவர்களின் வாழ்க்கையை ஒரு நாளில் நடக்கும் சில சம்பவங்களினூடே இணைப்பதுதான் 'மாநகர'த்தின் களம்.

பல்வேறு இழைகளை ஒன்றாக இணைத்துக் கதை சொல்லும், இயக்கும் திரைக்கதை உத்தி தமிழுக்குப் புதியதில்லை என்றாலும், அதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருப்பவர்கள் ஒரு சிலர்தான். அந்த வரிசையில் மாநகரத்தின் இயக்குநர் லோகேஷ் கனகராஜும் இணைந்துள்ளார். பல்வேறு கதாபாத்திரங்களையும் அவர்களை இணைக்கும் சம்பவங்களையும் வைத்துக்கொண்டு பதைபதைக்க வைக்கும் திரைக்கதைப் பயணத்தைச் சாத்தியப்படுத்தியிருக்கின்றார் இவர்.சென்னையின் பல்வேறுபட்ட மனிதர்கள், அவர்களுடைய மாறுபட்ட இயல்புகள், வெவ்வேறு இடங்கள், தருணங்கள், செயல்கள் ஆகியவற்றால் உருவாகும் சிக்கல்களை யதார்த்தமாகக் காட்சிப்படுத்தியிருக்கின்றார். ரவுடிகள், தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியர்கள், பொலிஸார், சாதாரண மனிதர்கள் ஆகியோரை அச்சு அசலாகக் கண் முன்கொண்டு வருகின்றார்.

கதைக் களத்தையும் மாந்தர்களையும் நிகழ்வுகளையும் விரிவாகவும் துல்லியமாகவும் சித்திரிக்கும் இயக்குநர், சிலவற்றைச் சொல்லாமல் சொல்வதிலும் கைதேர்ந்தவராக இருக்கின்றார். உதாரணமாக, தன்னிடம் காதல் யாசகம் கேட்கும் சந்தீப்பிடம் ரெஜினா கோபப்பட்டாலும், சந்தீப்பின் மீது அவருக்கும் காதல் இருப்பதை மிக நுட்பமாக உணர்த்திவிடுகின்றார். ராமதாஸின் வெள்ளாந்தியான இயல்பு, நேர்மையும் எளிமையுமாய் சார்லியின் இயல்பு, சென்னையைப் பற்றிய கசப்பைச் சுமக்கும் அதன் இருண்ட பகுதிகள், ரவுடிகளின் உலகம், சிக்கலில் மாட்டிக் கொண்ட ரவுடிகள், பெரும் தாதாவாக இருந்தும், தனது மகனைக் காப்பாற்றுவதற்காக அலைக்கழியும் மதுசூதனன் எனப் பாத்திர வார்ப்பிலும் சூழல் சித்திரிப்பிலும் இயக்குநர் அசத்தி விடுகின்றார்.

பிலோமினின் கச்சிதமான படத்தொகுப்பு படத்தின் விறுவிறுப்பை உறுதிசெய்கின்றது. செல்வகுமாரின் அபாரமான ஒளிப்பதிவு படத்தைத் தாங்கி நிற்கின்றது. பளிச்சென்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனம், இரவு நேரத்தின் சந்து பொந்துகள் ஆகியவை திரையில் அற்புதமாக உயிர்பெறுகின்றன. ஜாவேத் இசையில் பாடல்கள் மனதில் நிற்க மறுக்கின்றன. பின்னணி இசை அதை ஈடுகட்டிவிடுகின்றது. இயக்குநர் பல இடங்களில் வசனங்களாலும் கவனிக்க வைக்கின்றார். தற்செயல் நிகழ்வுகளின் ஆதிக்கம், ஆங்காங்கே தெரியும் சில ஓட்டைகள் ஆகியவை நீண்டிருந்தாலும் இரசனையுடன் ஓரளவு பார்க்க முடிந்த படமாகவே 'மாநகரம்' மிளிர்கின்றது.

# மாநகரம்

### திரை அரங்கில் பார்க்க முடிந்த படம்



# ஆண்மைக்கு வைக்காதே ஆப்பு



செந்தணல் வாய்வைத்து உன்காற்றுப்பைகருக்கி
வந்த புகை ஊதுகின்றீர் ஊதுமிது சொந்தமெலாம்
சொக்கி நிற்க சொற்ப வாயுள் கொண்டு நீ செல்வதற்கு
மூக்குவழி நீ ஊதும் சங்கு.

நுரையீரல் பஞ்சைஉன் புகைதாக்கக்
கரையிலாத் துன்பக் கருமைவிரைவாய் - உன்
நெஞ்சினுள் சேர்ந்திட நொய்து வருந்தியே
பிஞ்சிலே போவாய் இறந்து.

பிடித்திடும் பீடியாலுன் பல் ஈற்றில் காவி
குடியேறக் காற்றுப்பை காசம்மடியேற்கும்
பிச்சாண்டிக் கோலத்தில் பீறிடும் இருமலொடு
மூச்சிழுக்க மூசுவாய் நொந்து.


**வளையமாய் நீவிடும் தீப்புகைவாழ்வை
வளைத்துக் கிடப்பதறியாய் - களைத்துக்
கனவீடு கேட்க இருமிக் கவலை
கனத்திடும் வாழ்வே உனக்கு.**

**வாய்க்கு நீ வைக்கின்றாய் கொள்ளி- இதனாலே
பேய்க்கோலம் கொள்ளுதுன் வாழ்க்கை- நாய்ப்பழக்கம்
வேண்டாமே, வாய்ப்பழக்கம் ஆகிவிட்டால் மாறாது
தீண்டாமல் வாழ்வாய்தினம்.**

புகையோ, பிடிப்பவர் புன்னகை போக்கும்
பகையைத் தொகையாய்ப் பெருக்கும்- தகைசார்
குணத்தைக் கெடுத்துக் குடியை அழிக்கும்
பணத்துக்கு வாங்கும் பிசாசு.

புகைவிடும் வாயினில் புற்றுநோய் சேரும்
நகைக்கும்படி வாழ்க்கை சோரும் திகைப்பாய் - நீ
பெண்ணுடன் கூடும் இன்பத்தைப் போக்கியே
ஆண்மைக்கும் வைக்குமே ஆப்பு.

நாகேந்திரம் நவராஜ்



## சூனிய யாசகர்கள்

காரிருள் மேவிய தங்கள் இதயங்களை
வெண்துணிகளால் போர்த்து மூடியபடி...
புன்னகைக்கும் வேசத்துக்குப் பின்புறமாக
புதைந்திருக்கும் இரகசிய அழுக்குகள்
பலவிதம் ; பல்லாயிரம்.

மக்களுக்கெனவாக
முன்மொழியப்படும்
நிறைவேற்ற முடியாத உறுதிமொழிகளை
காற்றிலே பறக்க விடுவதற்காய்
கரம் கூப்பியவண்ணம் வருகின்றன
சில வருடங்களுக்கு ஒருதடவை
பல 'சிரிப்புமுகங்கள்'.


'நானே நல்ல மேய்ப்பன்'(யோவான்10:11)
எனும்
இயேசுவின் சத்திய வாக்கினை
சால்வையாகப் போர்த்தியபடி...
ஒரு பக்கம்
கோஷம் போடத் தொண்டர்களும்
மறுபக்கம்
வேண்டாதவர்களை
வெட்டிச் சரிக்கக் குண்டர்களுமாய்...
கொலுவிருக்க ஆசைகொள்ளும்
கொடுப்புப் புன்னகைகள்
இந்த நிலப்பரப்புகளில் எங்கெங்குமாய்.

நேரே ஒரு புள்ளடி இடுவதால்
நிமிருமொரு உங்கள் வாழ்வெனப் பறைய
எத்தனை தரிசனம் மக்கள் முன்...
எத்தனை நடிப்புகள் இடைநடுவினில்!

வாக்குச் சீட்டினில் புள்ளடியிட்டோர்
வாழ்க்கையில் இடுக்கண்ணொடு
சுமைகளை ஏந்தி நிற்க,
மேலும் வளம் விரிந்து... நிறைகிறது மடியினில்
மேடை வாய்ப்பேச்சு வாண்மையர்க்கு.

மீண்டுமொரு தடவை
வேண்டுமொரு புள்ளடிக்காய்
நிறைவேற்ற முடியாத உறுதிமொழிகளை
நாவெங்கும் பரத்திக் கொண்டு...
நில மேனிகளில் நிமிர்ந்து வருகின்றன
தமக்கெனவாய்
ஆதாயம் தேடும்
அரசியல் சூனியங்கள்!

அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.







மிருசுவில்
தமிழ்தாசன்

நண்பர்கள் அனைவரும் இறந்த மாட்டை விட்டகன்ற உண்ணிகளாக ஓவசியை விட்டுக்கழன்று விட்டார்கள். அவனிடமிப் போது ரீவியும் இல்லை. அதைத்தான் வெற்றிவேலு வீட்டில் வைத்து அடித்து நொருக்கி விட்டார்களே! வேறு சொத்துக்கள் என்று எதுவுமே யில்லை. ரீவிக்கு மாதாந்தம் லீசிங் கட்டியே ஆக வேண்டும். தவறினால் கம்பி எண்ண வேண்டும். கூலி வேலை செய்து கிடைக்கும் ஊதியம் அவனுக்குச் சாப்பாட்டுச் செலவுக்கே போதாமலிருந்தது. எத்தனை நாளைக்குத் தான் கோயில் மடங்களிலும் கடைத்தாழ்வாரங்களிலும் படுத்துறங்குவது! வயிறாரச் சாப்பிட முடியாது தவித்தான். மிகவும் சிக்கலாகவிருந்தது அவனுடைய நிலை. 'சே! எட்டாம் வகுப்பையெண்டாலும் படிச்சு முடிச்சுப்போடலாமெண்டால்... அதுக்கும் அந்தக் கோதாரி விழுந்த சிவகுரு வாத்தி விட்டுதே என்னை!'

நடந்துமுடிந்ததை நினைத்துக்கவலைப்பட்டான். உண்மையிலேயே இப்போது தான் வாழ்க்கை என்றால் எப்படியிருக்கவேண்டும், எப்படி வாழ வேண்டும், அதைத் தான் எப்படி வாழ்கின்றான் எனும் உண்மைநிலை உறைக்கத்தொடங்கியது ஓவசிக்கு. வயதும் இருபது முடிந்து இருபத்தொன்றுக்குள் நுழைந்துவிட்டது.

'ஒருகலியாணம் முடிச்சிட்டால் வயிறாரச்சாப்பிடலாம். நிம்மதியாய்ப் படுத்தெழும்பலாம். சீதனத்தை வாங்கினால், உழைக்கிறதில நாலுகாசு மிச்சம் பிடிக்கலாம். பட்டகடனைத் தீர்க்கலாம் எங்கையெண்டாலும் ஒரு கல்யாணம் முடிக்க வேணும். கட்டாயம் முடிச்சே ஆகவேணும்'

தேடிய பூண்டு காலில் அகப்பட்டுவிட்டதுபோல ஓவசியின் பார்வையில் பட்டென்றுபட்டாள் அவள் பெயர் தான் சௌந்தரி. ஆனால் அவள் மீது சௌந்தர்யமென்பது தேடித்தேடியலைந்தாலும் இம்மியளவும் கிடையாது. குண்டான உடலமைப்பு. குண்டுகளே துளைக்க முடியாத குண்டு! குண்டாக இருந்தாலென்ன! ஓவசிக்கு இப்போது ஒருபெண்துணை தேவைப்பட்டது. அவளுக்கும் ஓர் ஆண்துணை தேவைப்பட்டிருக்கவேண்டும். எந்தப் பெண்ணும் தெருநாயாகக்கூட மதிக்காத ஓவசியை சௌந்தரிமட்டும் நாறல்மீனைப்பூனை பார்ப்பது போல உற்றுப் பார்த்தாள். அந்தப் பார்வைஒன்றே ஓவசிக்குப் போதுமாகவிருந்தது. துணிந்து அவளிடம் பேச்சைக் கொடுக்கலாம்.

அப்படியே கொடுத்தான் அவர்களிருவரின் வாழ்க்கையிலும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்பட்டன.

ஓவசிபோலவே இவளுக்கும் பெற்றோர் இல்லை. சிறிய தந்தையின் அரவணைப்பில் வாழ்கின்றாள். அவளும் குண்டு ஓவசியும் குண்டு உருவமைப்புக்களும் மிகப் பொருத்தமாகவேயிருந்தன. குடும்பத்தில் சண்டை ஏற்பட்டால் ஒருவரையொருவர் தாக்கமுடியாது. தேகபலம் சமமாகவேயிருந்தது. எப்படித்தான் சண்டையிட்டாலும் முடிவு 'ட்றோ' வில்தான் வந்து நிற்கும். அவளுடன் பேசிப் பார்க்க முடிவு செய்தான் ஓவசி. அவளைப்பற்றிய முழுவிவரங்களையும் அறியவேண்டும் அவளின் சம்மதத்தை அறிய வேண்டும் எப்படியாவது இவளைத்திருமணம் செய்து விடுவது நன்மையாகவே பட்டது ஓவசிக்கு. "இல்லறமல்லது நல்லறமன்று" மூன்றாம் வகுப்பில் கனகசுந்தரம் வாத்தியாரிடம் இதைப்படித்த ஞாபகம் ஓவசிக்கு.

சௌந்தரி எங்கேயோ ஒரு பீடிக் கொம்பனியில் பீடி சுற்றிப் பிழைக்கின்றாள். வேலையில்லாத நேரங்களில் இப்படி ஊர்சுற்றிக் களைக்கின்றாள். முகத்துக்கு மஞ்சள் பூசிவருகின்றாள் போல் தெரிந்தது. கறுப்பு மேனியில் முகம் மட்டும் வெம்பிப்பழுத்த அம்பலவி மாம்பழம் போல் மஞ்சளுமில்லாத வெண்மையுமில்லாத ஒருவித பழுப்பு நிறமாகக் காட்சியளித்தது. நெற்றிமயிர் சுருள்சுருளாகக்காட்சியளித்தது. விரல்களால் நன்றாகப்பாடுபட்டுச்சுருட்டியிருப்பாள் போலும். சற்றுமிதப்பாயிருந்த பற்களுக்குக் கிளிப்செய்திருந்த சவுந்தரியின் அலங்கார முயற்சிகளை அவதானிக்கும் போது அவளுக்கும் கல்யாண ஆசை வந்து விட்டதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும். வலதுகை மோதிரவிரலில் ஐந்து ரூபா நாணயக்குற்றியில் செய்யப்பட்ட ஐம்பொன் மோதிரம். கழுத்தில் ஒரு சங்கிலி வியர்வைபட்டுப்பட்டு அது மெல்ல மெல்லக் கறுத்து வந்து தனது போலித்தனத்தைக் காட்டியபடிநின்றது. இவைகளெல்லாம் அவளின் வறுமை நிலையைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது.

எது எப்படியோ எடுத்தஎடுப்பில் அவளிடம் போய் 'ஐலவ்யூ' சொல்வது ஒருவேளை ஆபத்தாகவும் முடியலாம். நேரடியாக அவளின் வளர்ப்புத் தந்தையிடம்சென்று அவரின்சம்மதத்தைப்பெற்றுக் கொள்ள வேண்டும். அதுமட்டும் போதுமா! சவுந்தரியும் ஒப்புக் கொள்ள வேண்டுமே! இத்தனை காரியங்களையும் ஓவசிமட்டும் ஒற்றையாளாக நின்று ஒப்பேற்ற முடியவே முடியாது. நண்பர்களின் சேர்க்கை இனி வேண்டாமென்று நின்றவன். இப்போது அவர்களுடன் மீண்டும் கூட்டணியமைக்க வேண்டிய தேவையிருந்தது. நல்லவர்களோ! கெட்டவர்களோ அவர்களின் அனுசரணை தேவையாகவேயிருந்தது. நீண்ட நாள்களுக்குப் பின்பு நண்பர்கள் தீபனையும் நாதனையும் கண்டுபிடித்து விடயத்தைக் கூறினான் அவர்கள் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். கூட்டணி இயங்கத் தொடங்கியது.


7

(தொடரும்)

காதலன் : நம்ம கல்யாணம் பற்றிக் கதைக்கிறதுக்கு உங்கட வீட்டுக்குப் போயிருந்தேன்
காதலி - எங்கட அப்பாவப் பார்த்துக் கதைச்சனீங்களா? அவர் என்ன சொன்னார்...?
காதலன் : இந்தக் கல்யாணம் நடக்கும்போலத் தெரியேல்ல...
காதலி - எதுக்கு அப்பிடிச் சொல்லுறீங்க...? என்னாச்சுது...?
காதலன் : உங்க அப்பாவைப் பார்க்கப்போன இடத்தில உங்க தங்கச்சியைப் பாத்தன் அது தான்.
காதலி !!!



> ஒரு படைப்பு என்ற வகையில் குறைகளும், போதாமைகளும் கொண்ட படம்தான் இது. வன்புணர்வுக்கு முன்பான காட்சிகள் படைப்பூக்கமோ, பக்குவமோ இல்லாமல் ஏனோ தானோவென்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.




# நிசப்தம்

சிறுமி ஒருத்தி பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுகின்றாள். அவளுக்கு ஏற்படும் பாதிப்புக்களும், அவற்றிலிருந்து மீளும் வழிகளுமே இந்த 'நிசப்தம்'. உளவியலை அதிகம் கொண்டாடுவதாய்ச் சமகாலச் சமுதாயச் சீரழிவு ஒன்றைச் சிறந்த முறையில் படமாக்கியிருக்கின்றார் இயக்குநர்.

இந்தியா பெங்களூரில் வசிக்கும் ஆதி (அஜய்) ஆதிரா (அபிநயா) தம்பதியின் ஒரே மகள்தான் எட்டுவயதுடைய பூமிகா (பேபி சாதன்யா). எளிய குடும்பம். நடுத்தர வாழ்வை நடத்தி வரும் இந்தக் குடும்பத்தில்திடீரெனவீசியபுயலாகின்றதுமகள் பூமிக மீதான பாலியல்வன்புணர்வு. பட்டாம்பூச்சியாய்சிறகடித்துத்திரியும்பருவத்தில்பூமிகா, ஒரு காம வெறியனால் வன்புணரப்படுகின்றாள். கொடூரமாக அவள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் குற்றுயிராக மீட்கப்படுகின்றாள். தமது பிள்ளைக்கு இழைக்கப்பட்ட துன்பங்களைக் கண்டு உடலாலும் மனதாலும் பெற்றோரின் வாழ்க்கையும் சோபையிழக்கின்றது.

ஊடகங்கள் நீதிகேட்டு எழுதுவதற்காக ஓடி வருகின்றன. சட்டம் அந்தக் கொடூரனைத் தேடுகின்றது. வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட சிறுமியோ, தனது தந்தை உட்பட எந்த ஆணையும் காண்பதற்கு அருவருப்புற்றுப் பீதியில் உறைந்து கிடக்கின்றாள். குழந்தையின் உடலையும் மனதையும் தேற்றி, மீண்டும்பழையநிலைக்குக்கொண்டுவர முடிந்ததா? கதை பயணிக்கின்றது.

உண்மைச் சம்பவத்தில் இருந்து உருவாக்கப்பட்டிருக்கும் 'நிசப்தம்', பார்வையாளர்களின் இதயங்களில்கடும்அதிர்வுகளைஏற்படுத்திவிடுகின்றது. தெளிந்த நீரோடைபோல் செல்லும் ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சி, அந்த நீரோடையைக் கானல் நீராக்கிவிடும் சம்பவம், சம்பவத்துக்குப்பிறகான போராட்டம் என நேர்கோட்டில் செல்லும் திரைக்கதை, சம்பவத்தை நேரடியாகக் காணும் சாட்சிகளாகப் பார்வையாளர்களை மாற்றிவிடுகின்றது. பெற்றோரின் வலியையும் போராட்டத்தையும் மிகையின்றிப் படமாக்கியிருக்கின்றார் இயக்குநர் மைக்கல் அருண். பாதிக்கப்பட்ட பிஞ்சு உள்ளத்துக்குநேரும்உளவியல்பாதிப்புக்களின்அடர்த்தியையும் அவற்றைச் சீர்செய்யும் குணமாக்கத் தேவைப்படும் உளவியல் சிகிச்சையின் அவசியத்தையும் காட்டியுள்ள விதம் பாராட்டத்தக்கது. இதுபோன்ற படங்களுக்குப் பொறுப்புணர்வும் நுட்பமும் நுண்ணுணர்வும் பரபரப்பைத் தவிர்க்கும் போக்கும் அவசியம். மைக்கல் அருணின் அணுகு முறையில் இவை அனைத்தும் இருக்கின்றன. கொடூரத்தைக் காட்சிப்படுத்துவதில் பொறுப்புணர்வோடும் கண்ணியத்துடனும் செயல்பட்டிருக்கும் இயக்குநர், குற்றத்தின் பாதிப்பை வசனங்களாலும் இலைமறைகாய் போன்ற காட்சிகள் வழியாகவும் வலுவாகச் சித்திரித்திருக்கின்றார். குழந்தையின் வேதனைகளையும் நுட்பமாகக் காட்சிப்படுத்தியிருக்கின்றார்.



## அனைவரும் பார்க்க வேண்டிய படம்

பல இடங்கள் மனதைத் தொடுகின்றன. கார்ட்டூன் பாத்திரங்கள்போலவேடமிடுவதற்கானபொருள்களை வாடகைக்கு விடுபவர் காட்டும் கரிசனம் நமது மனதை அசைத்துவிடுகின்றது. குழந்தைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மருத்துவர் சொல்லும்போது பூமிகாவின் தந்தை மட்டுமல்ல பார்வையாளர்களும் அழுகின்றார்கள். பூமிகா மீண்டும் பாடசாலைக்குச் செல்லும்போது அவளுடையசீருடைக்குள் இயற்கைஉபாதைக்கான சிறுபையை தாய் பொருத்தும் காட்சியில் யாராலும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இந்தக் காட்சிகள் பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்குறித்தவிழிப்புணர்வைஏற்படுத்தக்கூடியவை. மாறுவேடத்தில்வந்து ஆறுதல்அளிக்கும் தந்தையைப்பூமிகா கண்டுபிடிக்கும் காட்சி நெகிழவைக்கின்றது.

உளவியல் சிகிச்சையாளர், பொலிஸ் பெண் அதிகாரி ஆகியோர் பாதிக்கப்பட்ட பிள்ளையிடம் நடந்துகொள்ளும் விதம் இதுபோன்ற சம்பவங்களைக் கையாள்வதற்குச் சிறப்பான பாடம். பூமிகாவின் நண்பர் கள் அவளை அரவணைத்துக் கொள்ளும் விதத்தில் குழந்தைகளின் களங்கமற்ற உலகம் அழகாக வெளிப்படுகின்றது.

நீதிமன்றக் காட்சிகள் பதைக்க வைக்கின்றன. இதுபோன்ற வழக்குகளில் காவல்துறையின் அணுகுமுறை, சட்ட நடைமுறைகள், குற்றம் இழைத்தவர்களுக்குக் காட்டப்படும் சட்டரீதியான சலுகைகள் ஆகியவற்றையும் இயக்குநர் பொருத்தமாகக் காட்சிப்படுத்துகின்றார். குற்றவியல் சட்ட நடைமுறைகள், பாதிக்கப்பட்டவர்களின் காயங்களைக் குத்திக் குத்தி மேலும் புண்ணாக்கும் காரியத்தைச் செய்கின்றன என்பதையும் சொல்கின்றார்.

குழந்தை சாதன்யாவின் நடிப்பைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. வலியையும், வேதனையையும், அதிலிருந்து மீண்டு வரும் உணர்வையும் அவ்வளவு அற்புதமாகக் கொண்டுவருகின்றார். அஜய், அபிநயா இருவரும் பாத்திரம் உணர்ந்து நடித்திருந்தாலும், இதுபோன்ற பாத்திரங்களாயின் அவர்களிடம் இன்னமும் வலுவான நடிப்புத் தேவைப்படுகின்றது. உளவியல்சிகிச்சையாளர் ராது, பொலிஸ் அதிகாரி கிஷோர் ஆகியோர் கதாபாத்திரங்களாகவே வெளிப்படுகின்றனர். பாத்திரங்களின் வலியையும் போராட்டங்களையும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது ஷான் ஜாசீலின் இசை. 'மண் மீது பெண்ணாக' என்ற பாடல்திரையரங்கைவிட்டுவந்தபிறகும் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. மறைந்த பாடலாசிரியர் நா.முத்துக்குமாரின் பாடல்வரிகள் மனதைத் தொடுகின்றன.

ஒரு படைப்புஎன்றவகையில் குறைகளும், போதாமைகளும் கொண்ட படம்தான் இது. வன்புணர்வுக்குமுன்பான காட்சிகள் படைப்பூக்கமோ, பக்குவமோ இல்லாமல் ஏனோதானோவென்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சில காட்சிகள் ஆவணப்படத்தை ஒத்த பாணியிலுள்ளன. படத்தில் வசனங்கள் இன்னும்வலுவாக இருந்திருக்கலாம். எனினும், குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல்கள் குறித்துஅரிதாகவுள்ள பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் படம் என்பதால், குறைகளை மீறிப் பாராட்டப்பட வேண்டும். எவ்வளவு அபாயகரமான சூழலில் நமது குழந்தைகள் இருக்கின்றார்கள் என்பதைத் துல்லியமாகப் புத்தியில் அறைந்துவிடும் இந்தப்படம் காலத்தின் தேவை. கூடவே, போதைப் பழக்கத்தின் மோசமான விளைவையும்வெளிப்படுத்துகின்றது. பாதிப்பை மட்டும் சொல்லாமல், அதிலிருந்து மீள்வதற்கான வழியையும் தெளிவாகச் சொல்லியிருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைப் பேசும் 'நிசப்தம்' கட்டாயமாக அனைவரும் பார்க்க வேண்டிய படம்.

# பொய் வாசம்

அவர்கள் இருவருமே
தனித்தனியாக அழைத்தார்கள்

கேட்டிருக்க வேண்டியதில்லை
ஆனாலும் கேட்டார்கள்

சொல்லியிருக்க வேண்டியதில்லை
ஆனாலும் சொன்னேன்

கேட்கவேண்டுமே எனக் கேட்டார்கள்
சொல்லவேண்டுமேஎனச்சொன்னேன்

உண்மையா பொய்யாவென ஆராயும்
அவசியம் அவர்களுக்கில்லை
உண்மையைக் கொன்றேன்
பிணமாய் உயிர்ந்தெழுந்தது பொய்

ஊர்ந்து வந்த பொய்
ஓரமாய் பாய் விரித்தது மனதில்
நேரம் நகர நெருங்கிப் படுத்த
பொய்யின் கனம் பிணமாய் கனத்தது!

எட்டிப்பார்க்க மயக்கம் கூடியது
ஏராளமாய்க்கிடந்த பொய்களின் வீச்சத்தில்

பிணமாய் அலையும் பொய்களைக் கொல்ல
பிறிதொரு ஆயுதம் தயாரிக்க வேண்டும்.

*தர்சி, மானிப்பாய்.*



# சிவப்புக் கோடு

சிறுகதை

சிவகுருநாதன் சிறீறங்கன்

டும்... டும் ...டும்...

பெரும் இடியோசை. துள்ளி யெழுந்து கட்டில் நுனியில் அமர்ந்தேன். ஊ...ஊ... என்ற பேரிரைச்சலுடன் காற்றைக்கிழித்தவாறு ஆட்லறி எறிகணைகள் பறந்து சென்றன.

'சண்டை தொடங்கிற்று' மனைவி படுத்திருந்தபடி குரல் கொடுத்தாள். மீண்டும் எறிகணைகள் பறந்து சென்றன. ஓடிச் சென்று வாசல் கதவைத் திறந்தேன்.

"ஏன்ரா கதவைத் திறக்கிறாய்...?' என அம்மா சத்தம் போட்டார். எங்க போகுது எண்டு பார்த்தால், அச்செழுப்பக்கம் மின்னல் போல் வெளிச்சமடித்தது. "அடிச்சிட்டாங்கள்' என்றேன். மீண்டும் பெரும் சத்தத்துடன் சில எறிகணைகள் புறப்பட்டன. "சண்டை தொடங்கிற்று. நீங்கள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை" என மனைவி கூறினாள்.

நேரம் நான்கு மணியாகிவிட்டது. உலகமே அமைதியாக இருந்தது. வைத்த அலாரம் அடித்தது. "ஸ்கூலுக்குப் போகத்தான் வேண்டும்" என மனைவியிடம் கூறினேன். சமையல் வேலைகளில் அவள் இறங்க பாடசாலை ஆயத்தவேலைகளில் நான் மூழ்கிப் போனேன். 5.40 மணியளவில் நான் வேலைக்குப் போகத் தயாரானேன். கைப்பையை எடுத்துக் கொழுவி, அறைக்குச் சென்று என் செல்ல மகனை முத்தமிடக் குனிந்தேன். நித்திரையாய் இருக்கும் குழந்தையைக் கொஞ்சக் கூடாது என அம்மா தடுத்தா. எனக்கு அதில் உடன்பாடில்லை. அவன் முகத்தைப் பார்த்து விடைபெற்றேன். "பார்த்துப்போ" என்று அம்மாவும் 'கவனமாய்ப் போயங்வாருங்கள்" என மனைவியும் வழியனுப்பினார்கள்.

நான் எனது மோட்டார் சைக்கிளைக் கைதடி மலாயன் கபேக்குப் பின்னால் விடவேண்டும். அதற்குப் பின்னர் ஆறு மணிக்கு வரும் முகமாலை செல்லும் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். இது எனது வழமையான வேலை. சீரான சராசரி வேகத்தில் மோட்டார் சைக்கிளை ஓடிக் கொண்டிருக்கின்றேன்.

இரண்டு நாள்களுக்கு முன்புதான் உரும்பிராய் மருதனார்மட ரோட்டில் ஒருவரைச் சுட்டிருக்கின்றார்கள். புலிகளின் கிளைமோர் தாக்குதல்களின் பிற்பாடுதான் இவ்வாறான சூடு பரவலாக நடக்கத்தொடங்கி யுள்ளது. யாரைச் சுடுகின்றனர்? ஏன் சுடுகின்றனர்? எனத் தெரியவில்லை. ஆனால், மக்கள் ஒவ்வொரு நியாயம் கற்பித்து சூட்டுக்கான காரணத்தைக் கண்டுபிடித்துத் திருப்திப்பட்டுக் கொள்வார்கள்.

"இயக்கத்தில் இருந்து விலகினவராம்"

"புலனாய்வாம்"

"டபிள் கேம் போட்டவராம்"

"பொங்குதமிழ் நடத்தினவராம்"

என்றெல்லாம் காரணத்தைக் கற்பிப்பார்கள். அப்ப தங்களுக்குப் பிரச்சினை இல்லை எனத் திருப்திப்படுபவர்களும் உண்டு. ஆனால் கிட்டடியில் சில அப்பாவிகளையும் சுட்டதாக அறிந்தேன். ஆள் மாறிச் சுடுவதாகவும் ஒரு நாளைக்கு குறைந்தது நாலு அல்லது ஐந்து பேரையாவது போட வேண்டும் என்று ஓடரிருப்பதால் கண்டபாட்டுக்குச் சுடுவதாகவும் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். எனக்கு உள்ளூரப் பயம் உள்ளது. ஒவ்வொரு நாளும் கோப்பாய்ப் பாலத்தால் தனியா போய் வரேக்க எது நடந்தாலும் யாருக்கும் தெரியாது. சில நாள்களுக்கு முன்னார்தான் ஐயர் ஒருவர் கோப்பாய்ப் பாலத்தடியில் காணாமலாக்கப் பட்டிருந்தார்.

கோப்பாய்ச் சந்தியை வேகத்தைக் குறைத்துக் கடக்க முற்பட்டேன். மறுகரையில் நின்ற ஆமிக்காரன் என்னை மறித்தான். வழமைக்கு மாறாக அவன் முகத்தில் பதற்றம்.

"எ..ங்க... போற...து" கொச்சைத்தமிழில் அவன்

"கிளிநொச்சி.. ரீச்சர்..." இதுநான்

"ஜொப் ஐ.சி"

"புதுசு இன்னமும் தரேல"

என்னிடம் புலிகள் வழங்கிய அடையாள அட்டை இருந்தது. அதில் ஆசிரியர் என்று குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் அதைக் காட்ட விரும்பவில்லை.

'அரி..அரி... போங்...க போங்க'

எனப் பக்கத்தில் நின்றவன் பச்சைக்கொடி காட்டினான். அவன் என்னை அடிக்கடி பார்த்திருப்பான் போலும்.

மெல்ல வெளிக்கிட்டேன். கோப்பாய் வெளியில் போய்க்கொண்டிருந்தேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் இல்லை. மெல்ல மெல்ல நிலம் வெளுத்துக் கொண்டிருந்தது. பின்னால் யாராவது வருவார்களா...? மனம் ஏங்கியது. திரும்பிப்பார்க்கப் பயந்து கண்ணாடியைச் சரிசெய்து பார்த்தேன். மிகத் தூரத்தில் ஓர் மோட்டார் சைக்கிள் வருவதைக் கண்டேன். ஆனால், அது வந்த வேகம் பயத்தை உருவாக்கியது. அதில் இருவர் வந்தது மேலும் என் பயத்தைக் கூட்டியது. முதுகு கூசியது கடவுளை அவசர அவசரமாக துணைக்குக் கூப்பிட்டேன். என் பிள்ளையின் முகம் என் கண்முன் வந்து சென்றது. மோட்டார் சைக்கிள் மிக அருகில் வந்துவிட்டது. 'மச்சான் நாங்க போறம் நீ வா' என்று கத்தியபடி சென்றார்கள். எனக்குத் தைரியம் பிறந்தது. நானும் அவர்களைத் தொடர்ந்து வேகமாகச் சென்றேன். அவர்கள் மடுவில் கற்பிக்கும் ஆசிரியர்கள். பின்னால் அவர்களது உடுப்புப் பைகளுடன் காற்றடிக்கும் பம்பியையும் கொண்டு செல்கின்றனர். திங்கள் போய் வெள்ளி வருவார்கள். கைதடி வந்தது. நான் அவர்களுக்கு விடைகொடுத்தேன். மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு பஸ்தரிப்பிடத்துக்கு ஓடினேன். நேரம் 5.55 ஐக் காட்டியது. அங்கு வந்த இ.போ.ச.பஸ் ஒன்றில் தொற்றிக் கொண்டேன் . தெரிந்த ஆசிரிய முகங்கள் ஏதும்... தேடினேன். ஆனால் தென்படவில்லை. பஸ்ஸின் ஒரு மூலையில் பரந்தன் இந்து ஆசிரியர் ஒருவர் இருந்தார். நான் நின்று கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்திலயே பஸ் நிரம்பி விடுவதால் எனக்குச் சீற் கிடைப்பதில்லை. நிற்பதும் எனக்குப் பழகிப் போனதொன்று. கொடிகாமத்தில் பஸ் நின்றது. எல்லோரும் இறங்கினார்கள். மற்றவர்கள் இறங்க வழிவிட்டு நின்றேன்.

'சேர் இறங்குங்கோ... இது முகமாலை போகாது' அந்த ஆசிரியர் எனது தோளில் தட்டினார். இறங்கினோம். கொடிகாமம் பஸ் ஸ்ராண்ட் சனத்தால் நிரம்பி இருந்தது. பருத்தித்துறையில் இருந்து அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பிறிதொரு பஸ்ஸில் இனி ஏற வேண்டும். நிற்கும் சனத்தைப்பார்த்தால்...!

சில நிமிடங்களில் அங்கு பருத்தித்துறையிலிருந்து பஸ் ஒன்று வந்தது. அதைப்பிடித்து முகமாலைக்கு ஒருமாதிரி வந்து சேர்ந்தேன். பஸ் நிற்க முதல், சிலர் ஓட்டவீரர்கள் பாய்ந்து ஓடினார்கள். பெண்களும் தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என எம்முன் ஓடினார்கள். இது ஆமியின் செக்பொயின்ட். பெண்கள் வரிசையும் ஆண்கள் வரிசையும் தனித்தனியே நீண்டு காணப்பட்டன. நீண்ட மலைப்பாம்பு போல் அவை மெல்லமெல்ல நகர்ந்தன.

" ஏது இன்டைக்கு மினக்கெடுத்துறான் " என முன்னால் நின்றவர் கிசுகிசுத்தார்.

"விடியப்புறம் அடிச்சதில மூண்டு முடிஞ்சுதாம்...! அம்புலன்சில கொண்டு போச்சுது" என்றார் இன்னொருவர்.

விடியக் காலை எறிகணைத்தாக்குதலின் முடிவு எனக்குப் புரிந்தது.

நான் செக்பொயின்றுக்குள் நுழைந்ததும் எனது கைப்பையைச் சோதனை செய்தான் ஒருவன். பின் மற்றையவன் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை தடவிப் பார்த்தான்.


அடுத்துப் புலிகளின் பொயின்ற். அங்கேயும் வரிசைகள். எனது அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு 'டோக்கன்' தந்தார்கள். இப்போது அதுதான் என் உயிர். பேர்சில் மிகப் பாதுகாப்பாக வைத்தேன். வரும்போது அதைக் கொடுத்தால்தான் வீடு செல்லலாம். என் சக ஆசிரியர் ஒருவர் அதனைத் தொலைத்து அவஸ்தைப்பட்டது எனக்குத் தெரியும். டோக்கனைப் பெற்றுக் கொண்டு சோதனைச் சாவடிக்குள் நுழைந்தேன். அங்கே நின்ற போராளியிடம் என் பையைச் சோதனையிடக் காட்டினேன். என்ர முகத்தைப்பார்த்து அவன் சிரித்தான். "சேர் நீங்க இனி கஷ்ரப்படத்தேவையில்லை. நாங்க யாழ்ப்பாணத்துக்கு வாறம்' என்றான். அவன் உட்கருத்தை யோசித்தவாறு பஸ் ஏறும் இடத்துக்கு வந்தேன்.

றோசா பஸ் ஒன்று கிளிநொச்சி புறப்படத் தயாராகிக் கொண்டு இருந்தது. கொண்டக்ரர், 'றைவரின் பக்கம் திரும்பி நில்லுங்கோ...' என்று கத்தினான் . வான் நிரம்பி வழிந்தது. அதில் ஏறுவதே போராட்டமாக இருந்தது. மூச்சு முட்டியது. வியர்த்து வழிந்தது. "தம்பி எங்களைச் சாகடிக்கப் போறியா எப்ப இந்த பஸ்சை எடுப்பாய் " வயோதிபர் கடுப்பாய் பேசினார். "ஏழரைக்கு வெளிக்கிடும் ஐயா" என்றான் கொண்டக்ரர்.

இன்னும் இரு ஆண்கள் ஓடி வந்து தொற்றிக் கொண்டார்கள். "எல்லோரும் உள்ளே போங்கோ காவல்துறை கண்டால் கதை காலி" என்றான் கொன்டக்ரர். வான் ஓடிக் கொண்டிருந்தது.

பளை, பரந்தன் வர வரச் சிலர் இறங்கினர் . அடுத்த இறக்கம் என்னுடையது. இறங்கிப் பாடசாலையை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தேன். தலைகுழம்பி உடுப்புக் கசங்கி இருந்தது. தலையைத் தடவினேன் செம்மண் புழுதி கையில் பிசுபிசுத்தது. கால் துவண்டு உடம்பு களைத்து விட்டது. ஆனால், மனம் சோரவில்லை.

பாடசாலை மைதானத்தில் மாணவர்கள் காலைப் பிரார்த்தனைக்கு அணிவகுத்து நின்றனர். விரைந்து அலுவலகத்தை அடைந்து வரவுப் பதிவேட்டை அணுகினேன். பேனாவைக் கையில் எடுத்து கையெழுத்து இடப்போனேன். அங்கே சிவப்புக்கோடு எனைப் பார்த்துச் சிரித்தது.



# மனிதன் ஒரு சமூகப் பிராணி

அ. அஜந்தன்



உயிரினங்களில் மனிதன் மட்டுமே பேச்சாற்றலோடு,நிமிர்ந்ததோற்றமும்எல்லையற்ற சிந்தனா சக்தியும் உள, உடலியல் அமைப்பையும்கொண்டவனாகக்காணப்படுகின்றான். அவனால் தனது புலன்களின் உணர்வுகள் மூலமாகத் தம்மைச்சுற்றியுள்ளஉலகைப்பற்றியதகவல்களைச் சேகரிக்கமுடிகிறது. மனிதனால் மட்டுமே வெட்கப்படவும்அதனைச்சமூகக்கட்டுப்பாடுகளுடன்உணரவும்முடிகின்றது. இதன்விளைவாகவேஅவன் தனதுஉடலைமறைக்கும்ஆடைகளைஅணியவும் கற்றுக்கொண்டான்.

அறிவாற்றலும் - உளவியல்சார் உணர்வுகளும் ஒரு பொறிமுறையாகச் செயற்படுவதால் மனிதனை இயந்திரத்திலிருந்து பெரிதும் வேறுபடுத்தித் தர்க்கம் பேசுதல் அல்லது காரணம் கற்பித்தலிலும் ஈடுபட வைக்கின்றது. இதனூடாகத் தெளிவுபடுத்தும் நிகழ்வும் நடைபெறுகிறது.

மனிதன் ஒருவனின் நடத்தையில் மரபணு, பரம்பரை அலகுகள் மட்டுமன்றி, அவன் வாழ்கின்ற சமூகம், கலாசாரம் போன்ற புறக் காரணிகளும் அவனது தேவைகளும் செல்வாக்குச்செலுத்துகின்றன.

**மரபணுவும் - பரம்பரையும்**

உடலமைப்பு, அறிவுத்திறன், தீவிரத்தன்மை, மகிழ்தல் என்பனவற்றில் பரம்பரையும்மரபணுவும்அதிகமாகச்செல்வாக்குச் செலுத்துவதால் மனித நடத்தையிலும் இதன்தாக்கமிருக்கும். மனிதன்தனதுபெற்றோரிடமிருந்தும் தனது நடத்தைகளைக் கற்றுக்கொள்கின்றான். பின்புகலாசாரமற்றும் தேவைகளுக்கேற்ப சில நடத்தைக் கோலங்களைமாற்றிக்கொள்கின்றான்.

**சமூகக்கலாசார காரணிகள்**

**நம்பிக்கைகள் :** சமய, சமூகநம்பிக்கைகள் மனித நடத்தையை இடத்திற்கேற்ப ஒழுங்குபடுத்துவதோடுகட்டுப்படுத்தியும் வைத்துக்கொள்கிறன. இறைநம்பிக்கையும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கைகளும் மனித நடத்தையை அதிகம் நெறிப்படுத்துகின்றன. சிலமூடநம்பிக்கைகள் தவறானநடத்தைக்கும்காரணமாகஅமைந்துவிடும்.

**கலை :** இனம் மொழிக்கேற்ப கலை தனிச்சிறப்பைக் கொண்டிருக்கும். இந்தக்கலைஉணர்வும், அடையாளப்படுத்தலும் மனித நடத்தையிலும், ஆடை அணிகலன்களிலும் செல்வாக்குச் செலுத்தும்.

**மொழி :** தொடர்பாடவும், புரிந்துணர்தலைமேம்படுத்தவும், உறவுகளைப்பலப்படுத்தவும், தேவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும் பயன்படும் ஊடகமாக மொழி பயன்படுகிறது. ஒரு மனிதனின் நடத்தையில்மொழியைக்கையாளும் முறையானது பிரதான இடத்தைப் பிடிக்கிறது.

**மனப்பாங்கு :** மனிதன்சமூகத்தின் ஓர் அடிப்படை அலகாகக் காணப்படுகிறான். ஒவ்வொருமனிதனின்மனப்பாங்கும், சமூகத்திலுள்ள ஏனையவர்களின் மனப்பாங்கும் ஒன்றுக்கொன்று செல்வாக்குச் செலுத்தி, மனித நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தும்.



**சமூகமயமாதல் :** சமூகமயமாதலின்பொழுது ஒவ்வொரு மனிதனும் ஆளுமையையும், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற செயல்களை நல்லவையென்றும் சமூகத்தால்ஏற்றுக்கொள்ளப்படாதவற்றை தீய செயல்கள் என்றும் கற்றுக்கொள்வதனூடாக அவனது நடத்தையில் மாற்றங்கள் நிகழும். இது பாடசாலைப்பராயத்திலேயே ஆரம்பிக்கும்மாற்றமாகும்.

**கருவிகள் :** நாம்வேலைக்காக பயன்படுத்தும்கருவிகளும்அதன்பாவனைகளும்சிலசமயங்களில்எமது நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதால் துர்நடத்தைகளாகவும்சீராகப்பயன்படுத்துவதன்மூலமாகநல்ல பண்புகளாகவும் அவை விளங்குகின்றன. உதாரணம்: கணினி, கையடக்கத் தொலைபேசி.

**கட்டடங்கள் :** கட்டடங்களின் அமைப்பு உட்கட்டுமானத்தில் உள்ள வசதிகள் மற்றும் அதனைப் பாவிப்பதற்கான விதிமுறைகள் மனித நடத்தையைத் தீர்மானிக்கும். குறைவானவசதிகள்உள்ளபோது, அதனைப் பாவிப்பதற்காகப் பொறுமைகாத்தல், நவீன வசதிகள் ஏற்படும்பொழுது அதற்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் போன்றவற்றைக் கூறலாம்

வரையறுக்கப்பட்ட எல்லைகள் சமூகத்தில் உள்ள கலாசார வரையறைகளும் அதனை மீறும்போது ஏற்படும் விளைவுகளும் , அவனது நடத்தையில் செல்வாக்குச்செலுத்தும்.

சமூகக்கலாசாரம்ஒவ்வொருதனிமனிதனது அறிவிலும் அதன் விருத்தியிலும் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது. இதற்குஅவனதுபகுப்பாய்வுசெய்யும் திறனும் கற்றுக்கொள்ளும் திறனும் உதவிபுரிகின்றன.

**3.மனிதனின் தேவைகள்**

**உடலியல் தேவைகள் :** காற்று, உணவு, நீர், ஓய்வு, போதிய உறக்கம் போன்றவற்றை உடலியற் தேவைகளாகக்கருதமுடியும். இவைமனிதன்உயிர் வாழ்தலுக்கான தேவைகளாக உள்ளதோடு, இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான முனைப்பு மனிதனின் நடத்தையில் தாக்கம் செலுத்தும்

**பாதுகாப்புத் தேவைகள் :** ஒவ்வொரு மனிதனதும் தனது உடல், உடைமை, தொழில் வன்முறையிலிருந்துபாதுகாப்புத்தொடர்பான்அச்சம்முற்பாதுகாப்புச் செயற்பாடுகள் போன்றன மனித நடத்தையின் போக்கில்திருப்புமுனைகளைஏற்படுத்துகின்றன.

> “ஒவ்வொரு மனிதனதும் தனது உடல், உடைமை, தொழில் வன்முறையிலிருந்து பாதுகாப்புத் தொடர்பான அச்சம், முற்பாதுகாப்புச் செயற்பாடுகள் போன்றன மனித நடத்தையின் போக்கில் திருப்பு முனைகளை ஏற்படுத்துகிறன.”


**சமூகத் தேவைகள் :** அன்பு, உணர்வுபூர்வமான நண்பர்கள், துணை போன்ற குடும்ப ஆதரவைத் திரட்டுவதற்கான முயற்சியில் மனிதனது நடத்தை ஈடுபடும்.


**கௌரவத் தேவைகள் :** பிறரால் மதிக்கப்படுதல், உயர் பதவி, உயர் அந்தஸ்தை விரும்புதல் என்பனகணிப்புத்தேவைகளாகஉள்ளதால், அதனை அடைவதற்கான நடத்தையில் மனிதன் முயல்வான்.

**சுய திறன் / தன்னலத் தேவைகள் :** தன் திறமைகளை வெளிக் கொணர்ந்து தன்னிறைவுகாணும் நிலையைஅடைவதற்குமுனையும்மனிதன் தனதுநடத்தையில்அதிகம்கவனம்செலுத்துவான்.

இவ்வாறான தேவைகளை முழுமை செய்ய எண்ணும்மனிதனின்நடத்தையில் இந்தத் தேவைகளும் பங்காற்றுகின்றன என்பதை 'மாஸ்லோ' வின் கோட்பாடுகளின் மூலமாக அறியமுடிகிறது.

மேலேகுறிப்பிட்டகாரணிகள்மூலமாகஏற்படும்நடத்தைமாற்றங்களும் விளைவுகளுமே மனிதனை ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபடுத்தி ஒரு சமூகப் பிராணியாக மாற்றியமைக்கின்றன.





# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

**பொருளாதாரப் பிரச்சினை**

மனத்தைப் பார்த்து மணமுடிப்போரை விட, பணத்தைப் பார்த்து மணமுடிப்போரே இன்று அதிகம். பணத்துக்காகவோ, சமுதாய அந்தஸ்துக்காகவோ அல்லது சுயபெருமைக்காகவோ திருமணம் செய்தால், அது உண்மையான திருமணமாக இருக்காது. இது ஒரு வேஷம். போலி நடிப்பு. முன்பைவிட அநேகமான திருமணங்கள் இன்று முளையிலேயே கருகிப்போகின்றன. தம்பதியர் எதிர்ப்பார்த்த மகிழ்ச்சி அல்லது நிம்மதி அதில் இருக்காமைதான் அதற்குக் காரணம். அதேநேரம், பணம் இருப்பதாலேயே ஒருவர் மகிழ்ச்சியாய் இருக்கின்றார் என்றும் சொல்ல முடியாது. மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலை. இந்த மனநிலை கிட்டுவதற்கு நிம்மதி வேண்டும்.


நிம்மதியைத் தொலைத்த பின்னர், இந்தத் திருமணம் நடந்திருக்கவே கூடாது என்று ஆணோ, பெண்ணோ நினைக்கின்றனர். இந்த நினைப்பு, மனமுறிவை ஏற்படுத்துகின்றது. தொட்டதுக்கெல்லாம் இணையரில் யாராவது ஒருவர் கோபப்படுவார் அல்லது அடிதடியில் ஈடுபடுவார். இதில், அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான். இவர்கள் மீது கட்டற்று வீட்டு வன்முறை அவிழ்த்து விடப்படுகின்றது. தாம் பாதிக்கப்படுவது வெளியில் தெரிந்தால் கௌரவப் பிரச்சினை என்பதனால்அவர்களும் பேசாமடந்தைகளாக இருக்கின்றனர். இன்னும் அநேகமான தம்பதியர், பிரச்சினையின் வேர் எதுவென்று தெரியாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்த வேரைக் கண்டுபிடித்துவிட்டால், அதனைக் களைவது இலகுவாக இருக்கும். ஆனால், அதனைச் செய்வதற்கு யாருமே தயாராக இல்லை. இவர்கள் பெயரளவில் உள ஆற்றுப்படுத்தலுக்குச் செல்கின்றனரே தவிர, தமது பிரச்சினையை ஆழ்ந்து சிந்திப்பதில்லை. வாழ்க்கை சிறிது காலம்தான் என்று உணர்வதுமில்லை.

தம்பதியரிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கு மனதின் விதியைச் சரியாக உபயோகித்துத் தீர்வு காணலாம். இருவரும் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவது இதற்குப் பெரிதும் வழிவகுக்கும். அத்துடன், வாழ்க்கை விதிகளைப் படித்துத் தெரிந்துகொள்வது அவர்களிடையே பிணக்கைப் போக்கி இணக்கத்தை ஏற்படுத்தும். கசப்பான தருணங்களை மறந்து, சிறப்பாக வாழ வழிவகுக்கும். ஆனால், தம்பதியர் இதுபற்றிச் சிந்திக்கக்கூட நேரமற்று ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த எல்லையற்ற வாழ்க்கை ஓட்டத்தில், ஒருவர் அளவற்ற பிரியத்தையும் மற்றவர் அநேக வெறுப்பையும் சுமந்து செல்கின்றனர். இந்தப் பிரியத்தைச் சுமந்து ஓடும் இணையரில், சக்தியும் ஒருத்தி. வெளிநாட்டில் ஒன்றரை வருடங்கள் கணவனுடன் வாழ்ந்தவள். வாழ்க்கையை அளவற்று நேசித்தவள்.

பொருளாதாரத்தில் பொருள்தான் தாரமென்று நினைத்து, அவளுக்கான அங்கீகாரத்தை வழங்க மறுத்தான் கணவன். பலவந்தமாக அவளை ஊருக்கு அனுப்பி வைத்தான். ஆனால் அவள்...?

(தொடரும்.....)





சிரிப்பு

கணவன்: நம்ம வீட்டுக்கு வந்த திருடனை அடிச்சு, உதைச்சு, அவன் கை, கால் எல்லாம் முறிச்சிட்டியே... எங்க இருந்து இவ்வளவு தைரியம்...?

மனைவி: நான் திருடன் என்டு நினைச்சு அடிக்கல்ல... நீங்க தான் குடிச்சுட்டு வந்தீங்கன்னு நினைச்சன்.



கணவன்: கடவுளிடம் என்ன வேண்டிக்கிட்டே....
மனைவி: ஏழு பிறவியிலும் நீங்கதான் கணவனா அமையனும் என்டு வேண்டிக்கிட்டேன். நீங்க?
கணவன்: இது ஏழாவது பிறவியா இருக்கனும்னு வேண்டிக்கிட்டேன்.




இந்த இருள் தரும் ஒவ்வாமை
சொற்களால்
உணர்ந்திட முடியாதது
வீசும் காற்றிலும்கூட
வெம்மை முறுக்கேறியிருக்கிறது
அறுந்துவிழும்
நட்சத்திரமொன்று
என் கையருகே வராமல்
எரிந்து சாம்பலாகி மிதக்கிறது
வெற்றுப்பாதம் கொழுவியிருக்கும்
ஆதி நிலத்தின் வெப்பம்
துளியும் இளகுவதாயில்லை

இந்த இருள் சொற்கள்தோறும்
மௌனங்களைப் போர்த்துகிறது
எழுதுகோலில்
கனத்திருக்கும் மை
நிறமிழந்து கசிகின்றது
பசலையேறிய
விட்டில் பூச்சியொன்று
வெளிச்சம் நோக்கிப் பாய்கிறது

இந்த இருள் கடலலைபோல்
மோதிக்கொண்டேயிருக்கிறது
தேய்ந்துபோயிருக்கும்
நிலவை
நினைவில்
உயிர்ப்பிக்கிறேன்
வானத்தின் மார்பெங்கும்
தழும்புகள்!

*வதனா, சாவகச்சேரி.*



# காதழகே... காதழகே...

பெண்களின் அழகை ஜொலிக்க வைப்பதில் காதுகளுக்கும் அதிக பங்குண்டு. ஆனால், எம்மில் பலர் முகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக் காதுகளுக்குக் கொடுப்பதில்லை. இதனால் முகம் பளபளப்பாக இருந்தாலும் காதுகள் இரண்டும் முக அழகைக் கெடுத்துவிடும். காதுகள் அழுக்கடைந்து பார்ப்பதற்கு அகோரமாகக் காட்சி அளிக்கும். உங்கள் காதை ஜொலிக்க வைக்க இதோ வழி...

காது மடல்கள் மீது "பேபிலோஷன்" தடவவும். 15 நிமிடம்கழித்துக்காதுகளைஅழுத்தமாகத்துடைக்கவும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால், நாளடைவில் கறுப்பு வளையம் மறைந்து விடும்.

# இறால் பக்கோடா



**தேவையானவை:**

குடல் நீக்கி சுத்தம் செய்யப்பட்ட இறால் – கால் கிலோ
நீளமாக நறுக்கிய பெரிய வெங்காயம் – 100 கிராம்
பொடியாக நறுக்கிய பச்சைமிளகாய்– 1
இஞ்சிபூண்டுவிழுது – ஒரு தேக்கரண்டி
கறிவேப்பிலை – சிறிதளவு
கொத்துமல்லித்தழை – சிறிதளவு
கரம்மசாலாத்தூள் – அரை தேக்கரண்டி
சீரகத்தூள் – 2 சிட்டிகை (விருப்பப்பட்டால்)
கடலை மாவு – 2 மேசைக் கரண்டி
அரிசி மாவு – 2 மேசைக் கரண்டி
எண்ணெய் – பொரிக்கத் தேவையான அளவு
உப்பு – தேவையான அளவு

**ஊற வைப்பதற்கு:**

மஞ்சள்தூள் – கால் தேக்கரண்டி
மிளகாய்த்தூள் – ஒரு தேக்கரண்டி
எலுமிச்சைச்சாறு – ஒரு தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

**செய்முறை:**

ஊற வைப்பதற்கு கொடுக்கப்பட்ட பொருள்களுடன் சுத்தம் செய்த இறாலைச் சேர்த்து 15 நிமிடங்கள் ஊற வைக்கவும். பின்னர் இக்கலவையுடன் எண்ணெய் தவிர கொடுக்கப்பட்ட மற்ற பொருள்கள் அனைத்தையும் சேர்த்து நன்கு கலக்கவும். தேவைப்பட்டால் இக்கலவையுடன் சிறிதளவுநீர்தெளித்துக்கொள்ளலாம்.

அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் சேர்த்து சூடானதும், அதில் தயாராக வைத்திருக்கும் இறால் மற்றும் இதரப் பொருள்கள் சேர்ந்த கலவையைச் சிறிது சிறிதாக சேர்த்து நன்கு பொன்னிறமாகும் வரை பொரித்து எடுக்கவும். சூடான சுவையான இறால் பக்கோடாவை, தக்காளி சாஸ் அல்லது புதினா சட்னியுடன் பரிமாறலாம்.



# தேங்காய்ப்பால் தேவாமிர்தம்...!

வைட்டமின் சி, வைட்டமின் இ, பி1, பி3, பி5, பி6, இரும்புச்சத்து, கல்சியம், செலீனியம், மெக்னீஸியம், பொஸ்பரஸ்... இவை எல்லாம் தேங்காய்ப்பாலில் அடங்கியுள்ள சத்துகள். உடலின் உள் ஆரோக்கியம் மட்டுமல்லாமல், சரும ஆரோக்கியத்திற்கும் கேச ஆரோக்கியத்திற்கும் உறுதி அளிக்கும் அற்புத பானம் இது. அதன் பலன்கள் இங்கே..!

★ தேங்காய்ப்பாலில் உள்ள பொஸ்பரஸ், எலும்பை உறுதியாக்க வல்லது.
★ மெக்னீஸியம் நிறைந்துள்ள தேங்காய்ப்பால் உடலின் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைக்கும்.
★ ஆன்டி ஆக்ஸிடன்ட்டான செலீனியம் உள்ளதால், தேங்காய்ப்பால் ஆர்த்தரைட்டிஸின் வீரியத்தைக் குறைக்கும்.
★ பக்றீரியா, வைரஸ் மற்றும் பூஞ்சைத் தொற்றுக்கு எதிரான தன்மை கொண்ட தேங்காய்ப்பால், வைரஸ் காய்ச்சல், பூஞ்சை மற்றும் பக்றீரியா தொற்று போன்ற உடல் நோய் வராமல் தவிர்க்கும்: உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

**கேசத்திற்கு..**

★ வறண்ட, உடைந்த, நுனி பிளந்த கேசத்திற்கு ஊட்டச்சத்து கிடைத்து ஆரோக்கியம் பெற, தேங்காய்ப்பாலை மயிர்க்காலில் இருந்து நுனி வரை தடவி, ஐந்து நிமிடங்களுக்கு தலையில் மஸாஜ் கொடுத்து, 20 நிமிடங்கள் வைத்திருந்து அலசவும்.
★ தேங்காய்ப்பால், ஒரு சிறந்த நிவாரணி. பயன்படுத்தும் ஷாம்பூவுடன் சரிபாதி அளவு கலந்து தலையில் குளிக்க, கூந்தல் மினுங்கும்.



# கண்களுக்கு பொன்னாங்கண்ணி

அனைத்து சூழல்களிலும் வளரும் தன்மைகொண்டதால், எந்தக் காலத்திலும் மிக எளிதாகக் கிடைக்கும். இதில் நிறைய வகைகள் இருந்தாலும் நாட்டுப் பொன்னாங்கண்ணியே சமையலுக்குப் பயன்படுகிறது. இந்தக் கீரை குளிர்ச்சித் தன்மை கொண்டது.

சத்துக்கள்: வைட்டமின் ஏ, பி, சி, நார்ச்சத்து, பீட்டாகரோட்டீன் உள்ளன. கல்சியம், இரும்புச்சத்து உள்ளிட்ட தாது உப்புக்கள் உள்ளன.

சிறு குழந்தைகளுக்கு கிட்டப்பார்வை பிரச்சினை இருந்தால், இதைத் தொடர்ந்து 48 நாள்கள் சாப்பிடுவதுடன், கண்களுக்குப் பயிற்சியும் செய்துவந்தால், பார்வைத்திறன் அதிகரிக்கும். கண்களில் நீர்வழிதல், கட்டி, தொற்று, மங்கலான பார்வை போன்ற கண் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் தீரும். மாலைக்கண் நோய்கூட குணமாகும். மூளை, நரம்புகள் சீராக இயங்கும். எலும்புகளும் வலிமை பெறும். சருமம் பொலிவுறும். கூந்தல் நன்றாக வளர உதவும்.

பொன்னாங்கண்ணி இலைகளின் சாறோடு, பசு வெண்ணெய் கலந்து, பஞ்சில் நனைத்து கண்களின் மேல் வைத்தால், கண்கள் குளிர்ச்சி அடையும்.

பொன்னாங்கண்ணி யாருக்கும் எந்தவித பக்கவிளைவையும் ஏற்படுத்தாது. அனைவரும் சாப்பிடலாம்.



# ஆள் பாதி ஆடை பாதி

- உயரமாகவும், ஒல்லியாகவும் உள்ள பெண்கள் குறுக்கே கோடுகள் போட்ட உடைகளையோ அல்லது பெரிய "டிசன்கள்" உள்ள உடைகளையோ அல்லது பெரிய கரைகள் போட்ட உடைகளையோ அணிந்தால், அழகாக இருக்கும்.
- குண்டாக உள்ள பெண்கள் சிறிய "டிசன்கள்" உள்ள உடைகளையும் சிறிய கோடுகள் போட்ட உடைகளையும், அகலம் குறைவாக உள்ள கரைகள் போட்ட உடைகளையும் அணிவது அழகாகவும் ஒல்லியாகவும் தெரியும்.
- கறுப்பான பெண்கள் கடும் நிறத்தில் ஆடைகள் அணிந்தால், மேலும் கறுப்பாகத் தெரிவார்கள். இவர்கள் நடுத்தர நிறத்தில் ஆடைகள் அணிவதுதான் மிகவும் சிறந்தது. இவர்கள் நீலநிறத்தில் ஆடைகள் அணிந்தால், இன்னும் அழகாக இருக்கும்.
- வெள்ளைத் தோல் பெண்கள் மெல்லிய நிறத்தில் ஆடைகள் அணிந்தால், மேலும் அழகாகத் தெரிவார்கள்.







# சங்கடம்

ஆபிரஹாம் லிங்கன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்று முதல் உரையாற்றிய தினம். அவர் ஓர் ஏழை செருப்புத் தைப்பவரின் மகன். எனவே பணக்காரர்கள், உயர் குலத்தோர் மிகவும் எரிச்சலடைந்தனர்; கோபப்பட்டனர்; ஆத்திரமுற்றனர். அவர் பேச எழுந்த போது ஒரு பணக்காரர் எழுந்து நின்றார். "மிஸ்டர் ஜனாதிபதி, பேசத் தொடங்கு முன் ஒன்றை நினைவூட்டுகிறேன். உங்கள் தந்தை என் குடும்பத்தினருக்குச் செருப்புத் தைத்தவர். ஜனாதிபதியாகி விட்டதால் பூரிப்பு அடையாதீர்கள். நான் அணிந்த காலணிகளும் உங்கள் தந்தை தைத்தவையே. நீங்கள் ஒரு செருப்புத் தைப்பவரின் மகன் என்பதை மறவாதீர்கள்" என்றார்.
எங்கும் அமைதி நிலவியது. உடனே லிங்கன், "நல்லது. என் தந்தையைப் பற்றி நினைவுபடுத்தியதற்கு நன்றி. அவர் ஓர் அருமையான செருப்புத் தைப்பவர். நான் அவரளவு அருமையான ஜனாதிபதியில்லை. அவர் தைத்துத் தந்த காலணிகளை நீங்கள் அணிந்திருக்கிறீர்கள். அதில் ஏதேனும் கோளாறு இருப்பின், என் அப்பா இறந்துவிட்டாரே என வருந்தாமல் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் ஒரு கத்துக்குட்டிதான். எனினும், அவற்றைச் சரி செய்து தர என்னால் முடியும்"என்றார். அந்தப் பணக்காரரின் பேச்சால் லிங்கன் சங்கடப்படுவார் என அனைவரும் எண்ணினர். ஆனால், லிங்கன் சங்கடப்படவில்லை. மாறாக, அவர் சபை முழுவதையும் சங்கடப் படுத்திவிட்டார்.

## மூளைக்கு வேலை



மஞ்சள், பச்சை, ஊதா ஆகிய மூன்று பேரும் ஒரு தேநீர் விருந்தில் கலந்துகொண்டனர். அவர்கள் மஞ்சள், பச்சை, ஊதா நிற சட்டை அணிந்திருந்தனர். அப்போது மஞ்சள், ''கவனித்தீர்களா? நாம் அனைவரும் நமது பெயரின் நிறம் அல்லாமல் வேறு நிறத்தில் சட்டை அணிந்துள்ளோம்'' என்றார். பச்சைச் சட்டை அணிந்தவர், ''ஆமாம், நீங்கள் சொல்வது சரி'' என்றார்.
உங்களால் கண்டுபிடிக்க முடியுமா, யார் யார் என்ன நிற சட்டை அணிந்திருந்தார்கள் என்று?



# நிலை மாறும்

ஒரு மன்னர், யாருமே துணையில்லாத சூழ்நிலையில் சிக்கலில் மாட்டிக்கொண்டால் செயற்படும் விதம் குறித்துத் தன் மந்திரிகளிடம் கேட்டார். அவர்கள் ஒவ்வொருவரும் சொன்ன பதில் அவருக்குத் திருப்திகரமாக இல்லை. ஒரு ஞானியை அணுகி அதற்கான பதிலைக் கேட்டார். ஞானி, ஒரு சிறு காகிதத்தில் குறிப்பு எழுதிக் கொடுத்து, "இதை இப்போது படிக்கக்கூடாது. உன் மோதிரத்தில் மடித்து வைத்திரு. சிக்கலான சூழ்நிலை வரும்போது எடுத்துப் படி" என்றார்.
சில மாதம் கழித்து, பக்கத்து நாட்டு மன்னர் படை எடுத்து வந்தார். இந்த மன்னர் தோல்வியுற்றதுடன், தனியாக ஓடித் தப்பித்தார். அப்போது ஞானி சொன்னது அவருக்கு ஞாபகம் வந்தது. உடனே மோதிரத்துக்குள் இருந்த குறிப்பை எடுத்துப் படித்தார். அதில், "இந்த நிலையும் மாறலாம்" என்று இருந்தது. உடனே மன்னருக்கு உற்சாகம் தோன்றியது. பின்னர் நாட்டுக்குள் வந்து தன் படைகளை மீண்டும் திரட்டி, பக்கத்து நாட்டு மன்னருடன் போரிட்டு வெற்றியடைந்தார்.
குறிப்பு: காலம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

# குறியீடுகள் உணர்த்தும் அர்த்தம்

01. ஒலிவ் இலை சமாதானம்
02. வெள்ளைப் புறா அமைதி
03. சிவப்புச் சக்கரம் வளர்ச்சி
04. மஞ்சள் கொடி தொற்றுநோய்
05. கறுப்புத் துணிப்பட்டி துக்கம்
06. சிவப்பு முக்கோணம் குடும்பக் கட்டுப்பாடு
07. செஞ்சிலுவை மருத்துவ உதவி
08. கறுப்புக் கொடி எதிர்ப்பு
09. சிவப்புக் கொடி அபாயம்
10. வெள்ளைக் கொடி சோகம்



சிந்தனைக்கு!
நீ சுமக்கின்ற நம்பிக்கை, நீ கீழே விழும் போது உன்னைச் சுமக்கும்.
– யாரோ

# தோல்வி

தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருள் அல்ல. நீங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை என்று பொருள். நீங்கள் எதையுமே சாதிக்கவில்லை என்று பொருள் அல்ல. சில பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள். நீங்கள் அவமானப்பட்டு விட்டதாகப் பொருள் இல்லை. முயன்று பார்க்கும் துணிவு உங்களிடம் உள்ளது என்று பொருள். வாழ்க்கை வீணாகி விட்டதாகப் பொருள் இல்லை. மீண்டும் ஆரம்பிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று பொருள். உங்களால் எதனையும் அடைய முடியாது என்று பொருள் இல்லை. அதனை அடையச் சிறிது காலதாமதமாகலாம் என்று பொருள். கடவுள் உங்களைக் கைவிட்டுவிட்டார் என்று பொருள் அல்ல. உங்களுக்கு வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயம் செய்து வைத்திருக்கிறார் என்று பொருள். ஆகவே, முக மலர்ச்சியோடும் நம்பிக்கையுடனும் புதிய நாள்களை எதிர்கொள்ளுங்கள்.





செ.டயானா,
தரம் - 03

## மழையே மழையே

வா மழையே
துள்ளிக் குதித்து
வா மழையே!
மேகம் பூத்த
மா மழையே
முத்தம் தந்திட
வா மழையே!
மின்னல் புன்னகை
மின்னிடவே
இடித்துச் சிரித்து
வா மழையே!
விதைகள் துளிர்த்திட
வா மழையே
பயிர்கள் செழித்திட
வா மழையே!
எங்கள் இன்பம்
பெருக்கிடவே
எங்கும் பெய்திடு
மாமழையே!


சரவணன்

# இலங்கை

01. எமது நாடு இலங்கை.
02. இது ஆசியாக் கண்டத்தின் தென்திசையில் அமைந்துள்ளது.
03. எமது நாட்டைச் சுற்றிவர இந்து சமுத்திரம் உள்ளது.
04. இந்து சமுத்திரத்தின் நித்திலம், இந்து சமுத்திரத்தின் முத்து என்றெல்லாம் எமது நாட்டைப் புகழ்ந்து கூறு கின்றனர்.
05. எமது நாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட் ஒரு தீவாகும்.
06. தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற மூவின மக்களும் இங்கு ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

ம.மெரீனா





மேரிகா,
தரம் - 01





# ரயில் சிநேகம்

வெயிலை அறுத்தோடும்
இந்தப் பகற்பொழுது ரயில்
எந்த நிலையத்தைக்
கடந்திருக்கிறது
நீ எங்கு ஏறினாய்
எந்தத் தருணத்தில்
நான் இடம்பெயர்ந்தேன்
எதுவும் மனதில் தேங்கவில்லை

பின்னோடும்
அடர் வனத்திலிருந்து
ஏதோ ஒரு செடியின் மலர் பறித்து
காற்றில் சரியும் கூந்தலில் சூட்டி
இதுவரையறியா
மொழியொன்று பழகி
கவிதையாய் ஒப்பந்தமெழுதி
பிரியத்தின் முத்திரையிடுகையில்
இரைச்சலோடு
எதிர்த் திசையிலிருந்து
ரயிலொன்று சீறிக் கடக்கிறது

இப்பயணம் நம்முடையது
என்பதை மட்டும் அறிகிறேன்
ஏதோ ஒரு நிலையத்தில்
நம்மில் யாரோ
இறங்கியாக வேண்டும்
அதுவரையில்
ரயில் சிநேகம் என்ற
சட்டத்திற்குள் அடங்க மறுக்கும்
இந்தப் பிரியத்திற்கு
என்ன பெயர் சூட்ட!?

துளசி, நீர்வேலி.

# பெண்ணியம்

## சில புரிதல்



பெ ண்களைத் தனித்த உயிரியாக,
உரிமையாக, சொல்லாலும் செயல்க
ளாலும் பாதிப்புக்களுக்கு உள்ளாகாத
தற்காப்புடையதாக, தன் வாழ்வைத் தானே நிர்ண
யிக்கின்ற சுய சிந்தனை உடையதாக மாற்ற/
இருக்க/ இயங்க வழிகோலும் கருத்துக்களுக்கு
இடமளிக்கும் இயம் பெண்ணியம்.
பெண்ணியம், தனித்துறையாக மலர்ச்சி அடைந்த
காலகட்டம் இது. ஆயினும், பெண்ணியம் மற்றும்
பெண்ணியவாதிகள் என்பதற்கான பொருள் தமிழ்ச்
சூழலில் வேறு மாதிரியாகத் திரிக்கப்பெற்றுள்ளது.
இத்திரிப்புக்குக் காரணம், ஆண் விமர்சகர்கள்.
பெண்ணைக் காமுறும் பெண்கள், மணமுறிவு
பெற்றவர்கள், மணமாகாதவர்கள் எல்லாம் பெண்
ணியவாதிகள் போன்றதொரு தவறான பார்
வையை இவர்கள் கொண்டுள்ளனர். பெண்ணியம்
பற்றிய தெளிவான புரிதலை இவர்கள் கொண்டி
ருக்க வேண்டும்.
பெண் எந்தக் குற்றமும் செய்திருக்கத் தேவை
யில்லை. அவள் பெண்ணாக இருப்பதே ஒரு குற்றம்
என்று நினைக்கிறது ஆணாதிக்கச் சமூகம். அவளை
முன்னிறுத்திச் செய்யப்படும் நிகழ்வுகளைக் கொச்
சைப்படுத்துகிறது, பழித்துரைக்கிறது. "பெட்டைக்
கோழி கூவிப் பொழுது விடியாது" என்று அவர்க
ளுக்கு வேறு பக்கவாத்தியம் இசைக்கிறது சமுதா
யம். இவை அத்தனைக்கு எதிராகவும் பெண்
போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டாள்.
இந்தப் போராட்டத்தில் பால்நிலைச் சமத்துவத்தை
அவள் எட்டாவிட்டாலும், கல்வி கற்கும் உரிமை
யைப்பெற்று முன்னேறினாள். இந்த முன்னேற்றம்
போதாது.
கல்வி கற்று அலுவலகங்களில் கடமை புரியும்
பெண்ணால் குடும்பப் பொருளாதாரம் மேம்பட்டது.

04

இந்த இடத்தில் பெண் கல்வியைச் சமுதாயம் வர
வேற்றது. அவளை மேன்மைப்படுத்தியது. அதே
வேளை, மரபு வழியாக அவளுக்கென்று ஒதுக்கீடு
செய்யப்பட்ட கடமைகளை அவள் தான் செய்ய
வேண்டும் என்பதிலும் குறியாக இருந்தது. இத
னால், இரட்டிப்புச் சுமைக்குள் தள்ளப்பட்டனர்
பெண்கள்.
இந்த இரட்டிப்புச் சுமைகளைச் சுகமாகச் சுமந்தனர்
பெண்கள். தாம் ஆண்களுக்குச் சேவை செய்யப்
பிறந்தவர்கள் என்று கருதினர். இந்தப் படித்த பெண்
கள் மீது இவர்களையும் அறியாமல் விரிக்கப்பட்டி
ருக்கும் அடிமை வலைகளைத் தகர்த்தெறிய வேண்
டும். இதற்காகவும் பெண்ணியவாதிகள் அதிகமதி
கம் உழைக்க வேண்டும். பெண்கள் ஆண்களுக்
குச் சமதையானவர்கள் என்று உணர்த்த வேண்
டும். இந்தச் சமத்துவத்தை எட்டுவதற்கு அனைத்துப்
பெண்களும் கரங்கோர்க்க வேண்டும்.

பெண்கள் இரண்டாம் பாலினம்
அல்ல, சமபாலினம். அதற்கு
இந்த முப்பாலும் தேவை

# மாறாமல் இருப்பது மாற்றம்

# மாறிவிடு வந்திடும் ஏற்றம்



ஏதோ ஒரு தேவைக்காக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பழகுபவர்கள் மலிந்துள்ள காலம் – இது. தமது காரியம் முடிந்ததும் அல்லது முடியாது என்றுதெரிந்ததும் அவர்கள் நம்மை விட்டுச் சென்றுவிட்டால், அதற்காக அழுவதும் வருத்தப்படுவதும் வேதனைப்படுவதும் நமக்கே தான் இழப்பை பிரச்சினையை ஏற்படுத்தும். கவலைகளைக் கட்டிக்கொண்டு அழுவதற்கல்ல இந்த வாழ்க்கை.

அவர்கள் எதற்காக வந்தார்கள், பழகினார்கள், சென்றார்கள் என்று நாம் சிந்தித்தால் எமக்குள் ஒரு தெளிவு பிறந்துவிடும். ஒருவேளை நாம் அவர்களிடத்தில் எதையாவது இழந்திருந்தாலும் அல்லது தப்பித்திருந்தாலும் எதற்காகவும் மன உளைச்சல் அடையத் தேவையில்லை.

வருத்தபடுவதனால் இழந்தவை மீண்டும் கிடைக்கப் போவதில்லை.

அதனையே மீண்டும் மீண்டும் நினைப்பதனாலும் அவர்களுக்கு ஏதோ ஒருவகையில் தொந்தரவு செய்யவேண்டும் என்று திட்டமிடுவதனாலும் எந்த இலாபமும் இல்லை. நமக்குள்தான் தேவையற்ற சலனங்களை, குழப்பங்களை வளர்த்துக்கொள்ள வேண்டிவரும்.


காதலாக இருந்தாலும் சரி, நம்பிக்கைத் துரோகமாக இருந்தாலும் சரி நம்பியவர்கள் நெருங்கியவர்கள் தரும் வலி அதிகம். அதற்காக, வலியில் கிடந்து வாழ்க்கை முழுதும் உழல்வதால் எதுவும் வந்துவிடப்போவதில்லை.

வலிகளுக்கு அப்பாலும் வாழ்க்கை உண்டு என்று நினைத்துச் செற்படவேண்டும். இந்த பூமியில், மாற்றம் ஒன்றுதான் மாறாமல் இருப்பது. அதனைப் புரிந்துகொண்டு நாம் மாறினால், நமக்குள் வந்துவிடும் ஏற்றம். சோகங்களை மரிக்கும் நாளுடன் புதைத்துவிடுவோம். அந்த நாளுக்கு நிரந்தர விடை கொடுப்போம். மீண்டும் இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று வந்த நாளை ஆராதிப்போம் வரவேற்போம்.

நீ மாறுவதற்கான வாழ்வதற்கான புதியதொரு நாளைத் தினம் தினம் இயற்கையும் காலமும் உனக்கு அளித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

அந்த மாற்றத்தை வரவேற்க உன்னால் முடியும். வாழ்க்கையில் ஏற்றம் பெற உன்னால் முடியும்.

> "மாற்றத்தை எட்ட ஓடிக்கொண்டிரு,
> முடியாதுவிடில்,
> நடந்துகொண்டிரு,
> இயலாதெனில்,
> தவழ்ந்துகொண்டிரு
> என்றோ ஒருநாள்
> ஏற்றம் வரும்"



# புலிகளை புகழ்ந்த பிரேமதாச

தருமு தவக்குருச்சி

அது 1989காலகட்டம். இலங்கையின்அரசியல் வரலாற்றில் மூன்றாவது அரச தலைவரான பிரேமதாசவின் ஆட்சிக்காலம். தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புறக்கணித்து வந்த சிங்கள ஆளும் வர்க்கத்தினருடன் அமைதிப்படை என்கின்ற பெயரில் இந்திய அடக்குமுறைப்படையும்இணைந்து தமிழ் மக்களைத் துன்புறுத்தியும் கொன்றொழித்தும்வந்தகாலம். இலங்கை- இந்தியா ஒப்பந்தம் என்பதாய்சிங்கள - தமிழ் இனங்களிடையே நிலவி வந்த இனமுறுகலைச்சமாதானப் படுத்துவதாக வெளிப்பூச்சிட்டு தமிழ் மக்களையும் அவர்களுடைய ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளையும் ஒடுக்கியழிக்கும் திட்டத்துடன் சிங்கள, இந்தியப் படைகள் மற்றும் ஈழ மக்கள்புரட்சிகர முன்னனி(ஈ.பி.ஆர்.எல்.எவ்) ஆகியன இணைந்து செயற்பட்ட காலம். ஆனால் அரச தலைவர் பிரேமதாசவுக்கு இந்தக் காலகட்டம் இருவேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்திருந்தது.

முன்னெப்போதும் வீசாத அரசியல் சூறாவளி ஒன்று அப்போது நாட்டைச் சின்னாபின்னப்படுத்தியது. நாடு முழுவதும் குழப்பங்களும் அமைதியின்மையும் வன்செயல்களும்களைகட்டின. வடக்குக்கிழக்கில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுமையான போர்! ஒரு இலட்சத்துக்கும் அதிகமாகத்தரையிறக்கப்பட்ட இந்தியஇராணுவம் விடுதலைப்புலிகளை அடக்கமுடியாமல் திணறிக்கொண்டிருந்தது. இடையில்ஈ.பி.ஆர்.எல்.எவ். இன்தமிழ்த்தேசியஇராணுவமும் இந்தியாவின் கைப்பெம்மையாக விருந்துமக்களுக்கும்புலிகளுக்கும்இடையூறளித்து வந்தது.

மறுபுறம், தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னனியின் (ஜனதாவிமுக்திபெரமுன)ஆயுதவன்முறைக் கிளர்ச்சி! சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் ஆட்சிக்காலமான 1971 களில்புரட்சிசெய்துநசுக்கப்பட்டமார்க்சியப் போராளி அமைப்பான ஜே.வி.பி . இப்போதுமீளவும்பெரும்வேகத்துடன்கிளர்ந்தெழுந்தது. அதன் வன்முறைகளையும் கிளர்ச்சிகளையும்கட்டுப்படுத்தமுடியாமல் பிரேமதாசா அரசு திண்டாடியது. தெற்கில்பலமாவட்டங்கள் கிளர்ச்சி யாளர்கள் வசம் வீழ்ந்ததால் அரச நிர்வாக அமைப்புச்செயலிழந்தது.


வடக்கில் விடுதலைப்புலிகள் தெற்கில்; ஜே.வி.பி. கிளர்ச்சிவாதிகள் இவை இரண்டையும் கையாள்வதற்குரிய நடவடிக்கைகளை ஆராய ஆரம்பித்த பிரேமதாசவுக்கு இவைஇரண்டுக்குமானஒரேகாரணம்இந்தியஅமைதிப்படையேஎன்பதுபுலனாகியது. 1971களில்ஜே.வி.பி. கிளர்ச்சிசெய்வதற்கு முன்வைத்திருந்த வர்க்க முரண்பாட்டுப் பிரச்சினையையோ,பாட்டாளிப்புரட்சியையோ, முதாலாளித்துவஅரசுக்குஎதிரானதமதுகிளர்ச்சிப்போராட்டத்தின் மையக் கருத்தாக இந்தத்தடவைமுன்வைக்கவில்லை. நாட்டின் வடக்குக் கிழக்கில் நிலைநிறுத்தப்பட்ட இந்திய இராணுவ ஆக்கிரமிப்பையே தனது மையப் பிரச்சினையாக முன்வைத்தது. சிங்களஇனத்தின்பரிசுத்தபூமியைஇந்திய ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பதற்கு இடமளித்திருப்பதாகக்குற்றம் சுமத்தியது. தமிழர்களதும் சிங்கள வர்களதும் உள்நாட்டுவிவகாரங்களில்இந்தியாதலையிட்டுவிட்டதாக அரசுக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கியது. அப்போது பிரேமதாசவுக்கு இந்தியப் படைகளைத்திருப்பியனுப்பினால்மாத்திரமேபிரச்சினையைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்றநிலை. ஆனால், அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்றும் அவருக்குத் தெரிந்தது. இது பற்றிப் பலமுறை இந்தியாவுடன் மேற்கொண்டிருந்த கடிதப்பேச்சுக்களும்ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக் கொண்டிருந்தன.

ஆனாலும் சிறிது சிறிதாகவாவது இந்தியப் படையைத்திருப்பிஅனுப்பிவிடவேண்டும்என்பதில்அவர்குறியாயிருந்தார். இதனால் பேச்சுக்களுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கும், ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்த பிரேமதாசா, மேற்படி இரண்டு குழுக்களிடையே நிலவும் பிரச்சினையானது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்றும் இந்தியாவின் தலையீடு இன்றி அதுதீர்க்கப்படவேண்டும்என்றும்சித்தம் கொண்டார். ஆனால் அவ்வளவு எளிதாக இந்தியப் படையைத் திருப்பி அனுப்ப முடியாது என்பதையும் புரிந்துகொண்டார்.

தமதுஆட்சிக்குப்பெரும்சவாலாகஅமைந்துவிட்டஜே.வி.பியினரின்கிளர்ச்சியைநிறுத்துவதற்குஇந்தியப்படையைவெளியேற்ற வேண்டும். அதற்குவிடுதலைப்புலிகளின் ஆதரவு அவருக்குத் தேவையாக இருந்தது. ஆகையால் பேச்சுக்களுக்குப் புலிகளை அழைத்தார். காரணம் அப்போது இந்திய இராணுவத்துக்கு எதிராகத் தெற்கிலேபரந்தஅடிப்படையில்மறுப்புக்களும் எதிர்ப்பும் கலகங்களும் நடந்தாலும் அந்த இந்தியப் படையினருக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில்ஈடுபட்டவர்கள்புலிகள்மாத்திரமே. ஆதலால் அதன் தலைவர் பிரபாகரனையும் அவருடைய கெரில்லாப் படையினரையும் அவர்களுடைய துணிச்சலுக் காகவும் அர்ப்பணிப்புக்காகவும்நாட்டுப்பற்றுக்காகவும் பிரேமதாச பாராட்ட நேர்ந்தது. அவ்வாறே பாராட்டியும் விட்டார். அத்துடன் ஜே.வி.பி போராளிகள் கோழைகள் என்றும் சூதுவாதற்ற பொதுமக்களைக்கொல்லும்அவர்கள் ஆக்கிரமிக்கும் இந்திய இராணுவத்தைஎதிர்த்துஒருகல்லைக் கூடவீசவில்லைஎன்றும்பொரிந்து தள்ளினார். இந்தியப் படைகளை எதிர்க்கப்புலிகளுக்குஆயுதஉதவியும்கூடச்செய்தார். இருந்தும் அவருடைய தந்திரம் (ஆயுதம்) இறுதியாக அவரையே தாக்கியது.

> தலைவர் பிரபாகரனையும் அவருடைய கெரில்லாப் படையினரையும் அவர்களுடைய துணிச்சலுக்காகவும் அர்ப்பணிப்புக்காகவும் நாட்டுப் பற்றுக்காகவும் பிரேமதாச பாராட்ட நேர்ந்தது. அவ்வாறே பாராட்டியும் விட்டார்.







# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள்

அனார்

ஓர் ஆழமான காயத்திலிருந்து துளித்துளியாக, பொறுமையாகச் சிந்தும் குருதியைப்போல எழுதப்பட்டவையே மேற்கூறிய அனைத்துப் பெண்ணியக் கவிதைகளும். அந்தக் கவிதைகள் பற்றி கவிதை எழுதுகின்ற பெண் ஒருத்தியாக இருந்தபடிநான்பேசுவதுமிகப்பெரும்வலியைமீளவும்எனக்கு உணரச்செய்கின்றது.

அதுஒருவிதமானதிகைப்பை, துணுக்குறுதலை, வெப்பிசாரங்களை, மெல்லிய குறுகுறுப்பை, பச்சாதாபங்களைக் கிளறிவிட்டிருக்கின்றது. துயரமும்கருணையும்கனவும்அன்பும் திளைத்தலும்வெடிப்பும்விரிசலும்ஆழமும்மாயமும்பெருக்கெடுப்பின் வியாபகமும் எனத் திக்குமுக்காடு மளவுக்குப் பெண் எனும்பிரவாகம்தூக்கிவீசப்படமுடியாதகேள்வியாய்ப்பூமியை மூடுகின்றது.

கவிதைகள் பற்றிப் பேசுவது என்பது என்ன? அது நமக்குப் புரியாத அந்நியமான பழக்கப்படாத ஒன்றைப் பற்றியதல்ல. அது புனிதமானதோ கைக்கெட்டாது அந்தரத்தில் பிடிபடாது தொங்கும்ஜாலமோஅல்ல. பெண்கவிதை இந்தவாழ்வையும்சமூகத்தையும்இயற்கையையும்மனிதஅறம்பற்றியும்பேசுவதுதான். தேசம், இயற்கை, கலாசாரம், மனிதன் இவைகள் அனைத்தையும் புரிந்துகொள்ள விளைவதும் கவிதையொன்றைப் புரிந்து கொள்ளமுயல்வதும்ஒரே விதமானதுதான்.

புரிதலுக்கும் புரியாமைக்கும் நடுவில் மறைந்திருக்கும் நுண்ணுணர்வுகளை, திளைப்புக்கும் காயங்களுக்கும் நடுவேயான அனுபவத்தை, கண்களுக்கும் உள்ளத்துக்குமான இசையைக் கேட்பது பற்றியே நான் பேச விரும்புகின்றேன். அதாவதுபெண்என்பவள் நீருக்கடியே கொண்டு செல்லும் மொழி என்ற நெருப்பைப் பற்றியும் ஒன்று போலவே தோன்றும் வெவ்வேறு நதிகள் பற்றியும் சமகாலத்தில் பெண் இலக்கியத்துக்கான புதிய மரபும் திறன்களும் நவீன மொழியில் உருவாகியுள்ளன. பெண்களுடைய சிந்தனைத்தளம், படைப்பின் கூறுகள், அவரவருக்கானஅடையாளத்தைமுன்னிலைப்படுத்துகின்றன. பிரத்தியேகமான குரலுடன் ஒவ்வொரு பெண்ணும் பேசமுற்படுகின்றாள்.


தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பெண்ணின் அடையாளம் சிதைக்கப்படும்போது பெண் கவிதையின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது. பெண் உடலின் அரசியலை, அகச் சமூக முரண்களை, ஒரு புதிய வெளியில் பெண் மொழிக் கவிதைகள் மிக வலுவாக நிறுவின. ஒடுக்கப்பட்ட பெண் உடலுக்குள் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, காயம், வதைகள் என்பனவற்றைச் சுமந்து பெண்ணுடலானது வாழ்வின் முன்னுள்ள களமாகவும் விளங்குகின்றது.

தமிழ்ப்பண்பாட்டுச்சூழலில்பெண்ணின்அடையாளம்சிதைக்கப்படும்போது பெண் கவிதையின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது. பெண் உடலின் அரசியலை, அகச் சமூக முரண்களை, ஒரு புதிய வெளியில் பெண் மொழிக் கவிதைகள்மிகவலுவாகநிறுவின. ஒடுக்கப்பட்ட பெண் உடலுக்குள் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, காயம், வதைகள் என்பனவற்றைச்சுமந்துபெண்ணுடலானதுவாழ்வின் முன்னுள்ள களமாகவும் விளங்குகின்றது. அதேநேரம் தனித்துவமான உணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் சொல்கின்ற கவிதைகள் ஏராளமாக எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பெண் அரசியல் கவிதைகள் அவை கொண்டுள்ள முக்கியத்துவத்தின் அடிப்படையில் முழுமையான கலைப்படைப்பாகவும் காணப்படுகின்றன.

இந்தக்கட்டுரையானதுஅனைத்துப்பெண்கவிதைகளையும் உணர்வுத் தளத்தில் நின்றே அணுகியிருக்கின்றது. இலங்கைப் பெண் கவிதைகளின் உட்பிரிவுகளையும் காலமாற்றத்தின்நிகழ்வுகளையும்அரசியல்மாற்றங்களையும் வகைப்படுத்திப் பார்க்கின்றது. சார்பற்று இயங்கும் அவதானத்தோடுஇந்தக்கட்டுரையைஅமைக்கமுயன்றிருக்கின்றேன்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான பெண்கவிதைகள் பற்றிய அவதானத்தில் பெண்களின் கவிதைகள் ஆறுதல் மொழியாக, மாபெரும் துயருக்கான கதறலாக, ஆன்மாவுக்குத்தேவைப்படும்சிகிச்சைமொழியாகஎழுதப்பட்டிருக்கின்றதா? மிகப்பெரும் சமூக அவலத்தின் சாட்சிகளாய் அல்லது பாதிக்கப்பட்ட பெண் உடலின், மனதின் குரலாய் அந்த மண்ணிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றதா? நிசப்தமாக ஒளிந்திருக்கும் அந்த இதயங்களிலிருந்து வெடித்துக் கிளம்பும்உண்மைகள்மானுடவரலாற்றின் வெளியில் உயிர்மொழியாய் உலவுகின்றதா? எங்களிடம் இவைக்கு இப்போதாவது பதில்கள் இருக்கின்றனவா? இந்தக் கேள்விகள் அனைத்துப் பெண்கவிஞர்களுக்குமாகநான்விட்டுச் செல்பவை.

(முற்றும்)





## உண்மைக் காதல்

பத்து மாதம் சுமந்து
ஈன்றிடுவாள் அன்னை
பத்து வருடம் காத்திருந்து
ஈன்றாய் என் காதலை
என்னைப்பெற்ற
இரண்டாமவள் நீ

இத்தனை காலம்
காத்திருந்த உன்னை
கண்டிராத பாவி நான்
நீ கொண்ட காதலின்
நம்பிக்கையில் கண்ட
வெற்றியும் நான்

எம் காதலின் அர்த்தத்தில்
என்றுமில்லா ஏக்கம்
நீயின்றிய வாழ்வை
நினைக்கக் கூட
முடியவில்லை
ஈருடல் ஓருயிராய்
நகமும் சதையுமாய்
மாற்றிய காதலை
மறந்து கூட
வெறுக்க முடியவில்லை

காலம் கனிந்திருந்தும்
கரம் சேர்க்க முடியாமல்
வெருண்ட தடங்கல்களை
வேரோடு அழிக்கும் வரை
சுகமான காதலுடன்
சுதந்திரமாய்
காத்திருப்போம்..
ஒன்று சேரும் வரை

கார்த்திக். சண்முகளி



## சிரிங்க...!

**ஆசிரியர்:** நீ படிச்சு பெரியவனாகி என்ன பண்ணப்போறாய்?
**பையன்:** கல்யாணம்

**ஆசிரியர்:** அது இல்ல.. நீஎன்னவாஆகவிரும்புறாய்?
**பையன்:** கணவன்.

**ஆசிரியர்:** இல்லைப்பா... உனக்கு வாழ்கையில என்ன கிடைக்கணும் என்று எதிர்பாக்குற?
**பையன்:** மனைவி.

**ஆசிரியர்:** ஒ..நோ..உங்க அப்பா அம்மாவுக்கு என்ன பண்ண போறாய்?
**பையன்:** மருமகள் தேடுவேன்.

**ஆசிரியர்:** டேய் ஸ்டுபிட்! உங்க அப்பா அம்மா உன்கிட்ட என்ன எதிர்பார்க்கிறாங்க?

**பையன்:** பேர குழந்தைகள்!!!
இதைவிடவுமா ஒருத்தரால ஆக முடியும் நீங்களே சொல்லுங்க..!!



தொகுப்பு: மல்லிகா



# நூல் அறிமுகம்

நூல் - காகிதக் கப்பல்கள் (சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர் - மிருசுவில் தமிழ்தாசன்
விலை - 200 ரூபா




**சமகாலத்தைச்சித்திரிக்கும் கதைகள்**

வாழ்க்கைக் கூறுகளைச் சித்தி ரிப்பதற்குச் சிறந்த வடிவம் சிறுகதை. அந்த வடிவத்தினூடு சமகாலத்தைப் பிரதிபலித்து நிற்கிறது காகிதக் கப்பல்கள் (சிறுகதைத் தொகுப்பு) நூல்.

சம்பவக் கோர்ப்புக்களாலும் ஆழ்மன உணர்வுகளாலும் கட்டமைக் கப்படுகின்றன சிறுகதைகள். காகிதக் கப்பல்கள் (சிறுகதைத் தொகுப்பு) நூலிலுள்ள கதைகள், சம்பவக்கோர்ப்புக்களால்கட்டமைக்கப்பட்டவை. சூழ்நிலைக்கைதிகள் முதல் கடவுளே கைவிட்டால் வரை 15 கதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. இக்கதைகளினூடே நகைச்சுவை உணர்வும் இழையோடுகிறது. எளிய மொழி நடை கதைக்குக் கனதி சேர்க்கிறது.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், நகைச்சுவைத் தொடர் என இலக்கியப் பயணத்தில்பல்வேறுதடங்களைப்பதித்தவர்மிருசுவில்தமிழ்தாசன். அதற்கு அப்பாலும் அவர் செயற்பட்டுக்கொண்டிருப்பவர். அவரது எழுத்துப்பணி தொடர வாழ்த்துக்கள்.


நூல் - என் முதல் வாத்து (மொழிபெயர்ப்புக் கதைகள்)
ஆசிரியர் - ஐயாத்துரை சாந்தன்
வெளியீடு - எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்
விலை - 350 ரூபா

**பன்னாட்டு மொழிபெயர்ப்புக் கதைகள்**



மனிதர்கள் மொழிகளால் மாறுபட்டாலும், உணர்வுகளால் ஒன்றுபட்டவர்கள் என்பதனை உணர்த்துகின்றது 'என் முதல் வாத்து' (மொழிபெயர்ப்புக் கதைகள்) நூல்.

மனிதப்பொதுமைபேசும் இந்நூலில்போர், உயில், கறுப்புராச்சியம், யாழிசை, எலுமிச்சைத்தோட்டம், எல்லைகள், மழைக்குமுன், குடை, வரும்புயல், பழைய வாளி, மௌ, வகுப்பு, ஒரு விரலசைவில், பஸ் பயணம், ஆபிரிக்கப் பையன், தொடர்பு, எழுதாத கொள்கை, என் முதல்வாத்து ஆகிய 18 கதைகள் அடங்கியுள்ளன. இவை யாவும் இத்தாலி, ஈராக், பலஸ்தீனம், அமெரிக்கா, அயர்லாந்து, ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, கென்யா, தென் ஆபிரிக்கா, கினி, ஜப்பான், மெக்சிக்கோ, ஜமேய்க்கா, மங்கோலியா ஆகிய நாடுகளைச்சேர்ந்தவை. உலகறிந்த படைப்பாளிகளின் கருத்தில் கலையானவை. ஆங்கில மொழியிலிருந்து இவை தமிழாக்கம் செய்யப்பட்டவை. மூலக்கதையைச் சிதைவின்றி மொழிபெயர்த்துள்ளார் ஆசிரியர். அட்டைப்படம், மொழிநடை ஆகியனவும் நேர்த்தியாக உள்ளன. தமிழ் ஆங்கிலம் இருமொழி எழுத்தாளரான ஐயாத்துரை சாந்தன், ஈழத்து இலக்கியப் புலத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவர். சிறுகதை, நாவல் முதலான எண்ணற்ற படைப்புக்களைத் தமிழ் உலகுக்கு அளித்தவர். அவரது எழுத்துலகம் தொடர்ந்தும் சிறப்புற, வாழ்த்துக்கள்.




அன்பார்ந்த எழுத்தாளர்களே! நூல் அறிமுகத்தில் உங்களின் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின், புத்தகத்தின் இரண்டு பிரதிகளை- ஆசிரியர், நூல் அறிமுகம்,
**உதயன் பத்திரிகை,**
**இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



# இரப்பாரும் இல்லை ஈவாரும் இல்லை

அராலியூர் நிலா

மரணம் எல்லோருக்கும் பொதுவான ஒன்றுஎன்றாலும், சிலரதுமரணத்தை ஜீரணிக்க முடியாது. எல்லோருக்கும் நல்லவர்கள், கொடை வள்ளல்கள், ஆதரித்துக் காப்பவர்களின் இழப்பை எதனாலும் ஈடுசெய்ய முடியாது. அப்படிப்பட்ட ஒரு இழப்பால் துடிதுடிக்கிறார் ஔவையார். அதியமான் நெடுமானஞ்சி இறந்தபோது, ஆதரிப்பார் யாரு மில்லாமல் அவர் கையறுநிலையில் பாடிய பாடல் இது. சோகத்தின் உச்சத்தை இதில் காணமுடிகிறது.



சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே;
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே;
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே;
பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே;
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே;
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான்நிற்கும் மன்னே;
நரந்தம் நாறும் தன் கையால் புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே;
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப் புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றுஅவன் அருநிறத்து இயங்கிய வேலே;
ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
இனிப், பாடுநரும் இல்லை; பாடுநர்க்குஒன்று ஈகுநரும் இல்லை;
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்குஒன்று ஈயாது வீயும் உயிர்தவப் பலவே
(புறநானூறு:235)

அவனுக்குச் சிறிதளவு கள் கிடைத்தால், அதை எனக்கே தருவான். பெரிதளவு கிடைத்தால், எனக்கும் தந்து, நான் அவனை மகிழ்ந்து பாட, அவனும் உண்பான்.. சிறிதளவு சோறு கிடைப்பினும் மிகப் பலரோடு தானும் உண்பான். மிகப்பெரிய அளவு சோறு கிடைப்பினும், மிகப் பலரோடும் உண்பான். எலும்போடு ஊன் தசை கிடைக்கும் கறியெல்லாம் எனக்கே அளித்திடுவான். அம்புடன் வேல் தைக்கும் (போர்) இடத்தையெல்லாம் தானே முன்சென்று நிரப்புவான். நறுமணமிக்க தன் கைகளால் புலால் மணக்கும் என் தலையைத் தடவுவான். இவையெல்லாம் ஒழிந்தன. அவன் மார்பைத் துளைத்த வேல், பெரிய பாணர் கூட்டத்தாரது அகன்ற உண்ணும் கலங்களைத் துளைத்து, இரந்து வாழ்பவர் கைகளையும் துளைத்து, அழகிய சொல்லும் நுட்பமான ஆய்வையும் கொண்ட புலவர்களின் நாவில் சென்று வீழ்ந்தது.

எமக்குப் பற்றுக்கோடாக விளங்கிய, என் தந்தையைப் போன்றவன் எங்கே உள்ளான்? குளிர்ச்சியான நீர்த்துறையில் மலர்ந்துள்ள பகன்றைப் பூவைப் பறித்துச் சூடுவார் இல்லாமல் பயனற்றுப் போவதுபோல் பிறருக்கு ஒன்றும் கொடுக்காமல் பயனற்று அழிந்துபடும் உயிர்கள் இந்த உலகில் மிகப்பல. அந்தோ! இனி பாடுவோரும் இல்லை, பாடுவார்க்கு ஒன்று ஈவாரும் இல்லை.

அதியமான் நெடுமானஞ்சி ஔவையார் நட்பை உலகமே வியந்து பாராட்டும். நீண்டகாலம் உயிர் வாழ்விக்கும் அரிய நெல்லிக்கனி தனக்குக் கிடைத்தபோது தான் உண்ணாமல், அதனை ஔவையாருக்கு ஈந்த வள்ளல் அவன். தான் வாழ்ந்து என்ன பயன்? ஔவை வாழ்ந்தால், தமிழ் நீடூழி வாழும் என்று நினைத்த நல்லோன் அவன். அப்படிப்பட்டவனின் இழப்பை ஔவையாரால் எப்படித் தாங்க முடியும்?



# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி

### தேசியப்பட்டியல்

முஸ்லிம் காங்கிரஸின் பிளவுகளுக்கும் உள்வீட்டுப் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணியாகக் கருதப்படும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் விவகாரத்துக்குத் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்குக் கட்சித்தலைமை சமிக்ஞை காட்டியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அட்டாளைச்சேனைக்கு வழங்கவும் அதுவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்து வரும் ஏ.எல்.எம். நஸீருக்கே அதனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. இந்தத் தகவல் கட்சியில் மூத்த மாணவன் நான் எனக்கே தேசியப் பட்டியல் தரப்பட வேண்டுமென ஆலாய்ப்பறந்தவர் உட்பட அட்டாளைச்சேனையில் அதை எதிர்பார்த்திருந்த மேலும் ஒரு சிலருக்கும் அடி வயிற்றைக் கலக்கத் தொடங்கியுள்ளதாம்.

### ஆர்ப்பாட்டங்கள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் இரு வாரங்கள் கடந்தும் போராட்டக் களத்திலேயே உள்ளநிலையில் இந்த மாவட்டத்தில் மக்கள் போராட்டங்களும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

ஒலுவில் துறைமுகம் காரணமாக கடலரிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள திருக்கோயில் பிரதேச தமிழ் மக்கள் கடலரிப்பைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும்

ஒலுவில் துறைமுகத்தில் நிரம்பியுள்ள மண்ணை அகற்றுமாறு கோரி பிரதேச மீனவர்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் இராணுவம் மற்றும் தொல்பொருள் மற்றும் வனபரிபாலனத் திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரும் பெரிய போராட்டமொன்றுக்கும் முஸ்தீபுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

### மறைக்கப்படாத.........

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைமையகமான 'தாருஸ்ஸலாம் தொடர்பாக சில மாதங்களுக்கு முன்னர் "தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள்' எனும் பெயரில் நூலொன்று அநாமதேயமாக வெளியிடப்பட்டு முஸ்லிம்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இப்பொழுது அந்த நூலுக்குப் பதில் கூறும் வகையில் 'தாருஸ்ஸலாம் மறைக்கப்படாத உண்மைகள்' எனும் பெயரில் புதிய நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பிரதிப் பொருளாளருமான கே.எம்.ஏ.றஸாக்கின் பதிப்பாக்கத்திலும் கவிஞர் நவாஸ் சௌபியின் எழுத்தாக்கத்திலும் வெளியாகியுள்ள இந்த நூலின் வெளியீட்டுவிழா கடந்த 12ஆம் திகதி சாய்ந்தமருது லீமெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதி அமைச்சர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.பைஸால் காசிம் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலரும் இதில் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருதில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் சாய்ந்தமருதைச் சேர்ந்த விரல் விட்டு எண்ணத்தக்க சிலரே கலந்து கொண்டமை சிலாகித்துப் பேசப்பட்டது.

### சமர்ப்பணம்

சாய்ந்தமருதில் வெளியீட்டு விழா நடத்தப்பட்ட 'தாருஸ்ஸலாம் மறைக்கப்படாத உண்மைகள்' – நூலில் அதன் சமர்ப்பணம் இவ்வாறு அமைந்திருந்தது.

"தன் வறுமையை அழிக்க இயக்கமாகி, இயக்கத்தை அழிக்க உளவாளியாகி, உள்ளவர்களை அழிக்க மு.கா.போராளியாகி, மு.காவை அழிக்க கோடரியாகி வளமோடு வாழும் சுய பேரத்தில் வலிமை கண்டவருக்கு..." எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு இன்னொரு பதில் நூல் வராமலாவிடும் எனவும் சிலர் பேசிக்கொண்டனர்.

### வன்னி நதியில்...

"முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான செயற்பாட்டுடன் பஷீர், ஹஸனலி போன்ற ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒரு கட்டத்தில் இவர்களுக்கு பணபலமும் அரசியல் பலமும் தேவைப்படும். அப்பொழுது இந்த ஆறுகள் வன்னி நதியில் சங்கமமாகும். இப்படி பொது நிகழ்வொன்றில் ஆருடம் கூறியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம்!

### ஆதரவு கிடைக்குமா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்த ஆட்சி கிழக்கு மாகாண சபையில் அமைந்துள்ளது போல் அடுத்த முறையும் தமிழர் முஸ்லிம்கள் இணைந்த ஆட்சி கிழக்கில் அமைய வேண்டுமென கிழக்கு முதல் வர்ஹாபிஸ் நஸீர் அகமட் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

கல்முனையில் நடைபெற்ற அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க உயர் பீடக் கூட்டத்தில் உரையாற்றிய சங்கத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கிழக்கு முதலமைச்சரின் மேற்படி ஆதங்கத்தை வரவேற்றுப் பேசியதுடன் அப்படியானால் அடுத்த தடவை தமிழர் ஒருவர் முதலமைச்சராக வர ஆதரவளிப்பார்களா? என்ற கேள்வியையும் எழுப்பினார். கேள்வி நியாயமானதுதானே!

### சாதனை சாதனை

தாய்லாந்தின் சாந்தான்புரி நகரில் இடம்பெற்ற 22ஆவது பன்னாட்டு அரச ஊழியர்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் இலங்கை சார்பில் கலந்துகொண்ட அம்பாறை மாவட்டம் நிந்தவூரைச் சேர்ந்த யூ.எல்.சியாட்முஹமட், ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப்பதக்கமும் குண்டெறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

நிந்தவூரிலுள்ள விளையாட்டுக் கழகங்கள், மாணவர்கள் பொது அமைப்புக்கள் சாதனையாளர் சியாட் முஹம்மட்டுக்கு பெருவரவேற்பளித்தனர்.

### பட்டதாரிகள்

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும்போது அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்க வேண்டுமென்றும் நியமனங்களில் எல்லாப் பட்டதாரிகளையும் உள்வாங்கும் வகையில் சாத்தியமான திட்டத்தை மாகாண சபைகளும் மத்திய அரசும் செயற்படுத்த வேண்டுமெனவும் கல்முனையிலுள்ள தொழில் ரீதியான தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

### மூக்கை நுழைக்காமல்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் தலைமையின் துரோகத்தனங்களையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் இரண்டாவது பொதுக் கூட்டத்தை முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி பொத்துவில் பிரதேசத்தில் நடத்தி முடித்தார்.

ஹஸனலியின் இந்தப் பரப்புரையும் போர்க்கொடியும் முஸ்லிம் காங்கிரஸுக்கு மக்கள் மத்தியில் பின்னடைவை ஏற்படுத்தவில்லையா? என ஊடகவியலாளர் ஒருவர் முஸ்லிம் காங்கிரஸின் மூத்தமக்கள் பிரதிநிதி ஒருவரிடம் வினவினார்.

"உண்மைதான் கள நிலவரம் கவலைப்படும்படியாகவிருந்தாலும் தலைவர் ஹக்கீமைச் சுற்றியிருக்கும் சிலர் அவரை மகிழ்விப்பதற்காக உண்மை நிலையைக் கூறாது முற்றிலும் எதிர்மாறான கருத்துக்களைப் பூசி மெழுகிக் கூறி வருகிறார்கள். தலைவரும் அதனை நம்புகின்றார். இதற்குள் நாமேன் மூக்கை நுழைத்து வம்பை விலைக்கு வாங்க வேண்டும்?" எனப் பதிலளித்தாராம் அந்த மூத்த மக்கள் பிரதிநிதி.

### பெரிய பூதம்

"முஸ்லிம் காங்கிரஸுக்கு சேறு பூச முனைந்துள்ள சிலரைப் பெரிய பூதம் ஒன்றே பின்னாலிருந்து ஆட்டி வைக்கின்றது. பணபலத்தால் முஸ்லிம் காங்கிரஸை அழித்து தலைமை தாங்க இவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களது எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது" இப்படிக் கூறியிருக்கிறார் பிரதி சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிம்.

### குண்டு குண்டு

வடகிழக்கு இணைப்புடன் கரையோர மாவட்டக் கோரிக்கையை முடிச்சுப் போட வேண்டாமென குண்டொன்றைத் தூக்கிப் போட்டிருக்கிறார் பிரதி விளையாட்டுத் துறை அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸ். விமர்சனங்களைக் கண்ட பயப்பிராந்தியோ இது எனப் பலரும் கேட்கின்றனர்.

"பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் போது அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்க வேண்டுமென்றும் நியமனங்களில் எல்லாப் பட்டதாரிகளையும் உள்வாங்கும் வகையில் சாத்தியமான திட்டத்தை மாகாண சபைகளும் மத்திய அரசும் செயற்படுத்த வேண்டுமெனவும் கல்முனையிலுள்ள தொழில் ரீதியான தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.





# மக்கள் போராட்டங்களும் அரசியல் தலைமையும்

சந்திரசேகரஆசாத்

காணாமற் போகச் செய்யப்பட்டோரைக் கண்டுபிடிக்கக் கோரியும் அவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடும்படிகேட்டும்காணாமற்போனோரின் உறவுகள் பல நாள்களாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தப்போராட்டங்கள் கிளிநொச்சி,வவுனியாஉட்படபலஇடங்களிலும் பல வடிவங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்டஅரசியல்துறைப்பொறுப்பாளர்எழிலன் உட்பட ஐவரின் ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீண்ட காலமாகவே இழுபட்டுக் கொண்டு செல்கின்றது. இராணுவத்தினரிடம் சரணடைந்தோர் பட்டியலைநீதிமன்றில்சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம்உத்தரவிட்டும்உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேவேளை ஏற்கனவே வவுனியாவில் காணாமற்போனோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட உணவு ஒறுப்புப் போராட்டமும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் தலையீட்டை அடுத்து கைவிடப்பட்டது. அதன் அடிப்படையில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுடன் அலரிமாளிகையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் அவரிடமிருந்து திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இப்படியான ஒரு நிலையிலேயே அதாவது எடுக்கப்பட்ட பல போராட்டங்கள், வெற்றி எதையுமே எட்டாத நிலையிலேயே தற்போதைய தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் கேப்பாப்புலவு, பன்னங்கண்டி ஆகியபகுதிகளின்மக்களும் போராட்டங்களை நடத்திவருகின்றனர். மக்களின்தொடர்ச்சியான இந்தப்போராட்டங்களுக்குப் பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

### சலனமற்றிருக்கும் அரசு

காணாமற்போனோர் தொடர்பாகவும் தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரியும் மக்கள்நடத்தும்போராட்டங்கள்உறுதியானவையாகவும் நீண்டவையாகவும் தொடர்ந்த போதிலும் அரச தரப்பிலிருந்து இதுவரை ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படிமேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறிகூடத் தென்படவில்லை. ஒரு பெரும் அலட்சியப் போக்கே காண்பிக்கப்படுகின்றது. காணாமற் போனோர் தொடர்பாக அலுவலகம் அமைக்கப்படும் எனச் சொல்லி பிரதமர் விடயத்தை முடித்துவிட்டார்.

காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள்பலத்தஅச்சுறுத்தல்மத்தியிலும், நல்லிணக்கஆணைக்குழுவிடமும், மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமற்போனோர் தொடர்பான அரசதலைவர் ஆணைக்குழுவிடமும் சாட்சியங்களை வழங்கியிருந்தனர். அந்த இருகுழுக்களுமே அரசிடம்தங்கள் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தன.

ஆனால், அவை தொடர்பாக இன்றுவரை எவ்வித நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. இப்படியான நிலையில் மீண்டும் ஒரு காணாமற்போனோர் அலுவலகம், முறைப்பாடு, விசாரணை என்பதெல்லாம் காலத்தை இழுத்து விடயங்களை நீர்த்துப்போக வைக்கும் ஒரு கண்துடைப்பு என்பதை நம்பாமலிருக்க முடியுமா? தருஸ்மன் தலைமையிலான பன்னாட்டுக் குழுவால், இரு அரச தலைவர் ஆணைக்குழுக்களால், நீதிமன்றத்தால் தீர்த்து வைக்கப்படாத பிரச்சினையைக் காணாமற்போனோர் அலுவலகத்தால் மட்டும் தீர்த்துவிட முடியுமா?

அதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தக்காரணம் கொண்டும் நாட்டை மீட்ட இராணுவத்தைக்குற்றக்கூண்டில்நிறுத்தமாட்டேன் எனச்சவால்விடும்நிலையில்நாம்நியாயத்தை எதிர்பார்க்க முடியுமா?

எனவேதான் தொடர்ச்சியான மக்கள் போராட்டத்தை விட மாற்று வழி எதுவுமில்லையென்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளனர். ஆனால், மக்களின் நியாயபூர்வமான போராட்டங்கள் தொடர்பாகஅரசதரப்பினர்பொறுப்பற்றமுறையிலேயே நடந்து வருகின்றனர்.

இந்தப் போராட்டங்கள் ஏறக்குறைய ஒரு மாதத்தை எட்டும் நிலையிலும் அதிகார மட்டத்தில் எவ்வித சலனமும் இல்லாத நிலையில் அடுத்தகட்டம் என்னவென்றகேள்விஎழுகிறது. அதாவதுபோராட்டத்தைஇப்படியேதொடர்வதா அல்லதுஅதைஅடுத்தகட்டத்துக்குநகர்த்துவதா எனத் தீர்மானிக்க வேண்டிய ஒரு நிலை எழுந்துள்ளது.

ஏற்கனவேமக்களின்உறுதியானநீண்டபோராட்டம் காரணமாகப் பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம்வெற்றிபெற்றுள்ளது. அந்தவெற்றி எப்படிஏற்பட்டதுஎன்பதைமீள்பரிசீலனைசெய்வதுபயனுள்ளதாகஅமையுமெனநம்புகிறோம். அந்த வெற்றியின் அடிப்படை அந்த மக்களின் ஐக்கியமும், தளர்வின்றி உறுதியுடன் அந்த மக்கள்போராட்டத்தைத்தொடர்ந்தமையுமேஆகும். எனினும்இதற்கானபலதுணைக்காரணங்களும் உண்டு. ஆரம்பத்தில் இந்தப் போராட்டம் சிறுதொகையினராகிய அந்தப் பகுதி மக்களால் ஆரம்பிக்கப்பட்டாலும், சில நாள்களிலேயே அது பல தரப்பினரின் ஆதரவையும் பெற்றுப் பலம் பெற்றது. அங்கு சென்று அவர்களின் போராட்டத்தில் பலதரப்பினரும்கலந்துகொண்டது மட்டுமன்றிப் பல இடங்களிலும் ஆதரவுப் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. போராட்டத்தின் ஆரம்பத்தில் வருகையாளர்களாகவும், ஆதரவு தெரிவிப்பவர்களாகவும் நடந்துகொண்ட அரசியல்வாதிகளும்மக்களின் போராட்ட வெற்றிக்கு வெவ்வேறு வழிகளில் பங்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தப்பிரச்சினை நாடாளுமன்றத்தில்எதிரொலிக்கவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமை அரச தலைவருடன் பேச்சுக்களை நடத்த வேண்டிய நிலையும் எழுந்தது.

அதேசமயம்சிலதீயசக்திகள் இந்தப் போராட்டத்தைத் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு எதிராகப் பயன்படுத்தவும் அந்த மக்களுக்கும் அரசியல் தலைமைகளுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தவும் முயன்றபோதும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. மக்கள் சகல தரப்பினரின் ஆதரவுடனும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அரசியல் தலைமையை நிராகரித்த போராட்டம் என்ற பரப்புரையும் எடுபடவில்லை. இன்று இந்த வெற்றிக்கு உரிமை கொண்டாடச்சிலர் முயன்றும் வருகின்றனர்.

### மேலும் சக்தி வேண்டும்

உண்மை என்னவெனில் மக்களின்உறுதியான போராட்டம் பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் வெற்றிபெற்றது என்பது தான்.

எனவே, அந்த அனுபவம் பெற்றுக் கொள்ளப்பட்டு மேலும் மெருகுபடுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுவதே வெற்றிக்கான ஒரே வழியாகும். காணாமற் போனோர் தொடர்பான போராட்டமென்றாலென்ன மண்மீட்புப்போராட்டமென்றாலென்ன அந்த மக்களால் மிகவும் உறுதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பலதரப்பினரும் இந்தப்போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கிய போதும் அது ஒரு பேரலையாக எழவேண்டியது அவசியமாகும். அப்படி எழும்போதே அரசின் அலட்சியப்போக்கைத்தகர்க்கமுடியும். ஆனால் இந்த ஆதரவு என்பது இந்தப்போராட்டங்களின் பின்னால் பல்வேறு அரசியல் சக்திகள் உட்படப் பரந்த மக்கள் அணியைத் திரள வைக்கும் வகையிலேயே அமைய வேண்டும். மாறாக போராடும் மக்களை ஏனைய சக்திகளிடமிருந்து தனிமைப்படுத்தும் வகையில் அமைந்து விடக்கூடாது.

காலம்காலமாகத்தமிழீழவிடுதலைப்போராட்டத்தை இனவாதமெனச்சித்திரித்துக் கொழும்பிலிருந்து அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கும் அமைப்பு, காணாமற்போகவைப்பதில்பங்காளியாகஈடுபட்டதாகக் கூறப்படும் ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரின் சகாக்களும் தற்சமயம் இந்தப் போராட்டங்களைத்தமிழ் தலைமைகளுக்குஎதிராகத்திருப்பிவிடும்முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

இது ஒரு பெரும் ஆபத்தான போக்கு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாகமக்கள்போராட்டங்கள்தொடர்பாகத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமையின் பங்களிப்பில் போதாமை உள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஏனைய நாடாளுமன்றஉறுப்பினர்களும், செயற்பாட்டாளர்களும் வழங்கும் ஆதரவையும், பங்களிப்பையும் எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

எனவேஇப்படியானநபர்கள்விடயத்தில்மக்கள் விழிப்புடன்இருக்கவேண்டியதுஅவசியமாகும். காணாமற்போனோர் தொடர்பான போராட்டம், மண்மீட்புப் போராட்டம் என்பன மக்களின் புதைந்து கிடக்கும் உணர்வுகளின் எழுச்சியில் உருவாகும் போராட்டம். எனவே மக்களின் கோரிக்கைகளைப்புறந்தள்ளிகாலத்தைஇழுத்தடிப்பதன் மூலம் மக்களைச் சலிப்படைய வைத்து அரைகுறைத் தீர்வை மக்களை ஏற்க வைக்கும்நோக்கம் அரசுக்கு இருக்கலாம்.

இந்தப் போராட்டங்களில் பங்கு கொள்ளும் மக்கள். சாதாரண உழைக்கும் மக்கள். நாளைய உணவுக்கு இன்று உழைக்க வேண்டியவர்கள். எனவே போராட்டத்தைநலிவடையவைத்துவிட முடியுமெனச் சில தரப்பினர் நம்பலாம்.

ஆகையால் போராட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். அதற்கானவியூகம்வகுக்கப்பட்டு செயலில் இறங்க வேண்டும்.

### எழுச்சி பெறட்டும்

மாணவர்கள், வர்த்தகர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள், அரச ஊழியர்கள், பொது நிறுவனங்கள் எனப் பலதரப்பினரும் களத்தில் இறங்கும்போது போராட்டம் பேரலையாக எழுச்சி பெறும். அரசும் அசைந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குள் தள்ளப்படும். அதேவேளையில் இராணுவத்தினர் கேப்பாப்புலவு மக்களின் போராட்டத்தைத் தடைசெய்யுமாறுகோரிமுல்லைத்தீவுநீதிமன்றில்மனுத்தாக்கல்செய்துள்ளனர். மக்கள்தங்கள்காணிகளை விடுவிக்கும்படி கோரும் உரிமையைக் கூடப் பறிக்கமுனையும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நோக்கத்தையும் தாம் எது செய்தாலும் தட்டிக் கேட்கக்கூடாது என்ற திமிர்மனப்பான்மையையும் இது தெளிவாகவே வெளிப்படுத்தி நிற்கிறது.

காணாமற்போனோர் தொடர்பான போராட்டம் இப்போது மன்னார், மட்டக்களப்பு எனப் பல பகுதிகளுக்கும்விரிவடைந்துள்ளது. நிலமீட்புப் போராட்டமும் அப்படி விரிவடையும் நிலையே ஏற்படும். அரசியல் சக்திகளின் போராட்டங்களை விட மக்கள் போராட்டங்கள் வெற்றிபெற்றமைக்கு உலகம் முழுவதுமே சான்றுகள் உண்டு. மேலும்மக்கள்போராட்டம்சக்திபெற்று மேலெழும்போது அரசியல் சக்திகள் ஒதுங்கி நின்று விட முடியாது. அந்தப் போராட்டங்கள் உறுதியான நேர்மையான அரசியல் தலைமைகளை உருவாக்கி வெற்றியை நோக்கி நகரும் என்பதில் சந்தேகமில்லை.



**காணாமற் போனோர் தொடர்பான போராட்டம், மண்மீட்புப் போராட்டம் என்பன மக்களின் புதைந்து கிடக்கும் உணர்வுகளின் எழுச்சியில் உருவாகும் போராட்டம். எனவே மக்களின் கோரிக்கைகளைப் புறந்தள்ளி காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் மக்களைச் சலிப்படைய வைத்து அரைகுறைத் தீர்வை மக்களை ஏற்க வைக்கும் நோக்கம் அரசுக்கு இருக்கலாம்.**



# ஏதும் முடியும் யாவரும் கேளிர் 'தமிழ்'

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

கண்ணால் பார்க்கலாம், கண்ணாடி தேவை எனில்அதன்வழிபார்க்கலாம். நல்லமாம்பழம் இருக்க மாங்காயைத் தேடலாமோ?

வேர்ச் சொற்கள் புதைந்து பொலிந்து கிடப்பது தமிழச்சொற்களஞ்சியம். ஆயினும்காலத்துக்குக்காலம் பிறமொழிச் சொற்களின் (பாளி, பிராகிருதம், வடமொழி) ஒலிபெயர்ப்பைத் தமிழ்ச் சொற்களாக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. தொல்காப்பியர் கோட்டிட்டுக் காட்ட, நன்னூலார்சிறிதேவிளக்க, வீரசோழியத்தார்ஒலிபெயர்ப்புக்குத்தற்பவம், தற்சமம்என்றவழிகாட்டலைவிட்டுச் சென்றார். தற்பவம்என்பதுவடமொழிக்கேஉரிய சிறப்புஎழுத்தாலும்சிறப்பு, பொது இருவகைஎழுத்தாலும்அமைந்து, தமிழுக்குஏற்பமாறுபட்டு(விகாரம்அடைந்து)தமிழில்வழங்கும்வடசொல்லைக் குறிப்பது. தற்சமம் என்பது வடமொழிக்கும் தமிழுக்குமாகப் பொதுவான எழுத்துகளால் அமைந்து மாறுபடாமல் (விகாரம் அடையாமல்) தமிழில் அமையும் வடசொல்.

சேர். பொன்னம்பலம் இராமநாதனும் வடமொழி ஒலிகளைத்தமிழுக்குப்பெயர்க்கஒருபட்டியலைத்தனதுநூலில் வெளிப்படுத்தினார். மேனாட்டாரின் மொழிகள் தமிழருக்கு வந்தபின், தமிழ் ஒலிகளை உரோம வரிவடிவத்துக்கு எடுத்துச் செல்ல, எழுத்துருப் பெயர்ப்பாக, இந்தியாவின்சென்னைப்பல்கலைக்கழகம்வெளியிட்டசென்னைப் பல்கலைக்கழகத்தமிழ்அகராதியும்ஒருபட்டியலைத்தர, தமிழ் ஆராய்ச்சியாளர்கள் அவற்றையே எடுத்தாண்டனர்.

தமிழிலிருந்துஉரோமவரி வடிவங்களுக்கான எழுத்துப்பெயர்ப்புக்குஅனைத்துலகத்தராதர அமைப்பு ஒரு பட்டியலைத் தந்துள்ளது. சுவீடனில் தமிழ்நெற் தளத்தினர் தமிழை ஆங்கில வடிவடிவங்களுக்குக் குறிகள் சேர்க்காது கணினி விசைப்பலகை வழி எடுத்துச்செல்லும்அரிய முயற்சியால் ஒலிபெயர்ப்புக்கு உரோமவரிவடிவம்கொடுத்தனர்.




பன்னிரு திருமுறைகளை மற்ற மொழிகளுக்கு ஒலி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

பேராசிரியர் முருகையன், என் அழைப்பை ஏற்று அனைத்துலக ஒலியன்களுடன் பன்னாட்டு ஒலிப்பியல்அரிச்சுவடித்தமிழ்ஒலிகளை ஒப்பிட்டு 100 தமிழ் ஒலிகளைத்தமிழில்அடையாளம் கண்டார். அவரது கருத்துரைகளைநூலாக்கினேன். அவரது மாணவர் பேராசிரியர்தெய்வசுந்தரம் அந்த நூல் வெளியீட்டுவிழாவைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடத்தினார்.

எழுத்துருப்பெயர்ப்புக்கும்ஒலிபெயர்ப்புக்கும் இவைதாம் இந்தக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள். பிற மொழிச் சொற்களைத் தமிழுக்குக் கொண்டுவர எழுத்துருப்பெயர்ப்போ, ஒலிபெயர்ப்போ வேண்டாம், தமிழ்ச் சொற்களாலேயேதரவேண்டும்என்றதமிழ்ஆர்வலரின் கருத்துக்கமைந்தஅரசுசார், மற்றும்தனியார்முயற்சிகளே கலைச்சொற் தொகுதிகள். இலங்கை அரசு 44 கலைச் சொற் தொகுதிகளை வெளியிட்டுள்ளதே! தமிழ் நாட்டில் கோவை கலைக் களஞ்சியம் இதழார், மணவை முஸ்தாபா, தமிழக அரசு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம் எனவும் பிறவுமாகப் பல்வேறு தொகுதிகளை வெளியிட்டு உள்ளன.

1986இல் சென்னையில் தமிழுக்குப் புதிய தொழிநுட்பம் அறிமுகமாகி, அச்சுக் கோர்வை என்பது கணினி மயமாகியது. நானும் ஓர் எந்திரத் தொகுதியைத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியுடன் வாங்கினேன். நாளுக்கு 16 ஊழியரின் மூன்று காலப் (614, 1422, 226ஸ்ரீ3ஓ8ஸ்ரீ24) பணி. கலைஞர், மணியன் எனத் தமிழக முன்னணி எழுத்தாளர், தமிழக முன்னணி வார, மாத இதழ்கள் என என் வாடிக்கையாளர். கை அச்சுக் கோர்வை பரவலான காலம். ;. Phototype setting சொல்லுக்கு ஒளி அச்சுக் கோர்வை என்ற தமிழ்ச் சொல்லை அறிமுகம் செய்தேன். Font எழுத்துரு, condensed குறுங்கு, expanded விரிவு, point புள்ளிஎனப்பலசொற்களையும் அச்சு மாதிரிகளையும் கொண்ட விலைப் பட்டியல் தயாரித்தேன். சென்னை அச்சகத்தார் சங்கத்துக்காக நூலைப் பக்கமாக்கும் அச்சுத் தொழில் பயிற்சி அளித்தேன். தமிழ்ச் சொற்களையே முழுதாகச் சொன்னேன். அண்மையில் யாழ்ப்பாணத்திலும் சிலருக்கு ஒரு வார காலம் அதே முறையைப் பயிற்றுவித்தேன். தனித் தமிழ் ஆர்வலர் கிளிநொச்சி இறை பிள்ளை அவர்களையும் இப்பயிற்சிக்கு அழைத்தேன்.

இன்று தமிழகம் முழுவதும் அச்சொற்கள் பயனில் உள. தமிழகத்தில் அச்சிட்ட நூல் ஒன்றில், தலைப்புக்கு அடுத்த அச்சுத் தகவல் பக்கத்தில் ஒளி அச்சு என்ற சொல்லையே காண்பீர்கள்.

அட்லஸ் எனப் பயனில் இருந்த சொல்லை நிலவரை என நான் சொன்னேன். புறநானூற்றுப் பாடல் (72) வரியில், 'புலவர் பாடாது வரைகஎன் நிலவரை' என வந்த சொல் அது. நிலவரை நூலின்பிரதி ஒன்றைமுதலமைச்சர்ஜெயலலிதாவுக்குஅனுப்பினேன். அதன்பின்னர்தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இலவச நிலவரை கிடைக்கச் செய்தார்.

சட்ட சபையிலும் தன்னுரையில் நிலவரை என்ற சொல்லையேசிலஆண்டுகளாகக்கூறிவந்தார். இதற்குஅவரின் நிதிநிலை, கல்வி ஒதுக்கீடுகள் , உரை ஆகியவற்றைப் பார்க்கலாம். ஒக்ஸ்போர்ட், பிளாக்கிநிறுவனங்களும்என்னிடம் ஒப்புதல் கேட்டு, நிலவரைக்கு மாறின. யாழ்ப்பாணத்தில்செங்கை ஆழியானும்நிலவரைக்கு மாறினார். இவையொத்தபலதொழிநுட்பச்சொற்களைத்தமிழாக்கி, என்20ஆண்டுகாலச்(1986-2006)சென்னைவாழ்வில் காந்தளகம் பதிப்பகம் வழி அறிமுகம் செய்தேன். அவ்வாறே என்னையொத்த ஆர்வலர்களின் தமிழாக்கங்களை விரைந்து உள்வாங்கினேன். 'தமிழால் முடியும்' என்ற கருத்தை ஊக்குவிப்பதில் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகளில் பணிபுரிந்தேன்.

பெயர்ச்சொற்களையுமேகடந்ததலைமுறையில்தமிழாக்கித்தந்தனர். நன்னம்பிக்கைமுனை CapeofGoodHope. Carrying coal to New Castle புதுக்கோட்டைக்குக் கரி கொண்டு செல்வதுபோல. முடிந்தவரைத் தமிழ்ச் சொற்களை ஆளவேண்டும். தேடித் தேடி, துளாவித் துளாவி எடுத்தாள வேண்டும்.

கனி இருப்பக் காய் கவரலாமோ? கண் பார்வை உள்ளவருக்குக் கண்ணாடி எதற்கு?

> "எழுத்துருப் பெயர்ப்புக்கும் ஒலி பெயர்ப்புக்கு இவை தாம் இந்தக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள். பிற மொழிச் சொற்களைத் தமிழுக்குக் கொண்டுவர எழுத்துருப் பெயர்ப்போ, ஒலிபெயர்ப்போ வேண்டாம், தமிழ்ச் சொற்களாலேயே தரவேண்டும் என்ற தமிழ் ஆர்வலரின் கருத்துக்கமைந்த அரசுசார், மற்றும் தனியார் முயற்சிகளே கலைச்சொற் தொகுதிகள்."



## தொலையும் மௌனம்

ஒவ்வொரு முறையும்
நீ அடைகாக்கும்
மௌனங்களைக் களவாட
கள்ளச்சாவிகளை தயாரிக்கிறேன்
கவிதைகளின் வாயிலாக!

உன் மௌனக்குளத்தில் நானும்
என் மௌனக்குளத்தில் நீயும்
மாறிமாறி வார்த்தைக் கல் வீசுகிறோம்...
நகரும் அலைகளில் மிதப்பது
என்னவோ நாமேதான்!

வார்த்தைகளைக் கொன்று
மௌனக்கோட்டை கட்டுகிறாய்
ஒற்றை வார்த்தை அம்பில்
துளிர்க்கிறது ஒருநூறுவார்த்தைகள்
சரிகிறது கோட்டை
தொலைகிறது மௌனம்

- தமிழினி

முக்கியமானபடம். 2010ஆம்ஆண்டிலிருந்து இந்தப்படம் தான் அமலனின் அடையாளமாக உலகுக்கு சொல்லப்பட்டு வருகின்றது. காணாமற்போனோர் போராட்டத்துக்கு கொண்டு செல்வது இந்தப் படத்தைதான். சிறிய அளவிலான இந்தப் படத்தை 2011ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடந்த காணாமற் போனோர் போராட்டத்துக்காக பெரிய அளவில் பிரின்ட் எடுத்துள்ளார்.

“அவங்கட (விடுதலைப் புலகள்) நிர்வாகம் இருக்கேக்க, அடையாள அட்டைக்குப் படம் எடுத்தவங்கள். ஊரில பொது இடத்தில வைச்சுத்தான் எடுத்தது. பிள்ளை ரியூசனுக்குப் போட்டுவந்தது. நான் வலுக்கட்டாயமா படத்தை எடுக்க அனுப்பினான்” என்று அடையாள அட்டைக்காக எடுத்த படத்தை அல்பத்தில் காட்டி அழுகின்றார்.



“இந்தப் படத்தைப் பாருங்கோ தம்பி!” என்று வலுக்கட்டாயமாக ஒரு படத்தைக் காண்பித்தார். மூன்று பேரும் பஞ்சாபி உடையுடன் நின்றனர். சிரிப்புடன், “மூன்று பேருக்கும் பொம்பிளைச்சட்டை போட்டுஎடுத்ததோ” என்று கேட்டேன். ‘சிறிய தகப்பன் கமராக்காரன். அவர் இஞ்சவந்து நின்றவர். சும்மா ஒருஆசையிலமூன்றுபேருக்கும்பஞ்சாவி போட்டு ஒரு நாளில எடுத்தது. 2004 ஆம் ஆண்டாத்தான் இருக்கவேணும். ஆளின்ர வளத்தியைப் பார்த்திங்களே!”

அவரின் மனதில் காணாமாற்போன பிள்ளையே முழுவதுமாய் ஆக்கிரமித்திருந்தான் என்பதை முகம் காண்பித்தது.



“இதில மூன்று பிள்ளைகளும் நிக்கினம். கடைசி மகன்ர பிறந்தநாளுக்கு மூன்றுபேரையும் ஒன்றா வைச்சு எடுத்தது.” துக்கம் அவரது தொண்டையை இறுகக்கவ்விப் பிடித்திருக்க வேண்டும். வார்த்தைகள் தொய்யத் தொடங்கியது. லட்சம் பேர் சேர்ந்து ஒருவனை அடித்தால் கிடைக்கின்ற வலியை விட ஆயிரம் மடங்கு வலியை அவர் பொறுத்துக்கொள்வதை உடல்மொழி சொல்லியது.

அவரின் நினைவுகளைக் கிளறி சோகத்தில் சிக்க வைத்து விட்டோமோ என்று உள்மனம் குத்தத் தொடங்கியது. படங்களைப் படமெடுப்பதை நிறுத்தி கமராவை மூட முயன்றேன். அவரோ அல்பத்தின் அடுத்த பக்கத்தை தட்டினார்.



இன்னொரு அல்பத்தை எடுத்துத் தட்டினார். அதிலிருந்த முதல் படத்தைப் பார்த்ததும் மீண்டும் அழுகை. படங்கள் ஆண்டுகள் கடந்தும் அதன் நினைவுகளை பசுமரத்து ஆணிபோல மனதில் பதித்து வைத்து விடுகின்றன.

“பிள்ளையின்ர முதலாவது பிறந்த நாள். புதுச் சட்டை போட்டு படம் எடுத்தது. அப்ப பரந்தனில இருந்தனாங்கள். சந்தியில இருந்த விமினிஸ்ரூடியோவில, கோயில்லபோய் அரிச்சனைசெய்துட்டுவந்து படம்எடுத்தது. படம்எடுக்கக்கூடாது என்றதாலபேந்து படம்எடுகிறதை குறைச்சிட்டம்.” படங்கள்எடுப்பது ஆயுளைக்குறைத்துவிடும்என்கிற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கித் தன் குழந்தைகளின் எதிர்காலத்தை இருளினுள் தள்ளிவிடுவதற்கு அவர் விரும்பவில்லை.

“இப்பவும் பிள்ளையின்ர பிறந்த நாளுக்கு கோயில்ல அர்ச்சனை செய்யிறனான். பிள்ளையின்ர பெயரால சாப்பாடு கொடுகிறன். புதுச் சட்டை போடபிள்ளைதான்கூட இல்லை” என்றவரின் கடைசி வார்த்தைகள் அழுகைக்குள் மீண்டும் அமுங்கிப் போனது. விசும்பல் சத்தத்துடனேயே அடுத்தடுத்த படங்கள் திருப்பப்பட்டுகடந்துபோகின்றன.



“அரியரட்ணம் சேரின்ர (அவர் இப்போது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்) கையால பரிசு வாங்கேக்க எடுத்தது.”

2011ஆம்ஆண்டுதொடக்கம்33 போராட்டங்களில்இதுவரைகனகரஞ்சினி பங்கேற்றுள்ளார். முக்கிய தலைவர்கள் வரும்போது நடந்தபோராட்டங்கள், கொழும்பில்நடந்தபோராட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டுள்ளார். ஆனால் தனது பிள்ளை உயிரோடு இருக்கிறதா இல்லையா என்பதைக்கூட அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

“2011 ஆம் ஆண்டு முதலாவது போராட்டத்தில கலந்து கொள்ளேக்க 2 அல்லது மூன்று நாளில பிள்ளையைவிடுவாங்கள்என்றநம்பிக்கைஇருந்தது. இப்பஎல்லாரையும்நம்பிநம்பிஏமாந்துபோய் இருக்கிறம். தனிச்சுக் கிடக்கிறம்” அவர் சொல்கிறார்.

காணாமற்போன பலரின் உறவுகள் அவர்களை மீட்பதற்காகப் பணம் கொடுத்து ஏமாந்ததைப் போல இவரும் ஏமாந்திருக்கின்றார். இந்தப் பண மோசடிக் கும்பலுக்குப் பொலிஸும் உடந்தை என்று குற்றஞ்சாட்டுகிறார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆட்சி வந்தபோது விரைவில் தமக்கும் ஒரு பதில் தெரிந்துவிடும் என்று நம்பியிருந்தவர்களுக்கு இப்போது ஏமாற்றம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதனால்தான் அவர்கள் மீண்டும் போராட்டக் களங்களுக்குத் திரும்பியிருக்கிறார்கள். போராட்டம் மட்டுமே தமக்கு எதையாவதுபெற்றுத்தரும்என்றுநம்புகிறார்கள்.

“எட்டு வருசமாய் பிள்ளையை எதிர்பார்த்துக் கொண்டிக்கிறன். ஆள் இல்லை என்றால் அதற்கான கடமையைச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் விடியிற பொழுது நல்லதா எங்களுக்கு விடியாதா என்றுதான் நினைக்கிறன். யார் மோட்டார் சைக்கிளில வீட்டுக்கு வந்தாலும் என்ர பிள்ளையா என்று ஓடிப்போய் பார்கிறதாயே காலம் கழியுது.” என்கிறார் கனகரஞ்சினி.

அவர்கள் நம்பியிருந்த மைத்திரி - ரணில் அரசோ காணாமற்போனோர் விடயத்தைக் கையாள்வதில் எந்த அவசரத்தையும் அவசியத்தையும் காட்டவில்லை. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கான சட்டத்தைநாடாளுமன்றத்தில்கொண்டுவந்தார்கள். ஆனால், அதனைநடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி வழங்குவதை அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தாமதித்து வந்தார். கடந்த மாதம்தான் அதற்கான அனுமதி வழங்கப்பட்டடது. என்றாலும் இன்னும் அந்த அலுவலகம் உருவாக்கப்படவில்லை. இவர்கள் நம்பியிருந்த மற்றொரு தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவோ, காணாமற்போனவர்களைக்கண்டறியமுடியவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர் என்று எழுந்தமானமாகச்சொல்கிறார். காணாமற்போனோரைக்கண்டறிவதற்கான உரியவழிமுறைகள்எவற்றையும்நடைமுறைப்படுத்தாமலேயே அவர் இதனை நாடாளுமன்றத்தில்சொல்கிறார். காணாமற்போனவர்கள்கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் பேசுகிறார். இவற்றைச் சொல்வதற்காக அவரிடம் எந்த ஆதாரமும் இல்லை.


காணாமற்போனவர்கள்கொல்லப்பட்டுள்ளார்கள்என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிந்திருந்தால், அவர்கள்எப்போது, யாரால், எதற்காககொல்லப்பட்டார்கள்என்றவிவரத்தையும்ரணில்வெளியிட வேண்டும் என்றுஉறவினர்கள்எழுப்பும்கேள்விக்குஅவர் இதுவரையில் பதிலளித்ததில்லை. இந்தப் பிரச்சினையை அவர்கள்வெறும்அரசியலாகக்கடக்கப்பார்க்கிறார்கள். ஆனால், உறவுகள் ஒவ்வொருவருக்குமோ இதுவொருஉணர்ச்சிப்போராட்டம். அதுவெறும்உடலும் உயிரும் சார்ந்தது மட்டுமல்ல.

விடைபெறுவதற்குமுன்னர், கேட்கலாமாவிடலாமா என்றுமனதில்தொங்கிக்கொண்டிருந்தகேள்வியை, நீண்ட போராட்டத்தின் பின்னர் கேட்டேன். “கிட்டடியில வீட்டில் விசேடம் நடந்ததா?” அலங்காரங்களின் எச்சங்களைக் கண்டுவிட்டுக் கேட்டேன்.

நீண்டபெருமூச்சுஒன்றைவிட்டுக்கொண்டே, கண்கள் கலங்கச்சொன்னார், “மூத்தபிள்ளைக்குஎத்தனையோ வரன்வந்தது. வேண்டாம்வேண்டாம்என்றுஒதுக்கிக் கொண்டுதான் வந்தனான். அவளும் தம்பிதான் மாப்பிளத் தோழனாய் நிக்கவேணும் என்று பிடிவாதமாய் இருந்ததாலஎல்லாத்தையும்தட்டிக்கழிச்சுக்கொண்டிருந்தாள். அமலுக்குட்டிவந்தபின்னர்தான்கலியாணம் என்றிருந்தம். என்ன செய்ய! பிள்ளைக்கு 30 வயசும் தாண்டிப் போச்சுது. சொந்தக்காரங்களும் எனக்குப் பேசினாங்கள். வேற வழியில்லாமல் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வச்சம். அமலுக்குட்டி இல்லாமல்தான் நடந்தது. மகளின்ர சாமத்திய வீட்டில நின்று ஓடியாடி வேலை செய்தவன். ஆனா கடைசி வரைக்கும் கல்யாண வீட்டில அவன் இல்லை.”



# அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா...!



## கொழுப்புக் குறைந்ததுதான் பயன்



மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி மகிந்த அரசுக்கு எதிராக பாத யாத்திரை ஒன்றை நடத்தியது. மாத்தறை முதல் கொழும்புவரை அந்த யாத்திரை இடம்பெற்றது. அந்த யாத்திரை முடிந்து ஓரிரு நாள்களில் அந்தக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவை அவரது கொழும்பு வீட்டில் ஓர் ஊடகவியலாளர் சந்தித்தார்.

பல நாள்கள் வெயிலில் நடந்து வந்ததால் வழமைக்கு மாறாகக் கறுத்துப் போய் இருந்தார் திஸ்ஸ. அந்தப் பாத யாத்திரையின் பலாபலன்கள் பற்றி ஊடகவியலாளர் அவரிடம் கேட்டார்.

"நான் ஏற்கனவே கறுப்பு. பாத யாத்திரையில் பல நாள்கள் வெயிலில் நடந்து வந்ததால் மிகவும் கறுத்துப் போனேன். அதுபோக, பலருக்கு கொழுப்புக் குறைந்துவிட்டது. மேலும் பலருக்கு சீனி நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

இதுதான் பாத யாத்திரையால் கிடைத்த பலாபலன்" என்றாரே பார்க்கலாம் திஸ்ஸ. மகிந்த தரப்பினர் அண்மையில் நடத்திய இதுபோன்ற ஒரு பாத யாத்திரையின்போதும் திஸ்ஸ அத்தநாயக்க கூறிய அதே பலாபலன்தான் கிடைத்திருக்குமோ? அதுவேனும் கிடைக்குதே என்று சந்தோசப்படுங்க பாஸ்!

எம்.ஐ.முபாறக்



## ஊடகவியலாளர்களின் குறும்புத் திட்டம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அஸ்வர் ஹாஜியார் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் கடும் விசுவாசி. தன்னைப் படைத்தவனை விடவும்தன் சமூகத்தை விடவும் தன் தலைவனான மகிந்தவே பெரிது என்று நினைத்துச் செயற்படுகிறாரோ என்று விமர்சனம் எழுமளவுக்கு அவரது விசுவாசம் பேர்போனது.

இந்த விசுவாசம் சிலருக்கு அவர் மீது கடும் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அவர்களில் ஊடகவியலாளர்களும் அடக்கம். அவர்கள் சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பமும் வந்தது.



அன்றைய தினம் நாடாளுமன்றில் அவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். வழமைபோல் அவரது தலைவரின் புகழைப் பாடத் தொடங்கினார். அந்தப் புகழ் பாடலில் அவர் கொஞ்சம் ஓவராகச் சென்று புலிகளின் தலைவரின் மனைவி, பிள்ளைகளை மகிந்தவே காப்பாற்றினார் என்று கூறிவிட்டார். தமிழ்செல்வனின் மனைவி, பிள்ளைகள் என்று சொல்வதற்குப் பதிலாக மறந்து போய் இவ்வாறு சொல்லிவிட்டார் என்று அதைக் கேட்டுக்கொண்டிருந்த நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்குத் தெரியும்.

இருந்தாலும்,சந்தர்ப்பத்தை விடுவார்களா?

இந்தச் செய்தியை வெளியிட்டால் மறுநாள் அஸ்வர் ஹாஜியாருக்கு மகிந்தவின் ஏச்சுடன்தான் விடியும் என்பது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. மொத்த உலகமுமே பிரபாகரனின் மனைவி, பிள்ளைகளை தேடிக்கொண்டிருக்கும் நிலையில், இந்தச் செய்தியைப் பிரசுரித்தால் அஸ்வருக்கு என்ன நடக்கும் என்று ஊடகவியலாளர்களுக்குத் தெரியும்.

இருந்தாலும், அஸ்வர் அடிக்கடி மகிந்தவின் புகழ்பாடுவதால் கடுப்பாகிப்போயிருந்த ஊடகவியலாளர்கள் சிலர் ஏனையவர்களையும் வசப்படுத்தி அஸ்வர் என்ன சொன்னாரோ அதனை அப்படியே அடுத்த நாள் பத்திரிகையில் வெளியிடுவதற்குத் தீர்மானித்தனர். பிரச்சினை வந்ததும் ஊடகவியலாளர்கள் தனது பேச்சைப் பிழையாகப் பிரசுரித்துவிட்டார்கள் என்று அவர் மறுநாள் சபாநாகரிடம் முறையிடுவார் என்பதால் அவரது அந்தப் பேச்சின் ஒலிப் பதிவையும் இறுவட்டாக நாடாளுமன்ற அலுவலகத்திலிருந்து பெறத் தீர்மானித்தனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்களுக்கு கை கொடுக்கக்கூடியவராக இருந்தவர் இப்போதைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர.

இதுபற்றி அவரிடம் ஊடகவியலாளர்கள் கூறினர். நாளை நடக்கப் போவதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் உங்கள் பணியைச் செய்யுங்கள் என்றார். அவ்வாறே செய்யப்பட்டது. மறுநாள் அஸ்வருக்கு நரக நாள்தான். காலையில் வந்ததுமே சபையில் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார். அதற்கு முன்பே அமைச்சர் தயாசிறி அவரது உரை அடங்கிய இறுவட்டோடு நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்தார். தனது உரை ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளது என அஸ்வர் ஊடகங்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு வாசித்து முடிக்கும் முன்பே இறுவட்டைத் தூக்கிப் போட்டார் தயாசிறி. அவ்வளவுதான் அடங்கிப் போனார் அஸ்வர். அன்றைய நாள் முழுவதும் அவர் சோகத்திலேயே காணப்பட்டார். அவர் முகத்தைப் பார்த்தபோது பேசாமல் விட்டிருக்கலாமோ என்று ஊடகவியலாளர்கள் பரிதாபப்பட ஆரம்பித்துவிட்டார்கள்.

## மேடத்தின் அதைத் திருடியவர் யார்?

ஒரு காலத்தில் தமிழர்களுக்குச் சமாதான தேவதையாகத் தெரிந்த தலைவி மது அருந்துவதில் அதிக நாட்டம் உள்ளவர். ஒரு முழுப் போத்தல் அடிச்சாலும் அசையாம கல்லு மாதிரி நிற்பார் என்று அவரை அறிந்தவர்கள் சொல்லுமளவுக்கு நாட்டம் அதிகம். தூர இடங்களுக்கு நிகழ்வுகளுக்குச் செல்லும்போதெல்லாம் அவருக்கு முன்பாகவே அவருக்குத் தேவையானவைகளும் போய்ச் சேர்ந்துவிடுமாம். அனேகமாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலை உயர்ந்த அந்த மதுவும் அதில் இருக்கும். அப்படிப்பட்ட மதுப் போத்தல் ஒன்று ஒரு நாள் திருடப்பட்டதுதான் சுவாரசியம். தூர இடம் ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நிகழ்வுக்கு ஊடகவியலாளர்களையும் அழைத்துச் சென்ற மெய்ப் பாதுகாவலர்கள் ஊடகவியலாளர்களின் வாகனத்திற்குள்ளேயே அந்த மதுப் புட்டி அடங்கிய பெட்டியை வைத்திருக்கிறார்கள். நிகழ்வு இடத்தை அடைந்ததும் மெய்ப் பாதுகாவலர்களுள் ஒருவர் ஓடி வந்து அந்த பெட்டியைத் தேடினார். அது அங்கே இல்லை.

"அம்மாவின் பொருள் எங்கே?" என்று எல்லோரிடமும் கேட்டார். அது அம்மாவின் ஸ்பெஷல் சரக்கு என்று தெரிந்தும் உள்ளே இருந்த ஊடகவியலாளர்களில் சிலர்தான் அதை எடுத்து உள்ளே இறக்கிவிட்டனர். நெடுந்தூரப் பயணம். அதனால் எதையும் யோசிக்காது களைப்பைப் போக்க உள்ளே இறக்கி விட்டனர்.

செய்வதறியாது குழம்பிப் போய் நின்றனர் காவலர்கள். திடீரென ஒரு யோசனை உதித்தது. மேட்டர் மேடத்தின் காதை எட்டுவதற்குள் விசேட வாகனத்தில் அதி விரைவாக கொழும்பில் அடுத்த புட்டியை வரவழைத்து பெரும் தலையிடியில் இருந்து தப்பினர் பாதுகாவலர்கள்.



## இப்போ என்னதான் செய்துவிட்டாராம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் அண்மையில் ஆஸ்திரேலியா சென்றிருந்தனர். அங்கு ரணிலுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. 21 துப்பாக்கி வேட்டுக்கள் செலுத்தப்பட்டமைதான் ஆஸ்திரேலிய அரசு ரணிலுக்கு வழங்கிய கௌரவத்தின் உச்சக்கட்டமாம்.

ஆஸ்திரேலியா செல்லும் எல்லாத் தலைவர்களுக்கும் இவ்வாறு துப்பாக்கி வேட்டு மரியாதை செலுத்தப்படுவதில்லையாம். அவ்வாறு செலுத்தப்பட்டால் அவர் அந்த நாட்டு அரசால் அதிகபட்சமாக கௌரவிக்கப்பட்டார் என்றே அர்த்தமாம்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆஸ்திரேலியா சென்று திரும்பிய குழுவினரே பெருமையுடன் இதைக் கூறுகின்றனர். இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குக் களவாகப் படகுகளில் செல்பவர்களின் எண்ணிக்கை இவர் ஆட்சிக்கு வந்த பின்னர் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்பதால்தான் இந்த மரியாதை என்று சொல்கிறார்கள். ஆனால், படகுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ரணில் எதையுமே செய்யவில்லை என்பது ஆஸ்திரேலிய அரசுக்குத் தெரியுமோ என்னவோ!





## துண்டைக் காணோம்..துணியைக் காணோம்..

இலங்கையில் 2012ஆம் ஆண்டு சில இடங்களில் சிறிதளவு நில அதிர்வு ஏற்பட்டதை நாம் அறிவோம். அது கொழும்பிலும் உணரப்பட்டது. அப்போது கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் ஜோன்சன் பெர்னாண்டோ. சம்பவ தினத்தன்று கொழும்பு 02,வொக்சல் வீதியில் அமைந்துள்ள அவரது அமைச்சில்தான் அவர் இருந்தார்.

வெளியே செல்வதற்காக அவர் லிப்டில் ஏற முற்பட்டபோது கட்டடம் லேசாக ஆடத் தொடங்கியது. அவ்வளவுதான். அது நில நடுக்கம் என்பதை அறிந்து தன் உயிரைக் காப்பாற்றுவதற்காக எவரைப்பற்றியும் சிந்திக்காது செருப்புகள் இரண்டையும் கழற்றிக் கையில் எடுத்துகொண்டுஎதிரில் தென்பட்டவர்களையெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டுபடிக்கட்டு வழியாக துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட்டமெடுத்தார்.

ஓரிரு வினாடிகளில் அவர் நடு வீதிக்கு வந்து அமைச்சின் கட்டடத்தையே பார்த்துக்கொண்டு நின்றார். ஆனால் கட்டடம் இடிந்து விழக் காணோம். என்றாலும் தனது செயலுக்காக அவர் வெட்கப்படவில்லை. ஆனால் அவரது செயல் பலருக்கு கண்கவர் காட்சியாக இருந்தது.



# ஆடுகளப் புரிதல்கள் இந்தியாவுக்கும் இல்லை

ஆஸ்திரேலிய – இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் இந்திய அணி மிகவும் ஆதிக்கம் செலுத்த முடியாதமைக்கு ஆடுகளப் புரிதல்கள் இந்தியாவுக்கும் இல்லைஎன்பதேமுக்கியகாரணம். ஆஸ்திரேலியஅணிஇந்தியாவுக்குசுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஆட்டம்புனேயில்நடைபெற்றது இதில்ஆஸ்திரேலியா வென்றது. இரண்டாவது ஆட்டம் பெங்களூரில்நடைபெற்றது இதில்இந்தியா வென்றது. மூன்றாவது ஆட்டம் ராஞ்சியில் தற்போது நடைபெற்றுவருகின்றது. அடுத்தஆட்டம்தர்மசாலாவில்நடைபெறவுள்ளது.

இந்தியாவில் தொடர் நடைபெறுவதால் இந்திய அணிக்கு ஆடுகளப் புரிதல்கள் அதிகம் இருக்கும். எனவே ஆஸ்திரேலிய அணி 4:0 என்று வழித்துத் துடைக்கப்படும் என்று பலரும் கருதினர்.

ஆனால் இந்திய அணிக்கு ஆடுகளப் புரிதல்கள் இல்லாதமையே ஆஸியின் எழுச்சிக்குக் காரணம்.

அதாவதுமுதலாவதுடெஸ்ட்ஆட்டம்நடைபெற்ற புனே, மூன்றாவது ஆட்டம் நடைபெற்றுவரும் ராஞ்சி, நான்காவது ஆட்டம் நடைபெறவுள்ளதர்மசாலா ஆடுகளங்களில் இம்முறையேமுதல்முறையாகடெஸ்ட்ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் நடைபெற்ற பெங்களூரில் மட்டுமே இந்திய அணிக்கு மிகையான பழக்கமுள்ளது. இதில் இந்தியா வென்றது. ஏனையஆட்டங்களில்இந்தியாவின்நிலையும் கிட்டத்தட்ட ஆஸ்திரேலியாவைப் போன்றதே.



# வயதுக்கு வந்துள்ளது பங்களாதேஷ்

டெஸ்ட் ஆட்டங்களில் சிறந்த பெறுபேறை வெளிப்படுத்த தான் இன்னும் கத்துக்குட்டிஅணியல்லமுதிர்ச்சியடைந்தஅணிஎன்பதைசொல்லாமல்சொல்லி வருகிறது பங்களாதேஷ் அணி.

கடந்த 2000 ஆம் ஆண்டு பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்தைக் கொடுத்தது பன்னாட்டுகிரிக்கெட்சபை. இலங்கைக்குஎதிராகதற்போதுநடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டம் பங்களாதேஷ் அணியின் 100 ஆவது ஆட்டமாகும்.

முடிவடைந்த99ஆட்டங்களில்76ஆட்டங்கள்பங்களாதேஷின்தோல்வியுடனேயே முடிவுகண்டன. 8 ஆட்டங்களில் வெற்றியும், 15 ஆட்டங்களில் சமநிலையும் கண்டுள்ளது. எந்த அணியும் தனது முதல் 100 ஆட்டங்களில் இந்த அளவுக்கு தோல்வியடைந்ததில்லை. நியூசிலாந்து அணி தனது முதல் 100 ஆட்டங்களில் 7 ஆட்டங்களில்தான் வென்றிருந்தது. ஆனால் அந்த அணி 45 ஆட்டங்களை சமநிலையில் முடித்திருந்தது.

பங்களாதேஷ் அணி 2001 ஆம் ஆண்டுமுதல் 2004 ஆம் ஆண்டுவரையான காலகட்டங்களில் தொடர்ச்சியாக 21 ஆட்டங்களில் தோல்விகண்டது. இவ்வாறு தொடர்தோல்வியும் வேறெந்த அணியும்சந்தித்ததில்லை. இதனால் அக்காலத்தில் பங்களாதேஷுக்கு டெஸ்ட் அந்தஸ்தைக் கொடுத்திருக்கக்கூடாது என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் படிப்படியாக வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கிய பங்களாதேஷ் தற்போதுடெஸ்ட்ஆட்டங்களிலும்தான்வயதுக்குவந்த அணி என்பதை நிருபிக்கத் தொடங்கியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிராக கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் பங்களாதேஷில் நடைபெற்ற தொடரை 1:1 என்று சமன்செய்தது அந்த அணி. இந்தத் தொடரில் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து பங்களாதேஷை வழித்துத் துடைக்கும் என்று எதிர்பார்க்கையில் அந்த எண்ணங்களை, எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கியது பங்களாதேஷின் இளம் படை.

கடந்த 4 டெஸ்ட் ஆட்டங்களில் பங்களாதேஷ் அணி முழுமையாக 5 நாள்களிலும் விளையாடி முடித்துள்ளது. இதில் இலங்கைக்கு எதிராக அண்மையில் காலியில் முடிவடைந்த காலி ஆட்டமும் உள்ளடங்குகிறது. காலிமைதானம் இலங்கையின் கோட்டை என்று வர்ணிக்கப்படுகிறது. இங்கு இலங்கையை வீழ்த்துவதென்பது மிகக் கடினம் குறிப்பாக ஆட்டம் முழுமையாக 5 நாள்கள் வரை விளையாடப்படுவதென்பது எப்போதாவது அரிதிலும் அரிதாக நடப்பது. ஆனால் இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ்; அணி முழுமையாகத் தாக்குப்பிடித்து. இலங்கை வென்றிருந்தாலும் பங்களாதேஷின் இந்தப் போராட்டத்தால் இலங்கையின் வெற்றி கொண்டாடக்கூடிய வகையில் அமையவில்லை. தற்போது நடைபெற்றுவரும் தனது 100 ஆவது டெஸ்ட் ஆட்டத்திலும் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில்முன்னிலைபெற்றுள்ளது. மொத்தத்தில் சொல்லிக்கொள்ளும் படியான மிகப்பெரிய வெற்றிகளை பங்களாதேஷ் குவிக்காவிட்டாலும் அந்த அணி டெஸ்ட்டில் அடுத்தகட்டத்துக்குசென்றுவிட்டது என்பதுநிதர்சனம். கொண்டாடுவோம் ஏனெனில் வயதுக்குவந்துவிட்டது பங்களாதேஷ்.



இந்தியா -ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில்நடைபெற்றுவரும்மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்று முன்தினம் இரண்டாம் நாளில் யாதவ் வீசிய வேகப்பந்தை தடுத்தாடும் போது மக்ஸ்வெலின் துடுப்புமட்டை பாதியாக உடைந்து சில மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்று விழுந்தது.



# ஐ. பி. எல். தொடரில் ஹெல்மட்டில் கமரா

நடப்பு வருட ஐ. பி. எல். தொடரில் துடுப்பாட்ட வீரர்கள் கமராவுடன் இணைந்த தலைக்கவசத்தை அணிந்து விளையாடும் திட்டத்தை அறிமுகப்படுத்த இருப்பதாக ஐ. பி. எல். நிர்வாகம் அறிவித்தது.

நடப்புவருட ஐ. பி. எல். தொடர் அடுத்தமாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகிநடைபெறவுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஐ. பி. எல். தொடரில் ஏதேனும் ஒரு திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்படும்.

கடந்த வருடம் ரண் அவுட்களை ரசிகர்கள் கணிக்கக்கூடிய வகையில் திட்டமொன்று அறிமுகப்படுத்தியிருந்தது. நடப்பு வருடம் கமராவுடன் கூடிய தலைக்கவசத்தை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது

# சிதைக்கப்படும் சிறுசுகள்

சிரியாவில் போரினால் ஏற்படும் அச்சம், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மை, மோசமான சூழலில் கடினமான வேலைகளைச் செய்தாக வேண்டிய நிலை, பெரியவர்களின் கடுகடுப்பு, பசி தாகம் உடல் வலி ஆகியவற்றுக்கு இடையிலும் வேலை செய்தாக வேண்டிய கட்டாயம், தண்டனைக்கு ஆளாகுதல், பட்டினி கிடக்க நேர்தல் என்று பலவித துயரங்களுக்கும் ஆளாகிறார்கள் குழந்தைகள்!

நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் பங்கேற்கும் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உடல் உறுப்புகளை இழந்து முடமாவோர் எண்ணிக்கையும், இறப்போர் எண்ணிக்கையும்கூட அதிகரித்து வருகிறது. ஏழு வயது நிரம்பிய சிறுவன்கூட போர் நடக்கும் களத்தின் முன் வரிசைக்கு அனுப்பப்படுகிறான். சிறைக் காவலாளியாக, பிடிபடும் எதிரிகளை அருகிலிருந்து கொல்பவனாக, தற்கொலைப்படை வீரனாக, உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு எதிரிகளை நோக்கிப் பாய்பவனாகப் பயன்படுத்தப்படுகிறான்.

2011இல் தொடங்கிய சிறார்களைப் போரில் ஈடுபடுத்தும் போக்கு உச்சத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கமான 'யுனிசெஃப்' இது தொடர்பான அறிக்கையைத் தயாரித்திருக்கிறது. இந்த அறிக்கை, ஆதாரபூர்வமாகக் கிடைக்கும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டும்தான் எண்ணிக்கைகளைச் சேர்த்துக்கொள்கிறது. இந்த அறிக்கையில் உள்ளதைப் போல பல மடங்கு எண்ணிக்கையில் சிறார்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்:



2016இல் மட்டும் 652 குழந்தைகள் போரில் கொல்லப்பட்டுள்ளனர். இது அதற்கு முந்தைய ஆண்டைவிட 20 வீதம் அதிகம். 2016இல் போரில் ஈடுபட 850 சிறார்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதற்கு முந்தைய ஆண்டு 331 பேர் தேர்வுசெய்யப்பட்டனர்.

### சிறார்களின் அவல நிலை

"சிரியாவில் சிறார்களின் நிலைமை படுமோசமாகிக் கொண்டிருக்கிறது. எல்லைச் சாவடிகளைக் காவல் காப்பது, கனரகத் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கையாள்வது, கைதிகளைக் காவல் காக்க சிறை வளாகத்தில் வேலை செய்வது என்று பலவற்றுக்கும் சிறார்கள்தான் பயன்படுத்தப்படுகின்றனர். பதின்ம வயதை எட்டிய சிறுவர்கள், தங்களைவிட வயது குறைந்த சிறுமிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துகின்றனர்" என்கிறார் யுனிசெஃப் அமைப்பின் பிராந்திய ஊடகத் தொடர்பாளர் ஜூலியட் தவ்மா. குழந்தைகளும், குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தினரும் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

'குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' என்ற அமைப்பினர் ஏராளமான சிறார்களை அணுகிப் பேட்டி கண்டனர். சிறார்களில் 70 வீதம் பேர் உளவியல்ரீதியாக நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர். போரில் ஏற்படும் காயம், நோய் காரணமாக உடலில் ஏற்படும் பாதிப்பும் சேர்ந்துகொள்கிறது.

இத்தகைய குழந்தைகள் இரவில் படுக்கையிலேயே சிறுநீர் கழிப்பது, பேசும் சக்தியை இழப்பது, திடீரென்று கோபப்பட்டு வன்முறையில் இறங்குவது, வசைபாடுவது ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். போரில் சிறு குழந்தைகளும் விடலைகளும் ஈடுபடுத்தப்படுவது சிரியாவின் 59 வீதம் பெரியவர் களுக்குத் தெரியும். காவல் சாவடிகளிலும் போர்ப் பாசறைகளிலும் சிறுவர்கள் வேலை செய்கிறார்கள் என்பதும் தெரியும்.


### 60 லட்சம் பேர் காத்திருப்பு

இப்போது 60 லட்சம் சிரிய சிறார்கள் மனிதாபிமான உதவிக்காகக் காத்திருக் கிறார்கள். 2012இல் இருந்ததைவிட இது 12 மடங்கு அதிகம். 28 லட்சம் குழந்தைகள் மீட்பு நிவாரணக் குழுக்களால்கூட நெருங்க முடியாத தொலைதூரங்களில் வசிக்கின்றனர். 3 லட்சம் குழந்தைகள் போரில் முற்றுகையிடப்பட்ட பகுதிகளிலேயே வாழ்கின்றனர். 23 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் துருக்கி, லெபனான், ஜோர்டான், எகிப்து, ஈராக் ஆகிய நாடுகளில் அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

சிரியாவில் இருந்தாலும் வெளிநாடுகளில் இருந்தாலும் பெற்றோரால் வேலைக்குப் போக முடியவில்லை என்பதால், சிறார்கள்தான் வேலைக்குச் செல்கின்றனர். குப்பை பொறுக்குவது, வாகனங்களைத் துடைத்துச் சுத்தம் செய்து தருவது, மர வேலை செய்வோருக்கு உதவுவது, சிகை திருத்தும் நிலையங்களில் வேலை செய்வது, ஹோட்டல்களில் உபசரிப்பு வேலையில் ஈடுபடுவது என்று ஊதியம் குறைந்த, ஆனால் கால வரம்பே இல்லாத வேலைகளில் ஈடுபடுகின்றனர். லெபனானில் இத்தகைய சிறுவர்கள் அன்றாடம் 10 மணி நேரம் வேலை செய்கின்றனர். சிலர் பிச்சை எடுக்கின்றனர். சிரியாவில் சுமார் 20 லட்சம் சிறார்கள் பள்ளிக்கூடத்துக்குப் போவதில்லை. பள்ளிக்கூடங்களில் மூன்றில் ஒரு பங்கு, மாணவர்கள் செல்லும் நிலையில் இல்லை.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 463




அனுப்புபவர் பெயர்:............................................
முழுமையான தபால் விலாசம்: ............................................
............................................
கையொப்பம்:............................................

### இடமிருந்து வலம்

1. தலை முதல் கால் வரை
7. ஒரு வகை வண்டினம்
8. மனம் சார்ந்த
9. (உணவு முதலியன) தயாரி
10. இராமனின் வனவாசத்தின்போது நட்புப் பூண்ட படகோட்டி
11. (சமையலின் போது) வரும் பக்குவமானநிலை
12. முடிந்த முடிவு
13. இல்லம்
15. ஒரு கறிவகை
16. உழவுக்குப் பயன்படும் உபகரணம்
17. நீருக்குள் ஆழ்ந்து விடாமல் இரு
18. கழுவு
19. உலகம்

### மேலிருந்து கீழ்

1. ஒரு வகைப் பயறு
2. கடுதாசி
3. சிரார்த்தம்
4. தோழமை
5. ஒரு வகை பாரம்பரிய விளையாட்டின் முதல் பாதி
6. யானையை வழிநடத்துவோன்
8. திக்கற்றவன்
10. சேஷ்டை
12. மரத்தாலான கரண்டி
13. கொலை / துக்கம்
14. தாமரை
15. வலு
16. ஒன்று சேர்
17. அதிகமாக

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 461 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) பாதசாரி (5) ஸ்ரீமதி (8) தயாரிக்க (9) கசை (10) யார் (11) தூவு (13) காய் (15) திகட்டு (16) மையம் (19) மமி (21)குர் ஆன் (23)கொண்டிரு

### மேலிருந்து கீழ்

(1) பாதயாத்திரை (2) தயார் (3) சாரி (4) ரிக் ஷா (6) மகவு (7) திசை (11)தூய்மை (12) திட்டு (14) கும்மி (17) யமன் (18) நார் (20)சாண் (21)குரு (22)ஆனி / ஆடி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 461இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கு. அர்ச்சனா,
5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**2 ஆம் பரிசு**
உ. துஷா,
இல.47/9 தாஸ் தோட்டம்,
நெளுக்குளம், வவுனியா.

**3 ஆம் பரிசு**
ஜெ. ஆன் றெஜி சம்சிகா,
சென்.மேரீஸ் வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு.

**4 ஆம் பரிசு**
சி. உமாசிவம்,
இல. 90, கற்குழி,
வவுனியா.

**5 ஆம் பரிசு**
த. நித்தியகலா,
களபாவோடை,
ஏழாலை மத்தி, ஏழாலை.

**பாராட்டுப் பெறுவோர்**

தேவிகா பத்மராசா,
மடுமாதா வீதி,
பெற்றா, மன்னார்.

செ. உதயன்,
பாசிக் நிறுவனம்,
முல்லைத்தீவு.

செல்வி தி. ஜயபாரதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.463
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(29.03.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.463 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.04.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 461 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**19.03.2017 முதல் 25.03.2017 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

கேது, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். சுபவிடயத்தில் எதிர் பார்த்த நல்ல முடிவு கிடைக்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் அலட்சிய மனப்பான்மையுடன் செயல்படுவர். நோய் தொந்தரவு குறையும். மனைவியின் அன்பு மனதிற்கு ஆறுதல் அளிக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணியாளர்கள், கடமையில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து வளர்ச்சி காண்பர்.

## இடபம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தர காத்திருக்கின்றன. வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். உடன் பிறந்தவர் உறுதுணையாக செயல்படுவர். வாகனப் பயணத்தால் நன்மை காண்பீர்கள். புத்திரர் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் அடைவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். தொழில் விடயமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரிடும். பணியாளர்களுக்கு, விரும்பிய சலுகை கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க வாய்ப்புண்டு. மாணவர்கள், பெற்றோருக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் படிப்பர்.

## மிதுனம்

சனி, ராகு, புதனால் அளப்பரிய நன்மை உண்டாகும். மனதில் தைரியம் மேலோங்கும். பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பிள்ளைகள் படிப்பு வேலைவாய்ப்பில் முன்னேற துணை நிற்பீர்கள். எதிர்ப்பு விலகி வாழ்வில் நன்மை அதிகரிக்கும். நண்பருடன் சுற்றுலா சென்று வருவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்றுக் கொள்வர். பெண்களுக்கு, தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் நன்மை அளிப்பர். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவது அவசியம். குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். வீடு வாகன வகையில் விழிப்புடன் இருப்பது அவசியம். புத்திரரின் குறையை சரிசெய்வதில் இதமான அணுகுமுறை தேவை. அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாகலாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள், பிறருக்காக பணம், நகை பொறுப்பு ஏற்பது கூடாது.

## சிங்கம்

புதன், குரு, சுக்கிரன் நற்பலன்களை வழங்குவர். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். தாய் வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். சுபவிடயத்தில் எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். குடும்பச் செலவுக்கு தேவையான பணம் தாராளமாக கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். உடல் நலனில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். லாபம் மிதமாக இருக்கும்.

## கன்னி

கேது, சந்திரன், சனீஸ்வரரால் நன்மை உண்டாகும். மனதில் தைரியம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் நடப்பர். பூர்வீக சொத்து மூலம் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த சலுகை விரைவில் கிடைக்கும். பெண்கள், குடும்பத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

ராகு, சூரியன், புதனால் நன்மை பெறுவீர்கள். தாமதித்த செயல் புதிய முயற்சியால் நிறைவேறும். சமூகத்தில் மதிப்பு உயரும். தம்பி, தங்கை உங்கள் சொல் கேட்டு நடப்பர். கடந்த கால உழைப்பின் பயன் வந்து சேரும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகை ஒவ்வொன்றாக கிடைக்கும். பெண்கள், குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## விருச்சிகம்

செவ்வாய், சுக்கிரன், குரு தாராள நற்பலன் தருவர். வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனப் பயணம் நன்மையளிக்கும். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பூர்வ சொத்து மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை முறியடித்து முன்னேறுவீர்கள். பெண்கள், வீட்டு உபயோகப்பொருள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள், திட்டமிட்டுப் படித்து முன்னேற்றம் காண்பர்.

## தனுசு

சூரியன், குரு, சுக்கிரன் கேது சகல வளமும் தருவர். திட்டங்கள் நல்லபடியாக நிறைவேறும். தாய்வழி உறவினர்களின் உதவி மனதிற்கு தெம்பளிக்கும். புத்திரர்களின் படிப்பு, வேலையில் மெதுவான முன்னேற்றமே இருக்கும். பகைவர்களால் கெடுசெயல் பலமிழக்கும். மனைவியின் அன்பில் நெகிழ்ந்து போவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் இருக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை தாமதமாகும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகசக்தி அதிகமாகி படிப்பில் முன்னேறுவர். மாணவர்கள், ஆசிரியர்களின் ஆலோசனைப்படி சிறப்பாகப் படிப்பர்.

## மகரம்

சனி, சூரியன், குரு, சுக்கிரன் அதிர்ஷ்ட பலன்களை வாரி வழங்குவர். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். புதிய முயற்சியில் வெற்றி உண்டாகும். வீண்செலவு இனி இருக்காது. பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றி மகிழ்வீர்கள். பொது விடயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். அலைச்சலால் அசதிக்கு ஆளாக நேரிடும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். பெண்கள், குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மாணவர்கள், பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

## கும்பம்

சந்திரன், செவ்வாய், சுக்கிரனால் நன்மை பெறுவீர்கள். மனம், உடலில் புத்துணர்வு மேலோங்கும். நண்பரின் உதவியால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தாயின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்வர். பூர்வீகச் சொத்து பிரச்னையில் சமரச தீர்வு கிடைக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், நிலுவைப்பணிகளை விரைந்து முடிப்பர். மாணவர் கள், படிப்பில் கூடுதல் அக்கறை தேவை. பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

## மீனம்

குரு, ராகு, சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் திறமையை பயன்படுத்தி வாழ்வில் வளர்ச்சி பெறுவர். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்தபடி பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, எதிர் பார்த்த கடனுதவி கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.




பன்னாலை சிவபூதராயர் ஆலய திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை ஆலய சபையினராலும், அறநெறிப் பாடசாலையாலும் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட சைவசமய கலாசார விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கல்விய மைச்சின் சமய விழுமியப் பிரிவு நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி பா.தனபாலன் மாண வர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-29)



மாதகல் சென் யோசப் மகா வித்தியாலய மாண வன் சி.யூட்டினோஜன் "போதையற்ற தேசம் படைப்போம்" என்ற பேச் சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள் ளார். பாடசாலையில் அதிபர் யோ.எ.பங்கிராஸ், உப அதிபர் மற்றும் பொறுப்பாசிரியருடன் குறித்த மாணவன் காணப்படுகிறார். (ஐ)





இலங்கையில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முதன்முறையாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஜப்பான் நாட்டு தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் இரண்டு வருடங்கள் கற்பிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், உப பீடாதிபதி பா.தனபாலன் ஆகியோருடன் ஜப்பான் நாட்டு தகவல் தொழில் நுட்ப நிபுணர்கள் காணப் படுகின்றனர். (ஐ-29)





ஆனைக்கோட்டை, உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலையின் இல்லமெய்வன்மை போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தி னராக வடமாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்துகொண்டு வெற்றிபெற்ற ம ாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.(ஐ)



வடமராட்சி, குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய் வன்மை போட்டியில் முதன்மை விருந்தி னராக வடமாகாண சபை உறுப்பினர் கே. தர்மலிங்கம் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றினார். (ஐ-173)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் பிராமண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவிகள் மற் றும் சுயதொழில் செய்வோர் ஆகியோருக்கான 4 துவிச்சக்கரவண்டிகளை அமைச்சரது அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (ஐ)





சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி ஆசிரியை செல்வி தர்மினி தர்மலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமை விருந்தி னராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தி னர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்த தாசனும். முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகமும் கலந்து கொண்டனர் . (ஐ-9)



தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர்.எம் கே..சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவன ஸ்தாபகரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்பு செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் கலந்துகொண்டதோடு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கிக் கௌரவித்தனர். (108)



உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் வருடாந்த வைபவம் அண்மையில் நடைபெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் என்.புவன் சிறிந்திரன் மங்கல விளக்கு ஏற்றுகிறார். அருகில் முதன்மை விருந்தினர் கலாநிதி க.சர்வேஸ்வரன் மற்றும் அதிபர், விருந்தினர்கள் காணப்படுகின்றனர்.





அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை அதிபர் ச.மனோகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக தீவகத்தின் ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் மற்றும் அருட்தந்தை டேவிட் அடிகளார் உட்பட மேலும் சிலர் கலந்துகொண்டனர். படங்களில் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டுவதையும் விருந்தினர்கள் போட்டிகளைப் பார்வையிடுவதையும், பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)



கோண்டாவில் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி கல்லூரியின் அதிபர் மோகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். இறுதியில் விருந்தினர்களால் போட்டியில் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்கான பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பெருமளவிலானோர் பங்கேற்றிருந்தனர். (10)



நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த தைப்பூச பொங்கல் விழா கவின்கலை மன்றத்தினர் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கவின்கலை மன்ற ஆசிரியர்களும், மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஐ)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் 2017ஆம் ஆண்டுக்கான கால்கோள்விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் தென்மராட்சி விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.நிருபராணி, பாடசாலையின் பழையமாணவரும், ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி வி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ஐ)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிலும் நிதானம் காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில்சீரானமுன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**இடபம்:** நீண்டநாள் பிரச்சினை மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு, சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள்,நிர்வாகத்தினரின்பாராட்டைப் பெறுவர்.

**கடகம்:** அனைவரின் அன்புக்குரியவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபார இலக்கு படிப்படியாக நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரமூல தனத் தேவைக்கு கடன் வாங்க நேரிடலாம். லாபம்சீராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** உலகநடப்புகளை ஆர்வத்துடன் அறிவீர்கள். தொழில், வியாபாரத்தில்வருமானம் பன்மடங்குஉயரும். பணியாளர்கள்சலுகை கிடைக்கப் பெறுவர். புதிய வீடு, வாகனம் வாங்கதிட்டமிடுவீர்கள்.

**துலாம்:** திறம்படசெயற்பட்டுவளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குவிரும்பிய் பணிமாற்றம் கிடைக்கும். நண்பர்களுடன் இனிய சந்திப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். பெண்கள்குடும்பத்துடன்விருந்து விழாவில் பங்கேற்பர்.

**தனுசு:** குடும்பத்தினரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பெண்கள் தாய்வீட்டினரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.

**மகரம்:** திறமையை வளர்த்துக் கொள்ள முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம்பன்மடங்குஉயரும். பணியாளர்கள் சுதந்திரஉணர்வுடன்பணியாற்றுவர். ஆன்மிகச்சுற்றுலா சென்றுவர திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** மனச்சாட்சிக்குஅதிகமுக்கியத்துவம் தருவீர்கள். திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால்லாபம்அதிகரிக்கும். உறவினர் எதிர்பார்த்த உதவியைச்செய்வீர்கள்.

**மீனம்:** வீண்பேச்சைத் தவிர்ப்பது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம்சீராகஇருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

## நடிப்பதற்காக தினமும் தேங்காய் உடைத்தார் கீர்த்தி



தனது தந்தையின் மனம் மாறி, என் படத்தில் நடிக்க அவர் சம்மதிக்கவேண்டும்என்று கீர்த்திசுரேஷ்தினமும் கடவுளுக்கு தேங்காய் உடைத்தாராம்.

கோலிவூட்டின்முன்னணி நடிகைகளில் ஒருவராக உள்ளவர் கீர்த்தி சுரேஷ். சூர்யா, கார்த்தி படங்கள் அவர் வசம் உள்ளன. தெலுங்கு திரையுலகிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

கீர்த்தியின் தாய் மேனகா ஒரு நடிகை, தந்தை சுரேஷ் மலையாள பட தயாரிப்பாளர் என்பது அனைவரும் அறிந்ததே.

கீர்த்தி நடிகையாகப் போகிறேன் என்று கூறியதற்கு அவரது பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். சினிமா பழைய மாதிரி இல்லையம்மா என்று கூறியுள்ளனர். இதை மேனகாவே தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். தனது தந்தையின் மனம் மாறித் தன்னை நடிக்க அனுமதிக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டு கீர்த்தி தினமும் தேங்காய் உடைத்தது மேனகாவுக்கு பிறகுதான் தெரிய வந்துள்ளது.

நான்மட்டும்வேறுவீட்டில்மகளாகபிறந்திருந்தால் இந்த நேரம் நடிகையாகியிருப்பேன் தெரியுமா என்று கீர்த்தி தனது சகோதரியிடம் கூறி கவலைப் பட்டாராம். நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த கீர்த்திக்கு பிரியதர்ஷன்தான் தனது படத்தில் நடிக்கவாய்ப்பு கொடுத்தார் என்று மேனகா தெரிவித்தார்.



ஒரு ஆண் கொட்டும் மழையில் நனைந்தபடி நடந்து வந்து கொண்டிருந்தார்.
அதைப் பார்த்த அழகான ஒரு பெண்: ``நீங்க என்னோட குடைக்குள்ள வந்தாலென்ன?
ஆண்: ``வேண்டாம். நன்றி சகோதரி..'' அப்படினு சொல்லிட்டு அவன் நடந்து போய்ட்டான்...
கருத்து...
...
கருத்தும் இல்லை. குருத்தும் ஒண்ணுமில்லை. அவனுக்குப் பின்னால அவன் மனைவி



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 4 | | 6 | | | 5 |
| | 8 | | | | | 9 | 7 | 6 |
| 5 | | 6 | 1 | | | | 4 | |
| | | 3 | 2 | | | | | 7 |
| | 5 | | | | | | 9 | |
| 9 | | | | | 1 | 5 | | |
| | 4 | | | | 3 | 7 | | |
| | | 8 | | | | | 5 | |
| 2 | | | 9 | | 4 | | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை






# பச்சை மிளகாய் குழம்பு

**தேவையான பொருள்கள் :**

- பச்சைமிளகாய் –15
- குடமிளகாய் – 1
- சின்ன வெங்காயம் –15
- தக்காளி– 1
- உளுந்தம் பருப்பு –அரைக்கரண்டி
- புளி –சிறிய உருண்டை
- வெந்தயம் – 1 கரண்டி
- சீரகம் –1 கரண்டி
- எண்ணெய் –தேவையான அளவு
- உப்பு –தேவையான அளவு



**செய்முறை :** பச்சை மிளகாய் மற்றும் குடமிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். புளியை தண்ணீர் ஊற்றி கரைத்து கொள்ளவும். வெங்காயம் மற்றும் தக்காளியை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, வெந்தயம், சீரகம் போட்டு தாளித்த பின் வெங்காயம் சேர்த்து நன்றாக வதக்கவும். வெங்காயம் நன்றாக வதங்கியதும் பச்சை மிளகாய் மற்றும் குட மிளகாய் சேர்த்து நன்றாக வதக்கவும்.

அடுத்து அதில் தக்காளியை சேர்த்து வதக்கி தேவையான அளவு உப்பை போடவும்.

பிறகு கரைத்து வைத்துள்ள புளிக்கரைசலை ஊற்றி சிறிது நேரம் கொதிக்கவிடவும். மிளகாய் நன்றாக வெந்து எண்ணெய் பிரிந்து வரும் போது இறக்கி பரிமாறவும்.

காரசாரமான பச்சை மிளகாய் குழம்பு தயார். இதை அனைத்து விதமான சோற்றோ டும் பரிமாற சுவையாக இருக்கும்.






ஆயிரம் உறவுகள் இருந்தாலும்...
நீ அன்னையை மட்டும் இழந்தால்...,
100 சதவீதம் நீ அநாதை தான்...



உடற்பயிற்சி செய்தால் உடம்பு
குறையுமென்று சொன்னாங்க...



அதுதான் குடும்பத்தோட
கிளம்பிவிட்டோம்...

தன் உழைப்பு திருடப்படுவது
தெரிந்தும் விடாமல் உழைத்துக்
கொண்டிருப்பவர்கள்



தேனியும்,
விவசாயியும்
தான்




சாத்தான்

எவ்வளவோ
கட்டுப்படுத்தி
வைத்திருந்த ஒரு
சோகத்தை ஓர்
உண்மையான
ஆறுதல் வெடித்து
அழவைத்து
விடுகிறது!



## இது புதுசு

ஆண்களுக்கான காற்சட்டைதற்பொழுது விற்பனையில் உள்ளது. இந்தக்காற்சட்டைகள் வரிவடிவிலான அமைப்பையுடையனவாக காணப்படுகின்றன. பல்வேறு நிறங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் இவை 800ரூபா தொடக்கம் 900ஆயிரம்ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

பங்குனி-07
திங்கட்கிழமை
-20.03.2017
திதி: ஸப்தமி
கா.07.08
நட்சத்திரம்: கேட்டை
கா.07.58
சுபநேரம்:
12.18-01.48 வரை
ராகுகாலம்:
07.48-09.18 வரை

# குருநகர் புதுமை மாதா சொரூபத்தை கோவாவில் வைத்து யாழ்ப்பாணப் பட்டணத்து புதுமை மாதா என விழாக்கொண்டாடுகின்றனர்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் கோவா நகருக்கு சென்ற போது கோவா ஆயர் இல்லத்தில் இருக்கும் யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை அன்புடன் தரிசித்து முத்திசெய்து பாசத்துடன் அரவணைத்து படம் எடுத்துக்கொண்டார். யாழ். ஆயர் குருநகர் புதுமைமாதா சொரூபத்தை அன்போடு அணைத்து வைத்திருக்கும் படமும் செய்தியும் ஊடகங்களிலும் இணையத்தளத்திலும் சமூக வலைத்தளங்களிலும் குறிப்பாக முகநூலிலும் வெளிவந்த போது கத்தோலிக்க உலகம் பரபரப்பானது. அவ்விடயம் பற்றியே இவ்வாக்கம் அலசுகிறது.



### குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவாவில் இருப்பது பலரும் அறியாத ஓர் உண்மையாகும்

யாழ். ஆயர் குருநகர் புதுமைமாதா சொரூபத்தை அன்போடு அணைத்து வைத்திருக்கும் படமும் செய்தியும் வெளியானவுடன் பலர் தொலைபேசி மூலமும் மின் அஞ்சல் மூலமும் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக பல கேள்வி எழுப்பியுள்ளனர். எப்படி குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவாவுக்குச் சென்றது. எப்போது கொண்டு செல்லப்பட்டது. அப்படியாயின் அது திருப்பிக் கொண்டுவரப்படுமா? யாழ். ஆயர் அது தொடர்பான நடவடிக்கைக்குத்தான் கோவா நகருக்கு பயணம் மேற்கொண்டாரா எனக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றனர். மேலும் முழு உண்மையையும் வெளிக் கொணருங்கள் என அழைப்பும் விடுத்தனர்.

### இணையத்தில் இந்தச் செய்தியைப் படித்த கனடாவில் இருக்கும் அன்ரன் பிலிப் சின்னராசா

இணையத்தில் இந்தச் செய்தியைப் படித்த கனடாவில் இருக்கும் அன்ரன் பிலிப் சின்னராசா ஒரு பெரிய விளக்க கட்டுரையை அனுப்பியுள்ளார். யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவா நகரில் இருப்பது பலரும் அறியாத ஓர் உண்மையாகும். அது பற்றி விளக்கங்களைக் கொண்டதாக அன்ரன் பிலிப் சின்னராசா அனுப்பிய கட்டுரை அமைந்துள்ளது. எம்மிடம் பல கேள்விகளை ஒரே நேரத்தில் அடுக்கிய அனைவர்க்கும் உதயன் பத்திரிகையின் ஞாயிறு கத்தோலிக்க இதழில் என்ன நடந்து என்ற உண்மையை மேற்படி கட்டுரையை ஆதாரமாக வைத்து விளக்கமாக வெளிக்கொணர்வோம் என உறுதி கூறியுள்ளோம்.

### யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையிடம் கேட்டபோது

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை தொடர்பு கொண்டு கேட்ட போது குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவா ஆயர் இல்லத்தில் இருக்கிறது. இதனை நீண்ட காலத்திற்கு முன்பே அறிந்திருந்த நாம் கோவா நகருக்குச் சென்றபோது குருநகர் புதுமைமாதா சொரூபத்தை பார்வை இட்டு படம் எடுத்துக் கொண்டோம். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை கோவாவில் வைத்து யாழ்ப்பாணப் பட்டணத்து புதுமை மாதா என மே மாதத்தில் விழாக்கொண்டாடுகின்றனர். அந்தத் திருவிழாவுக்கு மட்டும் இந்த சொரூபம் ஆயர் இல்லத்தில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்டாலும் திருவிழா முடிந்தவுடன் பத்திரமாக ஆயர் இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றார்.

> சிற்பி, அன்னையின் திருவுருவத்தை செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் வேளையில் கைகளை உருவாக்கி பாலன் இயேசுவை செதுக்க முன்னரே சில புதுமைகள் இடம்பெறத் தொடங்கி விட்டன. பலர் இந்தச் செய்தியைக் கேள்வியுற்று சிற்பி அன்னக்குட்டி வீட்டுக்கே வந்து மரியன்னையின் திருவுருவத்தின் முன்பிருந்து செபிக்கத் தொடங்கிவிட்டனர்.

### யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை திரும்பவும் இங்கு கொண்டு வரும் நோக்கம் இருக்கிறதா

யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை திரும்பவும் இங்கு கொண்டு வரும் நோக்கம் இருக்கிறதா? அதன் முதற் கட்டம் தான் இந்தப் பயணத்தின் நோக்கமா? இது பற்றிப் பலர் கேள்வி எழுப்புகின்றனரே? என்று கேட்டபோது கோவா ஆயரை இந்தியா புனே நகரில் குருத்துவக்கல்வி கற்ற காலம் முதல் அறிந்திருக்கிறேன். அவரிடம் இது பற்றியும் கேட்டோம். யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபம் அரசுக்கு உரிய சொத்தாகவே உள்ளது. இருப்பினும் மாற்றுத்திட்டங்கள் பற்றி கலந்தாலோசித்துள்ளோம் என்றார். மேலும் சற்று விளக்குங்கள் என்று கேட்டபோது இது ஓர் உணர்வுபூர்வமான விடயம். நுட்பமாகக் கையாள வேண்டும். முழு விடயங்களையும் விவரங்களையும் இப்போது வெளியிடமுடியாது. நல்லது நடக்கும் என நம்புவோம். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை திரும்பக் கொண்டுவர முயற்சிப்போம் என்றார்.

மேலும் யாழ். ஆயர் தெரிவிக்கும் போது கோவாவில் இருந்து புனிதர் யோசவ்வாஸ் முனிந்திரரின் இரண்டு சொரூபங்களை கொண்டு வந்திருக்கிறோம். அதில் ஒன்று சில்லாலையில் அமைக்கப்டுகின்ற புனிதர் யோசவ்வாஸ் முனிந்திரரின் யாழ். மறைமாவட்ட யாத்திரைத்தலத்துக்கு கொடுக்கப் படும். மற்றது ஆயரின் அறையில் வைக்கப்படும் என்றார்.

### கோவாவில் குடிகொண்டிருக்கும் புதுமை மாதா யாழ்ப்பாணப் பட்டணத்து புதுமை மாதா என அழைக்கப்படுகின்றார்

இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பாக 1614 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கீசரின் ஆட்சியில் இருந்த காலம். யாழ்ப்பாணப் பட்டணத்தில் வெற்றியின் மாதா ஆலயத்தின் பங்குத்தந்தையாக இருந்தவர் பிரான்சிஸ்க்கன் சபையை சார்ந்த பிரான்சிஸ்கோ டூ சான்ரோ அன்ரோனியோ எனும் துறவியாவார். இவர் இவ்வாலயத்தில் தூய அந்தோனியாரின் சொரூபத்தையும் மக்களின் வணக்கத்துக்காக வைக்க முடிவு செய்து கேரளாவிலுள்ள கொச்சின் நகரத்திலிருந்து ஒரு மரத்தைக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த அன்னக்குட்டி என அழைக்கப்படுகின்ற ஓர் உள்ளூர் சிற்பியிடம் இத் தூயவரின் திருவுருவத்தை உருவாக்கும் பணியை ஒப்படைத்தார். சில நாள்களின் பின்னர் தூய அந்தோனியாரின் திருவுருவத்துக்குப் பதிலாக தூய மரியன்னையின் திருவுருவத்தை செதுக்குமாறு அன்னக்குட்டி, பிரான்சிஸ்கோ டூ சான்ரோ அன்ரோனியோ எனும் துறவியால் பணிக்கப்பட்டார். பாலன் இயேசுவை கையில் ஏந்தியவாறு மரியன்னையின் திரு வுருவத்தை உருவாக்க முனைந்தார் சிற்பியான அன்னக்குட்டி.

### சிற்பி அன்னக்குட்டி அன்னையின் திருவுருவத்தை செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் போதே புதுமைகள்

சிற்பி, அன்னையின் திருவுருவத்தை செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் வேளையில் கைகளை உருவாக்கி பாலன் இயேசுவை செதுக்க முன்னரே சில புதுமைகள் இடம்பெறத் தொடங்கி விட்டன. பலர் இந்தச் செய்தியைக் கேள்வியுற்று சிற்பி அன்னக்குட்டி வீட்டுக்கே வந்து மரியன்னையின் திருவுருவத்தின் முன்பிருந்து செபிக்கத் தொடங்கிவிட்டனர்.

1614ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அன்னக்குட்டி வீட்டுக்கு கத்தோலிக்க மறையைச் சாராத என்காபேயோ எனும் நண்பர் ஒருவர் வந்து மிகவும் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டிருந்தார். அவ்வேளையில், என்காபேயோ தற்செயலாக முழுமையாக செதுக்கி முடிக்கப்படாமல் இருந்த திருஉருவத்தின் மேல் அமர்ந்து விட்டார். அவர் இருந்த கணமே தூக்கியெறியப்பட்டார். இந்த நிகழ்வு நடைபெற்ற பொழுது இன்னும் நண்பர்கள் அங்கே இருந்துள்ளனர். ஏன்காபேயோவுக்கு இவ்வாறு தூக்கியெறியப்பட்டது ஓர் அவமானமாக எண்ணி அங்கேயிருந்தவர்களின் ஏளனத்துக்கு தான் உள்ளாகவில்லை என நிரூபிப்பதற்கு மீண்டும் ஒருமுறை அத்திருவுருவத்தின் மேல் இருக்க முனைந்துள்ளார். இத்தடவை இன்னும் மோசமாக தூக்கியெறியப்பட்டு மயங்கியே விட்டார். அவருடைய உடுப்புகளும் அவருடம்பில் கிழித்தெறியப்பட்டுக் காணப்பட்டன.

### சில நாள்களின் பின்னர் இதே போன்றதொரு இன்னோர் நிகழ்வு

சில நாள்களின் பின்னர் இதே போன்ற இன்னோர் நிகழ்வு இடம்பெற்றது. சிற்பி அன்னக்குட்டியின் மகள் அஞ்சியா வெற்றிலை போன்ற ஒன்றை நன்றாக வாயினுள் வைத்துமென்று விட்டு துப்பியபொழுது எச்சில்துளிகள் சில இந்தத் திரு உருவத்தின் மேல் விழுந்துவிட்டன. சிற்பி அன்னக்குட்டியோ தன் நண்பன் என்காபேயோவுக்கு நடந்ததை எண்ணி மிகவும் அஞ்சியவராக, தன் மகளை உடனே கண்டித்து உடனடியாக அத்திருவுருவத்தை சுத்தம் செய்யுமாறு பணித்தார். மகள் அஞ்சியா திருவுருவத்தை அணுதி துடைக்க முனைந்த பொழுது நிலத்தில் தூக்கியெறியப்பட்டு மயக்கமடைந்தாள்.

### இவ்விரு நிகழ்வுகளும் காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவல்

இவ்விரு நிகழ்வுகளும் காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவி, ஏராளமான மக்களும் மரியன்னையின் பக்கதர்களும் சிற்பி அன்னக்குட்டி வீட்டுக்குப் படையெடுத்தனர். அங்கே பல புதுமைகள் இடம்பெறத் தொடங்கின. முடக்குவாதத்தால் நடக்க முடியாமல் இருந்த ஒருவர் இவ் மரியன்னையின் திருஉருவத்தின் முன்னால் செபித்த பின்னர் முழுமையாக சுகம் பெற்று நடந்தார்.

ஓர் ஆலயத்தில் பணியாளராக வேலை பார்த்த ஒருவர் தூய தோமையரைப்போல் இந்த மரியன்னையின் திருவுருவத்தால் நிகழ்ந்து வரும் புதுமைகள் ஒன்றையும் நம்புவதற்கு தயாராகவில்லையென்றும் தனக்கு நல்ல ஆரோக்கியமும் நன்றாக நடப்பதற்கு பலமும் கிடைத்தால் மட்டுமே தான் அதை நம்புவார் என்று கூறிவந்தார். அவர் அன்னையை தேடி வந்த போது அவர் குணம் பெற்றார், ஆனால் அவர் நம்பிக்கையின்மை காரணமாக அவருடைய சுகம் படிப்படியாகவே நிகழ்ந்தது.

### மரியன்னையின் திருவுருவத்தை தனது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லுமாறு அன்னக்குட்டி வேண்டல்

இப்பொழுது எல்லோரும் இந்த மரியன்னையின் திருவுருவத்தைப்பற்றியும் அதனால் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அற்புதங்களைப் பற்றியும் பேசுவதே கதையாக இருந்தது. சிற்பி அன்னக்குட்டியோ இடம்பெற்றுக் கொண்டிருக்கும் புதுமைகளைப்பற்றி ஆச்சரியப்பட்டு, மரியன்னையின் திருவுருவத்தை தனது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லுமாறு ஆலய அதிகாரிகளிடம் பணிவாக கேட்டார். ஆலய அதிகாரிகளும் அன்னக்குட்டியின் வேண்டுகோளை ஏற்று அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு அன்னையின் திருவுருவத்தை ஆலயத்துக்கு கொண்டுவரத் திட்டங்களைத் தீட்டினர்.

1614ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி, சிற்பி அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து ஆடம்பரமாக மிகவும் சிறப்பான முறையில் வெற்றிமய மாதாவின் ஆலயத்துக்கு பவனியாக கொண்டு செல்லப்பட்டது. பவனியில் மரியன்னையின் திருவுருவம் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து, வெற்றிமய அன்னையின் பக்தர்களால் சூழப்பட்டு, குருக்களும், துறவியர்களும் மிகச்சிறப்பான திருவுடைகளை அணிந்து இரு வரிசையில் வர, பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது.



### சங்கிலி அரசன் தனது படைவீரர்களை பவனி செல்லும் பாதையில் நிறுத்தி இடையூறு

பவனி ஆரம்பமாக இருக்கும் வேளை, சங்கிலி அரசன் தனது படைவீரர்களை பவனி செல்லும் பாதையில் நிறுத்தி பவனி செல்லாதவாறு இடையூறு ஏற்படுத்துவதாக செய்தி ஒன்று வந்தது. இதைக் கேள்வியுற்ற மக்கள் மிகவும் துக்கமாகவும், சங்கிலி அரசன் மேல் கோபமும் கொண்டனர். ஆனால் துறவிகளும் குருக்களும் பொறுமையைக் கடைப்பிடித்து, இரண்டு போர்த்துக்கேயர்களை தங்களின் பிரதிநிதிகளாக சங்கிலி அரசனிடம் அனுப்பி, இப்பவனியின் முக்கியத்துவத்தையும் காரணத்தையும் தெரிவித்தார்கள். சங்கிலி அரசனின் முடிவு என்ன?

(அடுத்த வாரம் தொடரும்)

## அரசமைப்பு...

கண்டி கம்பொல வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் இரண்டு அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் ஒன்றிலும் தமிழ் மக்களின் பங்கை உள்ளீர்க்க மறுக்கப்பட்டது. எவ்வாறு இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் உருவாகும்? பண்டாரநாயக்க அம்மையார் அரசமைப்பை உருவாக்கியபோது அதனை தமிழ் மக்கள் புறக்கணித்தார்கள். ஜே.ஆர் ஜயவர்தன அரசமைப்பை உருவாக்கியபோதும் தமிழ்க் கட்சிகள் அதனையும் புறக்கணித்தன. அரசமைப்புக்குள் வலுக்கட்டாயமாக உள்ளீர்க்க முடியாது.

வரலாற்றில் முதன்முறையாக தலைமை அமைச்சர், அரச தலைவர் தலைமையில் புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. தமிழ்க் கட்சிகள் முதற்றடவையாக பேச்சுக்களில் கலந்து கொள்கின்றன. இது மிகவும் பொற்கால சந்தர்ப்பமாகும். தனி ஆட்சிக் கோரிக்கையை அவர்கள் கைவிட்டுள்ளனர்.

13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு கோரிக்கையை முன்வைக் கின்றனர். இந்த 13 ஆவது திருத்தம் போதுமானதல்ல என்று யார் முதலில் கூறியது? போர் இடம்பெற்ற காலத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்திய தலைமை அமைச்சருக்கும், ஐக்கிய நாடுகளுக்கும் இந்த வாக்குறுதியை அளித்திருந்தார். இன்று போர் முடிந்துவிட்டது. 13 பிளஸ் எங்கே எனக் கேட்டபோது, அதனை தன்னால் செய்ய முடியாது என்றும் நாடாளுமன்றமே அதற்குப் பொறுப்பு எனவும் மகிந்த ராஜபக்ச கூறி கைவிரித்துவிட்டார். மகிந்த ராஜபக்ச அன்று கூறியதையே நாடாளுமன்றத்தின் ஊடாக தலைமை அமைச்சர் இன்று செய்கின்றார். அதற்கு மகிந்த ராஜபக்ச ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது என்றார். (த-5)

## படையினரைத்...

முன்தினம் மாலை நடைபெற்ற புத்தக வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினரைக் குற்றப்பத்திரம் சமர்ப்பித்து நீதிமன்றில் முற்படுத்த தாம் ஒருபோதும் தயாரில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த மாதம் 4 ஆம் திகதி பலாலியில் வைத்துத் தெரிவித்திருந்த நிலையிலேயே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதாகப் பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான தரப்பினர் நாடு பிளவுபடுகின்றது, நாட்டைத் துண்டாடுகின்றனர், சிங்கள இனத்தை இல்லாதொழிக்கின்றனர் என்று பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு இன வாதத்தையும் மதவாதத்தையும் பரப்புவதன் ஊடாக அரசியலைச் செய்து வருகின்றனர்.

ஆனால் இவர்களே ஜெனிவாவுக்குச் சென்று வெள்ளைக்கொடி விவகாரத்துக்கு வழக்குத் தொடர இணங்கியதுடன், அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்குச் சென்று போர்க் குற்றங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் படையினருக்கு எதிராக வழக்குத் தொடர்வதாகவும் வாக்குறுதி வழங்கினர்.

தற்போதைய கூட்டு அரசு நாட்டின் மீதும் பாதுகாப்புத் தரப்பினர் மீதும் கடந்த கால ஆட்சியாளர்கள் காரணமாகப் பன்னாட்டு அரங்கில் ஏற்பட்டிருந்த களங்கத்தையும் நெருக்கடிகளையும் அகற்றியுள்ளது. நாட்டின் படையினரை எந்தவொரு நீதிமன்றிலும் நிறுத்த எமது அரசு இடமளிக்காது என்றார். (த-5)

## தீர்மானத்தை...

பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மையைப் -பெறுபேற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை அமைக்கமாட்டோம் என்று இலங்கை அரச தலைவர்கள் குறிப்பாக அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் கருத்துத் தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு சொல்வதைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஜெனிவாக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கை அரசின் அமைச்சர்கள் மாறி மாறிக் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்தமையினால்தான் வவுனியாவில் நாம் கடந்த வாரம் அவசர கூட்டத்தை நடத்தினோம். அதில் நாம் எடுத்த முடிவில் மாற்றமில்லை.

2015 ஆம் ஆண்டு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொண்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அது நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கும் வழி நடத்துவதற்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது அலுவலகம் இங்கே அமைக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசு இதற்கு ஒத்துழைக்கவில்லையாயின், பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மை - பெறுபேறு கிடைக்கப்பெறுவதற்குரிய நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்னெடுக்க வேண்டும். எமது இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றார். (த-5)

## 11 லட்சம்...

மேற்படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

'யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இரண்டு கட்டடங்களை ஈ.பி.டி.பியினர் பயன்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் பஸ்தியன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள கட்டடத்தையும், யாழ்ப்பாணம் முதன்மை தபாலகத்துக்கு எதிரில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் உள்ள ஓர் கடையையுமே, ஈ.பி.டி.பியினர் வருடக் கணக்கில் பயன்படுத்தியுள்ளனர். இந்தக் கடைகளுக்கான வாடகையும் சந்தைப் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதிக்கே வழங்கப்பட்டுள்ளது' என்று கூட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனை யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதியும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இது தொடர்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆவணங்களைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். பணம் செலுத்தியிருக்கின்றோம். கடன் என்று இல்லை. நான் விசாரித்துப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும் என்று பதிலளித்தார். (த-5-101)

## கிழக்கை...

காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அம்பாறை மாவட்டத்திலும் கடந்த புதன் கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 9 வயதுச் சிறுமி சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு உயிரிழந்துள்ளார். டெங்கினால் மட்டக்களப்பில் ஏற்பட்ட முதலாவது உயிரிழப்பு இதுவாகும்.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் இதுவரை 40 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த-5-46)

## ஐ.நாவில்...

தறியும் நடவடிக்கை 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவு பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் போர்க்குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. இதன் பரிந்துரைகளும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் இந்த அறிக்கை மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ளது. ஜெனிவாவில் இடம்பெறும் இந்த அமர்வில், நல்லிணக்கக் கலந்தாலோசனைச் செயலணியின் செயலர் பாக்கியசோதி சரவணமுத்துவும் கலந்து கொள்ளவுள்ளார். (த-5)

## ரூபா...

தியான நகைகளையும் மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், வெள்ளாந்தெருப் பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய மாணவன், மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஆகிய இருவரும் அவரவர் வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். தென்னிலங்கையைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

13 வயதுச் சிறுவனைப் பயன்படுத்தி வீடுகளின் ஜன்னல் ஊடாக இவர்கள் பொருள்களைத் திருடியுள்ளனர் என்றும், தென்னிலங்கை நபர் மோட்டார் சைக்கிளில் சென்று வீதியில் நடமாடும் பெண்களின் நகைகளைக் கொள்ளையடித்து வந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நடத்திய விசாரணைகளை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், விலை உயர்ந்த அலைபேசிகள் இரண்டு, மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டன. விசாரணைகளின் பின்னர் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## இந்திய...

னார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

தமிழகத்தைச் சேர்ந்த அவர் பருத்தித்துறையில் சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று வயிற்றுவலி ஏற்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைக்கு அதிகாரிகளிடம் தெரிவித்ததால் அவரை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்திருந்தனர். கழிவறைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் அதன் ஜன்னல் ஊடாகத் தப்பிச்சென்றுவிட்டார்.

கழிவறைக்குச் சென்றவரை நீண்ட நேரமாகக் காணவில்லை என்று பார்த்தபோது சம்பவம் தெரியவந்தது. பொலிஸாரின் உதவியுடன் அவர் தேடப்படுகிறார் என்று சிறைச்சாலைத் தரப்புத் தெரிவித்தது. (த-426-106)

## மகிந்தவுக்கு...

தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அதை நிறைவேற்றாது விடுவதைப் போன்று பன்னாட்டுச் சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது விட முடியாது.

இது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கற்றுக்கொண்ட கசப்பான பாடம். 2009 ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட கூட்டு அறிக்கையையும் கைவிட்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கும் அதே வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்றாத காரணத்தினால் தான் ஆட்சி விலக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியை நினைவில் வைத்தாகிலும், இன்றைய அரசு சரியான முறையில் செயற்படவேண்டும். நாட்டின் நன்மைக்காகப் பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

தமது வாக்காளர்களுக்கு இனிமையைக் கொடுக்க வேண்டுமென்பதற்காகச் சில கருத்துக்களைச் சொன்னாலும் கூட நடைமுறையில் சில விடயங்களை நிறைவேற்றாவிடின், பெரிய பின்விளைவுகள் ஏற்படும்.

நீதிமன்றப் பொறிமுறை உருவாக்குவதற்கு முன்னர் பல விடயங்கள் செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. பன்னாட்டு குற்றங்களாக அறிவிக்கப்பட்ட விடயங்கள் இந்த நாட்டில் குற்றங்களாக அறிவிக்கப்படவில்லை. அவைகள் குற்றங்களாக்கப்பட வேண்டும்.

அதன்பின்னர், நீதிமன்றப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். இவை குறித்து அதிகமாக பேச வேண்டிய தேவை இல்லை. எமது நிலைப்பாடு உறுதியானது. சட்டத்திலும் எமது நிலைப்பாடு உறுதியானது என்றார். (த-5-106)

## தலைமறைவாகியிருந்த...

பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனஞ்சயன் மற்றும் பாரத்,விக்ரம் ஆகிய 3 பேருமே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் இணைந்து இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள் வெட்டுச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளதாகப் பொலிஸார் கூறிவந்தனர். எனினும் அவர்கள் தலைமறைவாகிவிட்டனர். பொலிஸாரால் இதுவரை பிடிக்க முடியவில்லை. 3 பேரும் வன்னியில் மறைந்துள்ளனர் என்று கூறப்பட்டபோதும் அவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக்கொள்ளாது தப்பி ஓடி கொட்டாஞ்சேனைப் பகுதியில் வீடொன்றில் மறைந்து வாழ்ந்து வந்தனர். பொலிஸார் தேடுதல் நடத்தி அவர்களைக் கைது செய்தனர்.

அரசடிப் பகுதியில் கடை ஒன்றில் நின்றவர்களை வாளால் வெட்டி, வர்த்தக நிலையத்துக்குப் பெற்றோல் குண்டு வீசி வாள் வெட்டு நடத்தப்பட்டதற்கும் இவர்களுக்கும் தொடர்பு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் தனஞ்சயன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வாள் வெட்டு சம்பவங்களில் தொடர்புபட்டவர் என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததோடு, சமூக விரோத வாள்வெட்டுக் குழு ஒன்றையும் இயக்கி வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-106)

## இலங்கைத்...

தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியா செயற்படக்கூடாது. இலங்கைக்கு ஆதரவாகப் பிரிட்டன், அமெரிக்கா செயற்படுகிறது. ஐ.நா.வில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க கூடாது. ஐ.நா.வில் இலங்கையின் தீர்மானம் நிறைவேறினால் மனித உரிமைகள் சபையில் நீதி குழி தோண்டிப் புதைக்கப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வைகோ தலைமையில் இலங்கைத் தூதரகம் நோக்கி முற்றுகையிடப் புறப்பட்டனர். பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்திக் கைது செய்தனர். (த-5)

## பேருந்து...

தால் இந்த விபத்து இடம்பெற்று உயிரிழப்பு ஏற்பட்டது.

இந்த விபத்து மொரட்டுவ எகொடவுயன பகுதியில் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

குறித்த தரிப்பிடத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த மூன்று பேரே உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் மொரட்டுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விசாரணை நடத்துவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# சங்கடகட

முன்னம் அடிக்கொருதரம் நிமலன் சொல்லுங்கோ... நிமலன் சொல்லுங்கோ... என்று செயலாளர் சின் பிடிச்சாவாம். "அவருக்கென்ன தெரியும். வேர்டிக்கல் பில்டிங்கப் பற்றி! பரமசின் கழுத்திலயிருந்தா அவர் என்ன எல்லாத்திலயும் மாஸ்ரரோ! எனக்கொன்றுமா விளங்கேல்ல!" என்று மனிசன் கோவப்பட்டுது.

"நீ பெரிய இடத்து விசயங்களில என்ன மாட்டிவிட்டு கூத்து பார்க்கப்பாக்கிறாய். எனக்கு சங்கடத்தை ஏற்படுத்தப் பார்க்கிறாய். நான் வாறன்" என்று போட்டு வந்திட்டன்.

# இலங்கையில் உருவாகும் முதலீட்டு சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள்

## பன்னாட்டு முதலீட்டாளர்களிடம் நிதியமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 19
சுபீட்சத்தை நோக்கிச் செல்லும் இலங்கையில் உருவாகும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை நழுவ விட வேண்டாம் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பன்னாட்டு முதலீட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஹொங்கொங்கில் நடைபெறும் இலங்கை முதலீட்டு மாநாட்டில் தலைமையுரையாற்றிய போதே நிதி அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் என்று நிதியமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நீண்ட நாள்களுக்குப் பின்னர் இலங்கை உயிரோட்டமுள்ள பொருளாதார மறு மலர்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், உருவாகும் முதலீட்டு வாய்ப்புக்களைப் பற்றிக்கொள்வது உகந்தது. இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன் வருகின்ற முதலீட்டாளர்களுக்கு ஏற்கனவே பல்வேறு ஊக்கப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அரச மற்றும் தனியார் கூட்டு தொழில் முயற்சியில் இரண்டு தரப்பினருக்கும் நன்மை கிடைக்கக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அத்தோடு, கொழும்பு பன்னாட்டு நிதி நகரம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதால் மேலும் பல முதலீட்டு வாய்ப்புக்கள் உருவாகும் சாத்தியமுள்ளது.
இதேவேளை, இலங்கையின் அரச நிறுவனங்கள் பலவற்றை எதிர்காலத்தில் பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஹயட் ஹோட்டல் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பல, அடுத்த மூன்று மாதங்களுக்குள் பங்குச்சந்தையில் பட்டியலிடப்படவுள்ளன. என்று நிதி அமைச்சர் தெரிவித்தார். இலங்கைக்கு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் அரசு நடத்தும் இரண்டாவது முதலீட்டு மாநாடு கடந்த வியாழக்கிழமை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் ஹொங்கொங்கில் ஆரம்பமானது.
இந்த மாநாட்டில் சுமார் 200 உலகின் முன்னணி நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்து கொண்டனர்- என்றுள்ளது. (ஐ)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.02.2017 சிவபதமடைந்த
அமரர்
**சண்முகம்**
**பிரபாகரன்(பிரபா)**
(அபிஷா கட்டடப் பொருள் உரிமையாளர்)
அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை

முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசன உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

மலைவேம்படி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
**குடும்பத்தினர்.**

---

## கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 | 16 |
| 03 | 03 |
| 1957 | 2017 |



**திருமதி யோகராணி சிவானந்தராஜா**
**(குடும்பநல உத்தியோகத்தர்)**

எமது பணிமனையில் குடும்ப நல உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி யோகராணி சிவானந்தராஜா அவர்கள் 16.03.2017 அன்று அகாலமரணமடைந்தார்.
அன்னாரின் மரணச்செய்தி கேட்டு துயரத்திலுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

சுகாதார வைத்திய அதிகாரியும்,
பணிமனை உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் பாதங்களில் |
|---|---|
| 23 | 24 |
| 10 | 02 |
| 1945 | 2011 |



**அமரர் கமலாதேவி மகாலிங்கம்**
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)
திதி அபரபக்க ஸப்தமி (19.03.2017 ஞாயிற்றுக்கிழமை)
"ஆண்டுகள் ஆறு ஆனதம்மா ஆறவில்லை எம்மனசு"
உங்கள் ஆத்மா சாந்தியடைய அல்லாரையில்
அமர்ந்திருக்கும் அறுகம் புலத்து விநாயகனின் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

'கமலமகால்',
சிற்றம்பலம் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.
கணவர்
குடும்பத்தினர்.

---

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் வேலுப்பிள்ளை**
**கணபதிப்பிள்ளை**

தோற்றம் 21.11.1930 மறைவு 06.04.2010

திதி: அபரபக்க ஸப்தமி (ஞாயிறு)
19.03.2017



ஆண்டுகள் பல கடந்த போதும்
ஆறவில்லை ஐயா எம் துயர்
அமைதியாக இருந்து எம்மை
எல்லாம் ஆனந்தமாக வாழ
வைத்து அழகு பார்க்க வேண்டிய
நேரத்தில் அழைத்தானோ
ஆண்டவன் உங்களை
உங்களின் அன்பும், பண்பும்
பாசமும் எம் உள்ளம் எங்கும் நிறைந்து
நினைவாக வாட்டுதையா எமையெல்லாம்!!!


உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மருதங்கேணி தெற்கு,
தாளையடி.
உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 14 |
| 06 | 03 |
| 1940 | 2017 |



**நவரத்தினம் சத்தியேந்திரன் (Baba)**

கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தினைப் பிறப்பிடமாகவும், பிலியந்தலை மற்றும் இல.08.கெலன்கடுவ பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொறியியலாளர் நவரத்தினம் சத்தியேந்திரன் 14.03.2017 கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நவரத்தினம் - செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநெல்வேலி VS கந்தையா - இலட்சுமியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளமணியின் பாசமிகு கணவரும், கௌரி (சிட்னி), சதீஷ் (இலங்கை), பிரகாஷ் (இலங்கை) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஆஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (ATBC) நிர்வாகப் பணிப்பாளர் ஈசன் (சிட்னி), நதீஷா, அச்சலா ஆகியோரின் பாசமிகு மாமனும், விதூசன் (சிட்னி), கேஷினி (சிட்னி), தவின் (இலங்கை), தரிண்யா (இலங்கை) ஆகியோரின் பாட்டனும், காலஞ்சென்ற பாலேந்திரா, விஜயலக்ஷ்மி (லண்டன்), யோகேந்திரா (லண்டன்), மனோரதி (இலங்கை), ரவீந்திரா (இலங்கை), பக்தியேந்திரா (லண்டன்), இந்திரராஜ் (லண்டன்), குமுதினி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நவமணி, தவேந்திரன், ராஜேந்திரன், புஷ்பமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை 458/N, Gedabuwana Road, Batakeththra, Piliyandala வில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **கௌரி கேதீசன்** (மகள் - ஆஸ்திரேலியா),
மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:
கௌரி - ஆஸ்திரேலியா - 61 451 210 639
சதீஸ் - இலங்கை - 077 280 8271
பிரகாஷ் - இலங்கை - 0777321395
(ஏ.ஆ.ஏ) சி.எஸ். 2164)

---

## மரண அறிவித்தல்



**திருமதி சந்தியோகு தேவசகாயம்பிள்ளை**
**மாகிறேற் (றூபி)**
**தோற்றம்: 11.08.1935 மறைவு: 16.03.2017**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சீந்தில்பந்தல், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியோகு தேவசகாயம்பிள்ளை மாகிறேற் (றூபி) 16.03.2017 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அண்ணாவியார் கலாபூஷணம் சந்தியோகு தேவசகாயம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.
அன்னாரின் இறுதிஆராதனைகள் நாளை (20.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சீந்தில்பந்தல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சீந்திப்பந்தல்,
இளவாலை,
யாழ்ப்பாணம்.
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

---

## மரண அறிவித்தல்



**திருமதி நாகேஸ்வரி அம்பாள் சிறிதரன்**

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கை பிறப்பிடமாகவும் கனடா Bobicoke ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி அம்பாள் சிறிதரன் 17.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிவானந்தசர்மா - யோகாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமோதர ஐயர் மற்றும் கௌரி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிறிதரனின் அன்பு மனைவியும், கணேசசர்மா, கௌரிஅம்பாள், சத்தியபாமா, சுசீலாம்பாள் (ஜெயம்), மங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கௌரி (வதனி), பரமேஸ்வரசர்மா, இராமசாமி சர்மா, காலஞ்சென்ற சண்முகரத்தினசர்மா மற்றும் லோகேஸ்வர சர்மா, இரவீந்திரசர்மா, வாசுதேவன், மஞ்சுளா, சுபத்திராதேவி, ராதா முகுந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரது பூதவுடல் இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை St.jhone Dixe cemetery and crematorium 737 dundas ste Mississauga ON L4Y 2B5 Canada எனும் இடத்தில் இறுதிக்கிரியைக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.30 மணியளவில் (கனடா நேரப்படி) தகனம் செய்யப்படும்.
அன்னாரது சகோதரரது இல்லத்தில் (முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு) நண்பகல் 12.00 மணியளவில் அஞ்சலி வணக்க நிகழ்வு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கணேசசர்மா
முள்ளிவாய்க்கால் மேற்கு முல்லைத்தீவு - 077 480 3926
**த.சிறிதரன்** (கனடா - 0141 6873 8226)

# மீண்டும் வென்றது ஆப்கான்

அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்றது ஆப்கானிஸ்தான் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஸ்ரானிக்ஸை 101 ஓட்டங்கைளயும், ரக்மட் சாஜ 68 ஓட்டங்களையும், செசாட் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் ஸ்ரெய்லிங் 6 இலக்குகளையும், றொக்ரெல் 3 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து அணி 47.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 304 ஓட்டங்களையே பெற்றது. இதனையடுத்து 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான். அதிகபட்சமாக ஸ்ரெய்லிங் 95 ஓட்டங்களையும், ஜொய்ஸ் 55 ஓட்டங்களையும், போட்டர்பீல்ட் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

அயர்லாந்து தோல்விய டைந்தாலும் அந்த அணியின் சார்பாக துடுப்பாட்டத்



தில் 95 ஓட்டங்களைக் குவித்து பந்துவீச்சில் 6 இலக்குகளைக் கைப்பற்றி சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட ஸ்ரெய்லிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



# தென்னாபிரிக்க அணி பதற்றமில்லாத வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது தென்னாபிரிக்க அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 268 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக நிக்கொல்ஸ் 118 ஓட்டங்களையும், ராவல் 36 ஓட்டங்களையும், வற்லிங் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டுமினி 4 இலக்குகளையும், மோர்கல், ரபாடா, மகாராஜ் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 349-9 என்றிருந்தது. பிளன்டர் 36 ஓட்டங்களுடனும், மோர்கல் 31 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மோர்கல். 359 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்க அணி.

பந்துவீச்சில் கிராண்ட்ஹோம், வாக்நெர் இருவரும் தலா 3 இலக்குகளையும், சவுத்தி 2 இலக்குகளையும், சமித் பட்டேல், நீஸ்கம் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

91 ஓட்டங்கள் பின்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 171 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. ஆரம்ப வீரரான ராவல் பெற்ற 80 ஓட்டங்களே அதிகபட்சம். அவரை விட வற்லிங் 29 ஓட்டங்களையும் புறூம் 20 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை விட வேறெவரும் இரட்டை இலக்கத்தை எட்டவில்லை.

பந்துவீச்சில் மகாராஜ் 6 இலக்குகளையும், மோர்கல் 3 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

81 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்கா இரு இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. (ம)

# அயர்லாந்துக்கு மிக நெருக்கடி

ஆப்கானிஸ்தான் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் ஆப்கானிஸ்தானே வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி அயர்லாந்துக்கு உள்ளது. மாறாக இன்றும் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றால் அடுத்த இரு ஆட்டங்களின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அந்த அணியே கிண்ணம் வெல்லும். மொத்தத்தில் வாழ்வா அல்லது சாவா என்ற நிலையில் இன்றைய ஆட்டத்தை எதிர்கொள்கிறது அயர்லாந்து. (ம)

# ஞானபாஸ்கரோதய கிரிக்கெட் அரையிறுதிகள், இறுதி இன்று


யாழ்ப்பாணம், மார்ச் 19



ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகம் நடத்திவந்த ஞானபாஸ்கரோதய வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களும், இறுதியாட்டமும் குறித்த கழக மைதானத்தில் இன்று மின்னொளியில் இடம்பெறவுள்ளன.

முதலாவது அரையிறுதியில் பொற்பதி இந்து அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் வதிரி சிறிமுருகன் அணியை எதிர்த்து ஞானபாஸ்கரோதய இளைஞர் அணி மோதவுள்ளது.

இந்தத் தொடரில் வடக்கு மாகாண அணிகள் மட்டுமல்லாது கிழக்கு மாகாண அணிகளும் விளையாடியிருந்தன. ஒட்டுமொத்தமாக 71 அணிகள் தொடரில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# புஜாராவின் சதத்தால் இந்தியா பதிலடி

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில், புஜாராவின் சதத்தால் வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தியது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 451 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அணித்தலைவர் சிமித் ஆட்டமிழக்காமல் 178 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 104 ஓட்டங்களையும், ரென்சொவ் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜடேயா 5 இலக்குகளையும், யாதவ் 3 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா நேற்று முன்தின இரண்டாம் நாள் முடிவில் 120-1 என்றிருந்தது. விஜய் 42 ஓட்டங்களுடனும், புஜாரா 10 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 193 ஓட்டங்கள் வரை இணைப்பாட்டம் தாக்குப்பிடித்தது.

82 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் விஜய். கோக்லியால் முடிந்தது 6 ஓட்டங்கள். ரகானே, நாயர், அஸ்வின் ஓர் முனையில் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் நிலைத்துநின்று சதம் கடந்தார் புஜாரா. நாள் முடிவில் இந்திய அணி 360-6 என்றுள்ளது. புஜாரா 130 ஓட்டங்களுடனும் சகா 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)


# இலங்கையை வீழ்த்த பங்களாதேஷுக்கு வாய்ப்பு

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற பங்களாதேஷ் அணிக்கு வாய்ப்புக்கள் உள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக சந்திமல் 138 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மிராஸ் மூன்று இலக்குகளையும், ரகுமான், றோய், சகிப் அல் ஹசன் மூவரும் தலா இரு இலக்குகளையும், தயுல் இஸ்லாம் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 467 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 116 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கேரத், குணரத்ன இருவரும் தலா 4 இலக்குகளை வீழ்த்தினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 129 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய இலங்கை நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை 268-8 என்றுள்ளது. இதுவரை இலங்கை அணி 139 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இன்று இலங்கை அணியை விரைவாக ஆட்டமிழக்கச் செய்தால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. (ம)



கார்ப் பந்தய வீரர்

# அஸ்வினும், மனைவியும் கார் விபத்தில் உயிரிழப்பு

தமிழக பிரபல கார்ப்பந்தய வீரர் அஸ்வினும், . அவரது மனைவி நிவேதிதாவும் பயணித்த கார், கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி தீப்பற்றி எரிந்ததில் இருவரும் உடல் கருகிச் சாவடைந்தனர். சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு உணவை முடித்து விட்டுப் புறப்படும்போது இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது. இருவரும் பயணித்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் நின்ற மரத்துடன் மோதியே தீப்பற்றி எரிந்தது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. மோதிய வேகத்தில் எரிபொருள் கொள்கலன் வெடித்ததை அடுத்தே இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது. (ம)






# சென். ஜோன்ஸ் அபார வெற்றி மீண்டும் வீழ்ந்தது யாழ். மத்தி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றி பெற்றது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக பிரியலக்சன் மற்றும் நிக்சன் இருவரும் களமிறங்கினர். அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் பிரியலக்சன். நிக்சனை நிறோசனும், கௌதமனைக் கபில்ராஜும் வீழ்த்தினர். ஜெரோசன், மதுசன் இணை சிறிது தாக்குப்பிடித்தது. 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஜெரோசன். வீழ்த்தினார் ஜதுசன். மதுசனுக்கு முடிவுகட்டினார் அபினேஸ். மத்தியின் பின்வரிசையைத் தகர்த்தார் யதுசன். 39.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. பந்துவீச்சில் யதுசன் 5 இலக்குகளையும், அபினேஸ், கபில்ராஜ் இருவரும் தலா 2 இலக்குகளையும், நிரோசன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கியது சென். ஜோன்ஸ். ஆரம்ப வீரர்களாக சோமஸ்கரனுடன் துலக்சன். இணைப்பாட்டமாக 35 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சோமஸ்கரன். சில இலக்குகளை சென். ஜோன்ஸ் இழந்தாலும் வெற்றி பெறக் கூடிய வகையில் சிறுசிறு இணைப்பாட்டங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. ஆட்டத்தில் பதற்றநிலை இருக்கவில்லை. தனித்து ஆதிக்கம் செலுத்தி 28.3 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்புக்கு வெற்றிபெற்றது சென். ஜோன்ஸ்.

முன்னதாக முடிவடைந்த வடக்கின் போரிலும் சென். ஜோன்ஸ் கல்லூரியே வெற்றிபெற்றது. தற்போது அந்த அணி ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளது.

(ம-23)

# இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குகளில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை றொஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான தனியார் நிறுவனமொன்றுக்குப் பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

☑ கணக்கு லிகிதர்
☑ IT உதவியாளர்

தகுதியுடையவர்கள் சுயவிவரக்கோவையுடன் **நாளை (20.03.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி - பிற்பகல் 2.00 மணிவரை** நேரில் சமுகமளிக்கவும்.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட

**உடனடி வேலைவாய்ப்பு**

- கல்வித் தகைமை G.C.E. O/L, A/L
- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18 - 30
- தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் உண்டு.

**சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்**

DYNAMIC ORG(Pvt) LTD
No.74, Kannathiddy Road, Jaffna ( In Front of Sivankovil)
Tel: 077 664 4442, 021 567 9001



# ட,கோப்பி மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03
max adz

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# பிரெஞ்சு வகுப்புக்கள்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம்
AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)



International Diploma
A1 பரீட்சைக்கட்டணம்
AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/-
யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.

ஆரம்ப சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)


# வெளியேறினார் வோஸ்னியாக்கி

மெரிக்காவில் நடைபெற்றுவரும் பி.என். ரென்னிஸ்தொடரில்பெண்கள்ஒற்றையர் ரிவில்காலிறுதியுடன்வெளியேற்றப்பட்டார் வோஸ்னியாக்கி.

நேற்றுமுன்தினம்நடைபெற்றகாலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாம் இடத்திலுள்ளடென்மார்க்கின்வோஸ்னியாக்கியைஎதிர்த்து26ஆம்இடத்தில்உள்ளபிரான்ஸின் கிறிஸ்ரினா பலப்பரீட்சை நடத்தினார். முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வோஸ்னியாக்கி கைப்பற்றினார். ஆனால் அடுத்த இரு செற்களையும் முறையே 7:6, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றி2:1என்றசெற்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் கிறிஸ்ரினா. இந்த வெற்றியை அடுத்து நாளைவெளியாகவுள்ளதரப்படுத்தலில்கிறிஸ்ரினாமுதல்இருபதுஇடங்களுக்குள்முன்னேறுவார்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. (ம)




**விமல் ரவல்ஸ் சொகுசு பஸ் சேவை**

புதுப்பொலிவுடன் விமல் ரவல்ஸ் வழங்கும் யாழ்ப்பாணம் - கொழும்பு சொய்சாபுரம் - மொறட்டுவ வரை சொகுசு பஸ் சேவை நடைபெறும்.

ஆசனப்பதிவுகளுக்கு கொழும்பு - 077 893 3507
ஆசனப்பதிவுகளுக்கு யாழ்ப்பாணம் - 077 893 3567
077 769 8553

**MATHS/ICT**

Group Classes, Personal Classes
- தமிழ்மொழி மூலம்
- English Medium

தரம் 06 தொடக்கம் 11 வரை
அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
(B.Sc, M.Sc)

T.P: 077 386 7222

**வேலையாள்கள் தேவை**

வேம்படி ரெக்ஸ்ரைல் விற்பனை நிலையத்துக்கு

**1. விற்பனையாளர்கள்**

ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

021 568 3611/ 077 990 1002
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

உள்ளூர் உற்பத்திகளான புளுக்கொடியல், புளுக்கொடியல் மா, ஒடியல்மா, பனாட்டு, பனங்கட்டி, மோர்மிளகாய், வடகம் மொத்தமாகத் தேவை. வேறு உள்ளூர் உற்பத்திகளை எம்மூடாக சந்தைப்படுத்த விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

077 642 2208

Unilever

# LUX

லக்ஸ் நறுமணங்கமழ் நான்காபரணங்கள்

## முதல் சுற்று வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| திருமதி. டி.ஜீ. நிசன்சலா கயோதினி | அநுராதபுரம் |
| திருமதி. பிரியங்கனி டி சில்வா | பொல்கஹவெல |
| திருமதி. மாலனி குணரத்ன | டிக்கோயா |
| திருமதி. கருணா பத்திரன | பொரலஸ்கமுவ |
| திரு. அனுரசிரி விதானகே | வந்துரப |
| திருமதி. ஆர்.எம். சுரங்கனி | வெல்லவாய |



லக்ஸ் பொதி இரண்டினை
"லக்ஸ் நறுமணங்கமழ் நான்காபரணங்கள்"
த.பெ.758, கொழும்பு முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

1323 அழையுங்கள்

Just a little LUX
BETTER PERFUME BLOOM


இப்பத்திரிகை, நியூ உதயன் ப[...]ன (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்